தமிழாக்கம்

நவம்பர் - டிசம்பர் 2022

# The Herald

## of Christ's Kingdom



# நன்றி அறிதல்

- சமாதான பலி மற்றும் ஸ்தோத்திர பலிகள்
- எசேக்கியாவின் ஸ்தோத்திர பலிகள்
- நம் பரலோக தகப்பனுக்கு நன்றி செலுத்துதல்
- சங்கீதம் 145
- எரேமியா 33ல் உள்ள தீர்க்கதரிசனம்
- யெகோவா தேவனுக்கு நான் என்ன கொடுப்பேன்
- தேவன் தம் குமாரனை அனுப்பினார்

நன்றி அறிதல்

# ஆதியிலே



அப்போஸ்தலன் பவுல் கொலோசேயருக்கு எழுதிய நிருபத்தை இவ்வாறு தொடங்கினார், "நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரஞ்செலுத்தி, எப்பொழுதும் உங்களுக்காக வேண்டுதல் செய்கிறோம். (வசனம் 5) முன்னாள் அமெரிக்க அதிபர் ஜான் எப். கென்னடி, "நன்றியை வெளிப்படுத்தும் போது, அவ்வார்த்தைகளை உச்சரிப்பதை காட்டிலும் அவற்றின்படி வாழ்வதே உயர்ந்த பாராட்டு என்பதை நாம் மறந்துவிடக் கூடாது" என்றார். ஹெரால்டின் இந்த இதழ், நம் வாழ்வில் தேவனை போற்றுவதற்கும், நம் நன்றியை சிறப்பாகக் காட்டுவதற்கான வழிகளைக் கண்டுபிடிப்பதற்கும் அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.

"**ஆசரிப்புக் கூடாரத்தில் செலுத்தப்பட்ட சமாதானபலி மற்றும் ஸ்தோத்திரபலி**" என்ற பாடம் லேவியராகமத்திலுள்ள இந்த இரண்டு பலிகளையும் ஆராய்கிறது. நீதிமானாக்கப்படுதலின் பரிசுக்காக நம்முடைய நன்றியுணர்வையும், அந்த நன்றியை காட்ட ஜீவபலியாக நம்மையே அர்ப்பணிப்பதையும், அங்குள்ள பலிகள் குறிக்கின்றன.

"**எசேக்கியாவின் ஸ்தோத்திரபலிகள்**" என்ற பாடம், இஸ்ரயேலின் மிகப் பெரிய சீர்திருத்திய இராஜாவின் முயற்சிகளை விவரிக்கிறது. யெகோவா தேவனின் சரியான வழிபாட்டில் இஸ்ரயேலை மீண்டும் நிலைநாட்ட அவர் எடுத்த முயற்சிகள், ஆயிரமாண்டு இராஜ்யம் துவங்கும் போது அந்த தேசம் விசுவாசத்திற்கு திரும்புவதை தீர்க்கதரிசனமாக சித்தரிக்கிறது.

"**நம் பரலோக தகப்பனுக்கு நன்றி செலுத்துவது**" என்ற பாடம் சோதனைகள் நம் விசுவாசத்தை எவ்வாறு வளர்க்கும் என்பதையும், அந்த துன்பங்கள், எவ்வாறு தேவனுக்கு நன்றி சொல்ல நமக்கு வாய்ப்புகளைத் தருகின்றன என்பதையும் ஆராய்கிறது.

"**சங்கீதம் 145**" என்ற பாடம், படைப்பின் மீது தேவனின் இறையாண்மை பற்றிய தியானம். வீழ்ந்த இயல்பில் இருந்தபோதிலும், மனிதகுலம் ஒரு அதிசயமாகவே உள்ளது, பெரும்பாலும் தேவனின் நற்குணத்தை பிரதிபலிக்கிறது. பல தோல்விகள் இருந்தபோதிலும் தாவீதின் விசுவாசத்தின் முன்மாதிரி, தேவனுடைய குமாரர்களாக நம்முடைய உறவைப் பொக்கிஷமாகப் போற்றுவதற்கு நமக்கு உற்சாகத்தை அளிக்கும்.

"**எரேமியா 33** இதிலுள்ள தீர்க்கதரிசனம்" என்ற பாடம், யூதா இராஜ்ஜியத்தின் இறுதி நாட்களையும், தீர்க்கதரிசியின் மூலம் கொடுக்கப்பட்ட மீட்பின் நம்பிக்கையையும் காட்டுகிறது. இஸ்ரயேல் தேசத்தின் மறுசீரமைப்பு மற்றும் நமது நாளில் யூதர்கள் மீண்டும் தேசத்திற்குத் திரும்புவது, தேவனின் திட்டம் பூமியிலுள்ள அனைத்து குடும்பங்களின் நலனுக்காக செயல்படுகிறது என்பதற்கான நன்றியுணர்வுக்கான காரணமாகும்.

"**கர்த்தருக்கு என்னத்தைச் செலுத்துவேன்**" என்ற பாடம், 116 வது சங்கீதத்தை ஆராய்கிறது, இது விடுதலை மற்றும் புதுப்பித்தலுக்கு பாராட்டு மற்றும் நன்றியின் பாடல். தேவன் நமக்கு அளிக்கும் ஆசீர்வாதங்களுக்கான நமது பொறுப்பை நினைவூட்டும் இந்த சங்கீதத்தின் மூன்று வசனங்களுடன் நமது காலை தீர்மானம் தொடங்குகிறது.

"**தேவன் தம் குமாரனை அனுப்பினார்**" என்ற பாடம், சோதனைகளை நோக்கிய நமது மனப்பான்மை, தேவனின் பிள்ளைகளாக நாம் எவ்வாறு முன்னேறுகிறோம் என்பதில் வித்தியாசத்தை ஏற்படுத்தும் வழிகளைப் ஆராய்கிறது. தேவன் நம்மை வழிநடத்தும் எல்லா வழிகளையும் நாம் பார்க்கும்போது, நம்மீது அவர் வைத்திருக்கும் அக்கறைக்கான சரியான நன்றியை நாம் சிறப்பாக பிரதிபலிக்க முடியும்.

**நவம்பர் / டிசம்பர் 2022, தொகுப்பு 194, எண் 6**


| | |
|---|---|
| **ஆசரிப்புக் கூடாரத்தில் செலுத்தப்பட்ட** | 2 |
| **சமாதானபலி மற்றும் ஸ்தோத்திரபலி**<br>அர்ப்பணிக்கப்பட்ட நன்றிகள் | 6 |
| **எசேக்கியாவின் ஸ்தோத்திரபலிகள்**<br>ஒரு நல்ல இராஜாவின் பலிகள் | 8 |
| **நம் பரலோகத் தகப்பனுக்கு நன்றி செலுத்துதல்**<br>நன்றியில் உள்ள நேர்மை | 14 |
| **சங்கீதம் - 145**<br>போற்றுதலுக்கான ஒரு சங்கீதம் | 19 |
| **எரேமியா 33ல் உள்ள தீர்க்கதரிசனம்**<br>சிறை வாசத்தில் நன்றிகள் | 25 |
| **யெகோவா தேவனுக்கு நான் என்ன கொடுப்பேன்?**<br>நன்றி செலுத்தும் ஒரு பாடல் | 30 |
| **தேவன் தம் குமாரனை அனுப்பினார்**<br>நன்றியுணர்வுக்கான காரணம் | 36 |
| **இன்றைய தீர்க்கதரிசனம்**<br>உலகளாவிய நிதி நெருக்கடி | 39 |

அர்ப்பணிக்கப்பட்ட நன்றிகள்

# ஆசரிப்புக் கூடாரத்தில் செலுத்தப்படும் சமாதான பலிகள் மற்றும் ஸ்தோத்திரபலிகள்



*David Stein*

"கர்த்தருக்குச் செலுத்துகிற சமாதானபலிகளின் பிரமாணம் என்னவென்றால்.."
(லேவியராகமம் *7:11*)

எபிரெய வேதவசனங்களில் உள்ள நிழல்களும், நிஜங்களும் புது சிருஷ்டிக்கு யெகோவா தேவன் கொடுத்த மகிழ்ச்சியான பரிசுகளில் ஒன்றாகும். இவைகள் தேவனுடைய திட்டம் மற்றும் அதில் நம்முடைய பங்கையும் பற்றிய அற்புதமான விவரங்களை வெளிச்சத்திற்குக் கொண்டுவருகிறது. இந்த நுண்ணிய குறிப்புகளின் செழுமை, புதிய ஏற்பாட்டில் தெளிவாகக் கூறப்பட்ட சத்தியக் கோட்பாடுகளை மேம்படுத்துகிறது.

இந்த விஷயங்களை வகைகளாக ஆராய்வதற்கான நமது வேத அடிப்படை இரண்டு முக்கிய நூல்களில் கொடுக்கப்பட்டுள்ளது. "தேவவசனத்தினால் உண்டாகும் பொறுமையினாலும் ஆறுதலினாலும் நாம் நம்பிக்கையுள்ளவர்களாகும்படிக்கு, முன்பு எழுதியிருக்கிறவைகளெல்லாம் நமக்குப் போதனையாக எழுதியிருக்கிறது." (ரோமர் 15:4). "இவைகளெல்லாம் திருஷ்டாந்தங்களாக அவர்களுக்குச் சம்பவித்தது, உலகத்தின் முடிவு காலத்திலுள்ள நமக்கு எச்சரிப்புண்டாக்கும் படி எழுதப்பட்டும் இருக்கிறது." (1கொரிந்தியர் 10:11)

சமாதான பலிகள் என்பது பண்டைய இஸ்ரயேலின் விருப்பமுள்ள தனிநபர்கள் தேவனுடனான சமாதானத்திற்கான தங்கள் நன்றிகளையும், அவருடைய ஆசீர்வாதங்களுக்காக நன்றியுணர்வையும் காட்டுவதற்காகச் செய்யப்படும் மனமுகந்த பலிகளாகும். இந்த சமாதானம் மற்றும் நன்றி பலிகள், அந்த நபரின் சொந்த பாவங்களுடன் தொடர்பில்லாதவைகள். இந்த சமாதான பலிகள் எப்படிச் செய்யப்பட வேண்டும் என்று தேவன் குறிப்பிடுகிறார். பலி செலுத்துபவர்கள், இந்த வெளிப்படையான அறிவுறுத்தல்களை வற்புறுத்தலினால் அல்ல, மாறாக நன்றியுணர்வின் இருதயத்தில் தேவனுடைய சித்தத்தைச் செய்கிறோம் என்பதைத் தெரிந்துகொள்வதன் மூலம் திருப்தி அடைந்தனர்.




A thankful, humble spirit is always dear.

ஆல்பிரட் எடர்ஷெய்ம் மூன்று விதமான சமாதான பலிகள் இருப்பதை கவனித்தார். தனிப்பட்ட "சமாதான பலிகள்" மூன்று விதமானவை (லேவியராகமம் 7:11)" ஸ்தோத்திரபலிகள் " (லேவியராகமம் 7:12), "பலி பொருத்தனை" மற்றும் கண்டிப்பான "உற்சாகபலிகள் " (லேவியராகமம் 7:16)முதலாவது பலி, பெறப்பட்ட இரக்கத்தின் பொது அங்கீகாரமாகவும், கடைசி பலி, அன்பான இருதயங்களின் மனப்பூர்வமான உற்சாகபலிகளாகும். இதே வார்த்தைகளை யாத்திராகமம் 25:2, 35:29 லும் காணப்படுகிறது.

## ஸ்தோத்திரபலிகள்

"கர்த்தருக்குச் செலுத்துகிற சமாதான பலிகளின் பிரமாணம் என்னவென்றால், அதை ஸ்தோத்திரத்துக்காகச் செலுத்துவானானால், அவன் ஸ்தோத்திர பலியோடுங்கூட எண்ணெயிலே பிசைந்த புளிப்பில்லா அதிரசங்களையும், எண்ணெய் பூசப்பட்ட புளிப்பில்லா அடைகளையும் எண்ணெயிலே பிசைந்து வறுக்கப்பட்ட மெல்லிய மாவினால் செய்த அதிரசங்களையும் படைக்கக் கடவன்.அவைகளைப் படைக்கிறதும் அல்லாமல்,




புளித்தமாவினால் செய்த அப்பத்தையும் தன்னுடைய சமாதான பலியாகிய ஸ்தோத்திர பலியோடுகூடப் படைக்க வேண்டும்." (லேவியராகமம் 7:11,12.13)

எந்த மிருகம் சமாதான பலிகளாகப் பயன்படுத்தப் படலாம் என்று லேவயாராகமம் 3ல் கூறினாலும், 7ம் அதிகாரத்தில் என்ன செலுத்தப்பட வேண்டும் என்பதை வலியுறுத் துகிறது. இங்கு நான்கு உருப்படிகள் குறிப்பிடப்பட்டுள்ளது:-

(1) எண்ணெயிலே பிசைந்த புளிப்பில்லா அதிரசங்கள்
(2) எண்ணெய் பூசப்பட்ட புளிப்பில்லா அடைகள்
(3) எண்ணெயிலே பிசைந்து வறுக்கப்பட்ட மெல்லிய மாவினால் செய்த அதிரசங்கள்
(4) புளித்தமாவினால் செய்த அப்பம்

விசுவாசமுள்ள ஜனங்கள் நன்றி செலுத்துவதைப் பற்றிய பாடங்கள் இதில் உள்ளது. இந்த ஆலோசனைக்கான காரணங்கள்

(a) இது ஒரு நிழல் என்று வேதாகமம் கூறவில்லை என்றாலும் நாம் சில பாடங்களை இதில் இருந்து எடுக்கிறோம்.

(b) ஸ்தோத்திர பலிகள் புது சிருஷ்டிகளோடு மட்டும் அல்ல, சுவிசேஷ யுகம் மற்றும் இராஜ்யத்திற்கு தொடர்புடையது.

(c) இது நன்றியறிதலைப் பற்றியது, ஆனால் நன்றியுடன் இருப்பது என்ன என்பதையும், எப்படி நன்றியுடன் இருக்கவேண்டும் என்பதையும் இந்த சித்திரம் விளக்குவதை விட அதிக விவரம் இங்கு அறிவுறுத்தப்படுகிறது.

## புளிப்பில்லாத அப்பங்கள்

முதலில் எண்ணெயிலே பிசைந்த புளிப்பில்லா அதிரசங்கள் உள்ளது. புளிப்பு பொதுவாக பாவத்தின் அடையாளமாக இருப்பதால், புளிப்பில்லா அதிரசங்கள் பாவம் இல்லாததை குறிக்கிறது. அதாவது நீதியான நிலைமை. மேலும் எண்ணெயிலே பிசைந்த மா என்பது, பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்படுதலின் மூலம் நம்மை சுத்திகரிப்பதற்கு வழிநடத்துவதை காட்டுகிறது.

நீதிமானாக்கப்படுவதற்கான பரிசுக்காகவும், கிறிஸ்துவின் மூலம் நமது பரலோகத் தகப்பனிடமிருந்து பெற்ற பரிசுக்காகவும், மற்றும் நம்முடைய சுத்திகரிப்புக்காக பரிசுத்த ஆவியின் வேலைக்காகவும் நாம் நன்றியுள்ளவர்களாக இருக்க வேண்டும். "பிதாவாகிய தேவனுடைய முன்னறிவின்படியே, ஆவியானவரின் பரிசுத்தமாக்குதலினாலே, கீழ்ப்படிதலுக்கும் இயேசு கிறிஸ்துவினுடைய இரத்தந்தெளிக்கப்படுதலுக்கும் தெரிந்துகொள்ளப்பட்ட பரதேசிகளுக்கு எழுதுகிறதாவது - கிருபையும் சமாதானமும் உங்களுக்குப் பெருகக் கடவது." (1பேதுரு1:2)

## புளிப்பில்லாத அடைகள்

இரண்டாவது, எண்ணெய் பூசப்பட்ட புளிப்பில்லா அடைகள். அடை என்பது அப்பத்தின் ஒரு மெல்லிய துண்டு. ஓரளவுக்கு ஒளி கடந்து செல்லும் அளவுக்கு இந்த அடைக்கு எண்ணெய் பூசவேண்டும். இதன் வழியாக ஒளி கடந்து சென்றாலும், காட்சிகள் தெளிவற்றதாக இருக்கும். நம்முடைய நீதியான நம்பிக்கைகள் ஆவிக்குரியவைகள் என்பதை அறிவுறுத்துகிறது. தேவனுடைய வாக்குத்தத்தங்களின் மங்கலான எதிர்கால பார்வையை நாம் பெற்றிருக்கிறோம். "இப்பொழுது கண்ணாடியிலே நிழலாட்டமாய்ப் பார்க்கிறோம். அப்பொழுது நான் அறியப்பட்டிருக்கிறபடியே அறிந்துகொள்ளுவேன்." (1கொரிந்தியர் 13:12)

விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்கள், அவை உருவாக்கும் நம்பிக்கைகள் மற்றும் அவற்றிலிருந்து நாம் பெறும் வலிமை மற்றும் தைரியம் ஆகியவற்றிற்கு நன்றியுடன் இருப்பதே நமக்கான பாடம். "அவர் நமது இரட்சகராகிய இயேசுகிறிஸ்து மூலமாய், அந்தப் பரிசுத்தாவியை நம்மேல் சம்பூரணமாய்ப் பொழிந்தருளினார்." (தீத்து 3:7)

### மெல்லிய மாவு

மூன்றாவது வறுக்கப்பட்ட மெல்லிய மாவு. இந்த அதிரசங்கள் மெல்லிய மாவு ஊறவைக்கப்பட்டு, வறுக்கப்பட்டு, எண்ணெயில் பொரிக்கப்படவேண்டும். (இங்கு "ஊறவைக்கப்பட்ட" என்று மொழிபெயர்க்கப்பட்ட ஹீப்ரு வார்த்தை ஸ்ட்ராங்கின் 7246, ரபக், ரா-பாக், இது அப்பத்தை எண்ணெயில் ஊறவைக்க ஒரு பழமையான வேர் - சுடப்பட்டு அல்லது வறுத்தது .) நம்முடைய பொரி பறக்கும் அனுபவங்களில், அபரிமிதமான பரிசுத்த ஆவியின் உதவியை இது அடையாளப்படுத்துகிறது. இந்த சோதனைகள் நமது வளர்ச்சிக்காகவும், நித்திய ஆசீர்வாதத்திற்காகவும் உள்ளன என்பதை அறிந்து நாம் நன்றி செலுத்தவேண்டும். "அழிந்துபோகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும், அதைப் பார்க்கிலும் அதிக விலையேறப்பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசு கிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்குப் புகழ்ச்சியும் கனமும் மகிமையுமுண்டாகக் காணப்படும்"(1பேதுரு1:7)

### புளிப்புள்ள அப்பம்

கடைசியாக "புளிப்புள்ள அப்பம்". நியாயப் பிரமாணத்தில் புளிப்புள்ள அப்பம் செலுத்தப்படவேண்டிய இரண்டு பலிகளில் இதுவும் ஒன்று. மற்றொன்று லேவியாராகமம் 23:17 ல் அசைவாட்டும் காணிக்கை யாயிருக்கிற இரண்டு அப்பங்களை .... கர்த்தருக்கென்று முதற்பலனாகக் கொண்டுவரவேண்டும். புளிப்பு பொதுவாக பாவத்தை சித்தரிக்கிறது. மேலும் நாம் பாவத்திற்கு நன்றி செலுத்துவதில்லை. எவ்வாறாயினும், நம்முடைய உள்ளார்ந்த பாவத்தை நாம் ஒப்புக்கொள்கிறோம், மேலும் பாவம் இருந்தபோதிலும் நாம் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம். எல்லாவற்றிற்கும் நன்றி செலுத்துவதற்கு நம்முடைய பாவங்கள் நம்மை சோர்வடையச் செய்ய அனுமதிக்க மாட்டோம். நம்முடைய பலவீனம் தேவனுடைய கிருபையால் மறைக்கப்பட்டதற்கு நாம் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம்.

"அதற்கு அவர் - என் கிருபை உனக்குப் போதும், பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும் என்றார்.




ஆகையால் கிறிஸ்துவின் வல்லமை என்மேல் தங்கும்படி என் பலவீனங்களைக் குறித்து நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மைபாராட்டுவேன்." (2கொரிந்தியர் 12:9) "இந்த மகத்துவமுள்ள வல்லமை எங்களால் உண்டாயிராமல், தேவனால் உண்டாயிருக்கிதென்று விளங்கும்படி இந்தப் பொக்கிஷத்தை மண்பாண்டங்களில் பெற்றிருக்கிறோம்."

### எப்படி வழங்கப்படுகிறது

பலிகளின் உள்ளடக்கத்தின் விவரக் குறிப்புகளைத் தொடர்ந்து, அதை எவ்வாறு வழங்க வேண்டும் என்பதற்கான வழிமுறைகள் உள்ளது. "அந்தப் படைப்பு முழுவதிலும் வகைக்கு ஒவ்வொன்றை எடுத்துக் கர்த்தருக்கு ஏறெடுத்துப் படைக்கும் பலியாகச் செலுத்துவானாக. அது சமாதான பலியின் இரத்தத்தைத் தெளித்த ஆசாரியனுடையதாகும். சமாதான பலியாகிய ஸ்தோத்திரபலியின் மாம்சமானது செலுத்தப்பட்ட அன்றையதினமே புசிக்கப்பட வேண்டும். அதில் ஒன்றும் விடியற்காலமட்டும் வைக்கப்படலாகாது." (லேவியராகமம் 7:14, 15)

பலி செலுத்தக்கூடியவர், ஆசாரியர்களின் முன்னிலையில் மிருகத்தை கொல்லவேண்டும், பின்னர் பலிபீடத்தைச் சுற்றி இரத்தம் தெளிக்கப்படவேண்டும். (லேவியராகமம் 3:1,2) காணிக்கை செலுத்தினவர் அதை பலியிட்ட "நாளில்" அதை புசிப்பார். மறுநாள் அதில் எதுவும் மிச்சமிருக்கக்கூடாது. (லேவியராகமம் பார்க்கவும். 22:30)

பலி செலுத்துபவர் மிருகத்தை கொல்வது, இந்த ஸ்தோத்திர பலியை அவர் விருப்பத்துடன் செலுத்துவதை

காட்டுகிறது. ஒரே நாளில் பலிசெலுத்தப்பட்ட மிருகத்தை உட்கொள்வது, அந்த தனி நபர் அதை நிறைவேற்றுகிறார் என்பதை நிரூபிக்கிறது. இந்தப் பாடங்கள் நம்முடைய அர்ப்பணிக்கப்பட்ட பலி நிறைவைக் காண்கிறது. இந்த ஜீவியத்தின் இறுதி வரை நாம் விருப்பத்துடன் "தினமும் மரிப்பதன் மூலம்" பலியை உண்ணக்கூடியவர்களாக இருக்கிறோம். "நான் அநுதினமும் சாகிறேன், அதை நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவினால் உங்களைக் குறித்து நான் பாராட்டுகிற மேன்மையைக் கொண்டு சத்தியமாய்ச் சொல்லுகிறேன். "(1கொரிந்தியர் 15:31)

மிருகத்தின் மார்பகம் மற்றும் வலது தோள்பட்டை ஆசாரியனுக்கு கொடுக்கப்பட்டது. "அப்பொழுது ஆசாரியன் அந்தக் கொழுப்பைப் பலிபீடத்தின்மேல் தகனிக்கவேண்டும், மார்க்கண்டமோ ஆரோனையும் அவன் குமாரரையும் சேரும். உங்கள் சமாதான பலிகளின் வலது முன்னந்தொடையை ஏறெடுத்துப் படைக்கும் பலியாகப் படைக்கும்படி ஆசாரியனிடத்தில் கொடுப்பீர்களாக. ஆரோனுடைய குமாரரில், சமாதான பலியின் இரத்தத்தையும் கொழுப்பையும் செலுத்துகிறவனுக்கு வலது முன்னந்தொடை பங்காகச் சேரும். இஸ்ரயேல் புத்திரரின் சமாதானபலிகளில் அசைவாட்டும் மார்க்கண்டத்தையும் ஏறெடுத்துப் படைக்கும் முன்னந்தொடையையும் நான் அவர்கள் கையில் வாங்கி, அவைகளை ஆசாரியனாகிய ஆரோனுக்கும் அவன் குமாரருக்கும் இஸ்ரயேல் புத்திரருக்குள் நடக்கும் நித்திய கட்டளையாகக் கொடுத்தேன் என்று சொல் என்றார். கர்த்தருக்கு ஆசாரிய ஊழியம் செய்யும்படி ஆரோனும் அவன் குமாரரும் நியமிக்கப்பட்ட நாளிலே, இது அபிஷேகம் பண்ணப்பட்ட அவர்களுக்குக் கர்த்தருடைய தகனபலிகளில் கிடைக்கும்படி உண்டான கட்டளை." (லேவியராகமம் 7:31-35) இந்த இரண்டு பலிகளுக்கும் செயல்கள் தேவைப்பட்டது. அசைவாட்டும் பலி ஒரு பக்கத்திலிருந்து அடுத்தப்பக்கம் வரை அசைவாட்டப்பட வேண்டும், அதே சமயம் சமாதான பலிகளின் வலது முன்னந்தொடையை ஏறெடுத்துப் படைக்கும் பலியாகப் படைக்கும்போது (heave offering)மேலும் கீழும் அசைவாட்ட வேண்டியதாக இருந்தது. இவைகளை ஒன்றாக இணைத்தால் சிலுவையின் அடையாளம் காணப்படுகிறது. (பாவநிவாரண பலி நாளில் காளையின் இரத்தம் கிருபாசனத்தின் மேல் தெளிக்கப்பட்டது. லேவி16:14, இங்கும் ஒரு சிலுவையின் வடிவத்தில் இரத்தம் தெளிக்கப்படுவதை காணலாம்.) பாஸ்டர் ரசலின் ஆலோசனையின்படி, இந்த அர்ப்பணிப்பு சிறிது நேரத்திற்குரியதல்ல, மாறாக இது ஒரு தொடர் செயல் என்பதை அசைவாட்டும் பலிகள் இங்கு அடையாளப் படுத்துகிறது. அதாவது நம்முடைய ஊழியம் முடியும் வரை இது தொடரும் என்பதை குறிப்பிடுகிறது. (இவைகள் ஆசாரியர்களின் கைகளில் எடுக்கப்பட்டு, அசைவாட்டப் பட்டது - கர்த்தருக்கு முன்பாக அசைக்கப்பட்டது - இது ஒரு நிமிஷமோ, ஒரு நாளோ அல்லது ஒரு வருடமோ, எவ்வளவு நேரம் என்று குறிப்பிடப்படவில்லை. அதேபோல நம்முடைய ஓட்டம் நிறைவு பெறும் அளவு நம்முடைய அர்ப்பணிக்கப்பட்ட பலி தொடர்ந்து அன்போடும், வல்லமையோடும் செலுத்தப்படவேண்டும் என்பதை இது குறிக்கிறது.)

மார்பகமும் வலது தோள்பட்டையும் ஆசாரியர்களுக்கு ஒதுக்கப்பட்டது. ஒரு வேளை மார்பகம், இருதயத்தின் ஆழ்ந்த செயல் நோக்கங்களை அடையாளப்படுத்தலாம். தேவனிடம் நாம் அர்ப்பணித்தவைகளை நிறைவேற்றுவதில் தீவிரமான வலிமையைக் இந்த வலது தோள்பட்டை குறிக்கிறது.

## பொருத்தனை மற்றும் உற்சாகபலி

"அவன் செலுத்தும் பலி பொருத்தனையாவது உற்சாகபலியாயாவது இருக்குமானால், அது செலுத்தப்படும் நாளிலும், அதில் மீதியாயிருக்கிறது. மறுநாளிலும் புசிக்கப்படலாம் பலியின் மாம்சத்தில் மீதியாயிருக்கிறது மூன்றாம் நாளில் அக்கினியிலே சுட்டெரிக்கப் படக்கடவது. சமாதான பலியின் மாம்சத்தில் மீதியானது மூன்றாம் நாளில் புசிக்கப்படுமானால், அது அங்கிகரிக்கப்படாது, அதைச் செலுத்தினவனுக்கு அது பலிக்காது, அது அருவருப்பாயிருக்கும், அதைப் புசிக்கிறவன் தன் அக்கிரமத்தைச் சுமப்பான்." (லேவியாராகமம் 7:16-18)

பொருத்தனை பலியோ அல்லது உற்சாகபலியோ, இவைகளுக்கும் ஸ்தோத்திர பலிகளுக்கும் ஒரு சுவாரசஸ்யமான வித்தியாசம் உள்ளது. ஸ்தோத்திர பலிகள் செலுத்தப்பட்ட அதே நாளிலே புசிக்கவேண்டும். ஆனால் மற்ற பலிகளின் மீதியை மறுநாள் புசிக்கலாம். இன்னும் மீதம் இருந்தால், மூன்றாம் நாள் அதை நெருப்பால் சுட்டெரிக்க வேண்டும். பொருத்தனை பலிக்கு இது ஏன் வித்தியாசப்படுகிறது?

பூர்வ காலங்களில் இஸ்ரயேலரின் இந்த பொருத்தனை பலி தேவனைப் பிரியப்படுத்தவும், ஆராதிக்கவும் ஒரு தீவிர விருப்பத்தைக் காட்டுகிறது. ஒருவேளை இங்குள்ள சிந்தனை முழு சுவிசேஷ யுகத்தின் முழு சபையைப் பற்றியதாக இருக்கலாம். சுவிசேஷ யுகத்தின் 2,000 வருடங்களின் சபை வகுப்பினர் தங்கள் பொருத்தனை பலியை தொடர்ந்து "புசிக்கிறார்கள்." ஆனால் இது "மூன்றாம் நாளில்" பரம அழைப்பு முடிவடைகிறது. இதுவே கருத்தாக இருந்தால், மற்ற புத்தகங்களிலும் இணக்கமாக காணப்படுகிறது. "இரண்டு நாளுக்குப் பின்பு அவர் நம்மை உயிர்ப்பிப்பர், மூன்றாம் நாளில் நம்மை எழுப்புவார். அப்பொழுது நாம் அவருடைய சமுகத்தில் பிழைத்திருப்பேன். (ஓசியா 6:2)" அடுத்து, "அதற்கு அவர் - நான் இன்றைக்கும் நாளைக்கும் பிசாசுகளைத் துரத்தி, வியாதியுள்ளவர்களைச் சொஸ்தமாக்கி, மூன்றாம் நாளில் நிறைவடைவேன்." (லூக்கா13:32)

## பரிசுத்தத்தைப் பராமரித்தல் மற்றும்




## அசுத்தத்தைத் தவிர்ப்பது

"தீட்டான எந்த வஸ்துவிலாவது அந்த மாம்சம் பட்டதானால் அது புசிக்கப்படாமல் அக்கினியிலே சுட்டெரிக்கப்படக்கடவது, மற்ற மாம்சத்தையோ சுத்தமாயிருக்கிறவனெவனும் புசிக்கலாம். ஒருவன் தீட்டுள்ளவனாயிருக்கையில் கர்த்தருடைய சமாதான பலியின் மாம்சத்தைப் புசித்தால், அவன் தன் ஜனத்தாரில் இராதபடிக்கு அறுப்புண்டுபோவான். மனுஷருடைய தீட்டையாவது, தீட்டான மிருகத்தையாவது, அருவருக்கப்படத்தக்க தீட்டான மற்ற எந்த வஸ்துவையாவது ஒருவன் தொட்டிருந்து, கர்த்தருடைய சமாதான பலியின் மாம்சத்திலே புசித்தால், அவன் தன் ஜனங்களில் இராதபடிக்கு அறுப்புண்டுபோவான் என்றார்."(லேவியராகமம் 7:19-21)

ஸ்தோத்திர பலியின் இந்த சட்டத்தின் கடைசி பகுதி மிதமான ஒன்றாகும். ஒருவர் யெகோவா தேவனுக்கு செலுத்தும் பலிகளில் முழுவதும் பரிசுத்தத்தைக் காத்துக்கொள்வதில் கவனமாக இருக்கவேண்டும். நிழலான பலியில் ஒருவர் அசுத்தமான எதையும் தொட்டபின் பலியை புசித்தால், அவன் தன் ஜனத்தின் நடுவில் இராதபடிக்கு "அறுப்புண்டுபோவான்." (யாத்திராகமம் 31:14) நிஜத்திலும் தீவிரமான அறிவுரைகளை சகோதரர் ரசல் கூறுகிறார்:

"எந்தவொரு மனிதனும் முழுமையான சமாதானம் மற்றும் நல்லிணக்க நிலைக்கு வருவார் என்பதை இது காட்டுகிறது. (அனைவரும் செய்ய வேண்டும், இல்லையெனில் இரண்டாம் மரணத்தில் துண்டிக்கப்பட வேண்டும்)" அவர் முழுமையாக புசிக்கவேண்டும் அல்லது தேவனுக்கு முன்பாக செய்த உடன்படிக்கையை முழுமையாக நிறைவேற்ற வேண்டும். இவ்வாறு பூரணப்படுத்தப்பட்ட பிறகு, அவர் மீண்டும் வேண்டுமென்றே பாவத்தினால் தீட்டுப்பட்டால், அசுத்தமானதைத் தொட்டால், அவர் மரிக்கவேண்டும் (இரண்டாம் மரணம்)"(லேவியராகமம் 7:19-21)( வெளிப்படுத்தல் 20:9, 13-15 ஒப்பிட்டுப்பார்க்கவும்) (*Tabernacle Shadows*, page 98).

தேவன் அசுத்தமானதை ஏற்றுக்கொள்ள மாட்டார். நம்முடைய பலிகள் பரிசுத்தமாக இருக்கவேண்டும். இதனுடன் தொடர்புடைய சமாதான பலிகளும் மற்ற எல்லா பலிகளையும் போலவே, "கறை இல்லாமல்" இருக்கவேண்டும் என்பதை நாம் கவனிக்கவேண்டும். "ஒருவன் சமாதான பலியைப் படைக்கவேண்டுமென்று, மாட்டு மந்தையில் எடுத்துச் செலுத்துவானாகில் அது காளையானாலும் சரி, பசுவானாலும் சரி, பழுதற்றிருப்பதை கர்த்தருடைய சந்நிதியில் செலுத்தக் கடவன். அவன் கர்த்தருக்குச் சமாதான பலியைப் படைக்க வேண்டுமென்று ஆட்டு மந்தையிலிருந்து எடுத்துச் செலுத்துவானாகில், அது ஆண் ஆனாலும் சரி, பெண் ஆனாலும் சரி பழுதற்றிருப்பதைச் செலுத்துவானாக". (லேவியராகமம் 3:1, 6, லேவி 22:21, 22 காண்க)

இந்த இரண்டு குறிப்புகளும் நம்முடைய நீதிமானாக்கப்படுதலின் அவசியத்தையும், நம்முடைய அர்ப்பணிக்கப்பட்ட வாழ்வில் பரிசுத்தத்தின் தேவையையும் தெளிவுப்படுத்துகின்றது. நிழலில் பார்த்தபடி, நாம் ஒவ்வொரு நாளும் நாம் செலுத்தக்கூடிய ஸ்தோத்திர பலியை பரிசுத்தமாக பராமரித்து கொள்ளவேண்டும். ஆர்வத்துடன் திரும்பத் திரும்பத் தோன்றும் உரையுடன் இதை முடிக்கிறோம். "கர்த்தருக்கு ஸ்தோத்திரபலியைச் செலுத்துவீர்களானால் மனப்பூர்வமாய் அதைச் செலுத்துவீர்களாக" (லேவியராகமம் 22:29)

"பலி" என்ற வார்த்தை, மூன்று முறை திரும்பத் திரும்ப நம்முடைய அர்ப்பணிப்பின் வாக்குறுதியை ஒரு தீவிர நினைப்பூட்டலாக எடுத்துக் கொள்ளலாம். நாம் ஒவ்வொருவரும் இந்த பொருத்தனையையும், அதனுடன் இணைந்த பலியையும் மனப்பூர்வமாக செலுத்துகிறோம். நாம் ஒப்புக்கொடுத்து, பொருத்தனை செய்து கொண்டபின், நாம் வாக்களித்ததைக் தேவனுக்கு கொடுக்க வேண்டும். "நீங்கள் செய்த பொருத்தனையை செலுத்த வேண்டும்." பின்வாங்குவது ஏற்றுக்கொள்ள முடியாதது. "நீ தேவனுக்கு ஒரு பொருத்தனை பண்ணிக்கொண்டால், அதைச் செலுத்தத் தாமதியாதே, அவர் மூடரில் பிரியப்படுகிறதில்லை, நீ நேர்ந்து கொண்டதைச் செய், நீ நேர்ந்துகொண்டதைச் செய்யாமற்போவதைப் பார்க்கிலும், நேர்ந்துகொள்ளாதிருப்பதே நலம்." (பிரசங்கி 5:4, 5)"விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான், பின்வாங்கிப்போவானானால் அவன் மேல் என் ஆத்துமா பிரியமாயிராது என்கிறார்."(எபிரெயர் 10:38) மோசேயின் நியாயப்பிரமாணத்திலுள்ள சமாதானம் மற்றும் ஸ்தோத்திர பலிகளின் படிப்பினைகள் நம்முடைய சொந்த பலியின் அனுபவங்களைப் பற்றி அழகான விவரங்களை வழங்குகின்றது. தம்மை சிறப்பாகச் சேவிப்பதற்கான வழிகளைத் தேடும் தனிநபர்கள், அவருடைய ஆசீர்வாதங்களை மனப்பூர்வமாகப் பெறுதலுக்கு அன்புடன் தம்மிடம் வருவதில் யெகோவா தேவன் மிகவும் மகிழ்ச்சிடைகிறார். கிறிஸ்தவ ஆசாரியர்களாக ஏற்றுக்கொள்ளப்படுவது ஒரு பெரிய பாக்கியம். தேவனுடைய புத்திரர்களாகிய நாம் அனைவரும் அவருக்கு நம்முடைய ஆராதனையையும் ஊழியத்தையும் தொடர்ந்து மகிழ்ச்சியுடன் செய்வோம். "நீ போய் உன் ஆகாரத்தைச் சந்தோஷத்துடன் புசித்து, உன் திராட்சரசத்தை மனமகிழ்ச்சியுடன் குடி, தேவன் உன் கிரியைகளை அங்கீகாரம் பண்ணியிருக்கிறார். உன் வஸ்திரங்கள் எப்பொழுதும் வெள்ளையாயும் உன் தலைக்கு எண்ணெய் குறையாததாயும் இருப்பதாக." (பிரசங்கி 9:7, 8)

### ஒரு நல்ல இராஜாவின் பலிகள்


# எசேக்கியாவின் ஸ்தோத்திர பலிகள்



**David Rice**

"அதன் பின்பு எசேக்கியா - இப்போதும் நீங்கள் கர்த்தருக்கென்று உங்களைப் பரிசுத்தம் பண்ணினீர்கள், ஆகையால் கிட்டவந்து, கர்த்தருடைய ஆலயத்திற்குத் தகன பலிகளையும் ஸ்தோத்திரபலிகளையும் கொண்டுவாருங்கள் என்றான், அப்பொழுது சபையார் தகன பலிகளையும் ஸ்தோத்திர பலிகளையும், இஷ்டமுள்ளவர்களெல்லாம் சர்வாங்க தகன பலிகளையும் கொண்டுவந்தார்கள்." (2நாளாகமம் *29:31*)

எசேக்கியாவின் ஆட்சி இஸ்ரயேலின் வரலாற்றில் ஒரு திருப்புமுனையாக இருந்தது. அவருடைய தந்தையாகிய ஆகாஸ் இஸ்ரயேலை தவறாக வழிநடத்தினான். "சீரியா இராஜாக்களின் தெய்வங்கள் அவர்களுக்கு துணைசெய்கிறபடியினால், அவர்கள் எனக்கும் துணைசெய்ய அவர்களுக்குப் பலியிடுவேன் என்று சொல்லி, தன்னை முறிய அடித்த தமஸ்குவின் தெய்வங்களுக்கு அவன் பலியிட்டான். ஆனாலும் அது அவனும் இஸ்ரயேல் அனைத்தும் நாசமாகிறதற்கு ஏதுவாயிற்று. "(2நாளாகமம் 28:23) எசேக்கியா இஸ்ரயேலை மீண்டும் யெகோவா தேவனின் வணக்கத்திற்கு மாற்றினார். "அவன் தன் இராஜ்ய பாரத்தின் முதலாம் வருஷம் முதலாம் மாதத்தில் கர்த்தருடைய ஆலயத்தின் கதவுகளைத் திறந்து, அவைகளைப் பழுதுபார்த்து.."(2நாளாகமம் 29:3) பின்னர் அவர் லேவியரே, கேளுங்கள், நீங்கள் இப்போது உங்களைப் பரிசுத்தம் பண்ணிக்கொண்டு,உங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தருடைய ஆலயத்தைப் பரிசுத்தம்பண்ணி அசுத்தமானதைப் பரிசுத்த ஸ்தலத்திலிருந்து வெளியே கொண்டுபோங்கள்" என்று அவர் துரிதப்படுத்தினார். (வசனம்5)



Hezekiah was a godly king.

எசேக்கியா ஒரு நல்ல இராஜா. கிறிஸ்துவின் வழியில் தவறுகள் இல்லாமல் நடப்பவரைப் போல அவரும் தவறுகள் எதுவும் செய்யவில்லை. எசேக்கியா தனிமையாக ஆட்சியைத் தொடங்கியபோது அவருக்கு வயது 25, அந்த ஆட்சி 28 ஆண்டுகள் தொடர்ந்தது, ஆனால் அதற்கு முன்பு அவர் தனது தந்தை ஆகாஸுடன் முக்கிய அதிகாரியாக பணியாற்றினார். இந்த அனுபவம் இஸ்ரயேலைப் பாதிக்கும் சூழ்நிலைகளைக் கருத்தில் கொள்ள எசேக்கியாவுக்கு நேரம் கிடைத்திருக்கும். அவர் தனித்து ஆட்சியாளரானபோது, அவர் மாற்றத்தை ஏற்படுத்தத் தயாராக இருந்தார்.

எசேக்கியாவின் சீர்திருத்தங்கள் தீவிரமாகவும் முழுமையாகவும் இருந்தன. அவர் ஆலயத்தை சுத்திகரித்தார், விக்கிரகங்களை அகற்றினார், அவருடைய ஆவிக்குரிய தலைவர்கள் சுத்திகரிக்கப் பட்டனர், மேலும் யெகோவா தேவனுக்கு சரியான பலிகள் மறுசீரமைக்கப்பட்ட பலிபீடத்தின் மேல் மீண்டும் செலுத்தப்பட்டது.

வட தேசத்து 10 கோத்திர இராஜ்யம் முன்பு அசீரியாவால் கைப்பற்றப்பட்ட சமயத்தில் எசேக்கியா ஆட்சி செய்தார். எனவே அவர் "அதன்பின்பு இஸ்ரயேலின் தேவனாகிய கர்த்தருக்குப் பஸ்காவை ஆசரிக்கும்படி எருசலேமில் இருக்கிற கர்த்தருடைய ஆலயத்திற்கு



Announcing a Passover to Israel

வாருங்கள் என்று எசேக்கியா இஸ்ரயேல் யூதா எங்கும் ஆட்களை அனுப்பினதும் அன்றி, எப்பிராயீம் மனாசே கோத்திரங்களுக்கும் நிருபங்களை எழுதியனுப்பினான். பஸ்காவை இரண்டாம் மாதத்தில் ஆசரிக்கும்படி இராஜாவும் அவனுடைய பிரபுக்களும் எருசலேமிலுள்ள சபையார் யாவரும் யோசனை பண்ணியிருந்தார்கள். (2நாளாகமம் 30:1,2)

## நிழலில் ஆயிரமாண்டு இராஜியம்

இது இஸ்ரயேலின் தேவனை வணங்குவதில் குறிப்பிடத்தக்க மாற்றமாக இருந்தது. இந்த அனுபவம் ஆயிரமாண்டு இராஜ்யத்தின் தொடக்கத்தில் இஸ்ரயேலின் விசுவாசத்தை சீரமைப்பதற்கான ஒரு தீர்க்கதரிசனமான சித்திரமாக இருக்கிறது. பஸ்கா ஆட்டுக்குட்டி இயேசுவைக் அடையாளப்படுத்துகிறது. எதிரிகளின் கடைசி தாக்குதலில், இஸ்ரயேலை தேவன் விடுவித்த பிறகு, இஸ்ரயேல் ஆண்டவரை மேசியாவாகவும் அவர்களின் மீட்கும் பொருளாகவும் அங்கீகரிக்கும். எசேக்கியாவின் காலத்தில் அசீரியா, மத்திய கிழக்கின் அதிகாரமாக இருந்தது. தேவன் இஸ்ரயேலை விடுவிப்பதைப் பற்றியும், இந்த அச்சுறுத்தலைப் பற்றியும், அதிலிருந்து இஸ்ரயேலை தேவன் இரட்சிப்பதைப் பற்றியும் மீகா 5:5 ன் தீர்க்கதரிசனம் பேசுகிறது. "இவரே சமாதானம் காரணர், அசீரியன் நம்முடைய தேசத்திலே வரும்போதும், நம்முடைய அரண்மனைகளை மிதிக்கும்போதும், ஏழு மேய்ப்பரையும் மனுஷரில் எட்டு அதிபதிகளையும் அவனுக்கு விரோதமாக நிறுத்துவேன்." மேய்யப்பன் என்ற சொல் செமிடிக் மொழிகளில் "இராஜா" என்பதற்கான சொல்லாக பயன்படுத்தப்பட்டது. ஒரு மேய்ப்பன் தன் மந்தையை ஆள்வது போல, இராஜா தன் ஜனங்களை ஆளுகிறார். ஏழு இராஜாக்கள், சுவிசேஷ யுகத்தின் ஏழு காலங்களில், மகிமை அடைந்த சபை வகுப்பாரை குறிப்பிடுகிறார்கள். எட்டு பிரபுகள் பழைய ஏற்பாட்டு முற்பிதாக்களைக் குறிப்பிடுகிறார்கள். இவர்கள் சுவிசேஷ யுகத்தின் ஏழு பகுதிகளை தொடர்ந்து வரும் எட்டாவது பகுதியாக காணப்படுகிறார்கள். ஆகவே இவர்களை எட்டு அதிபதிகள் என்று குறிப்பிடப்படுகிறார்கள். கிறிஸ்துவோடு சபை, மேலிருந்து கட்டளைப் பிறப்பிக்க, பூமியில் இருக்கும் முற்பிதாக்கள் அவைகளை இஸ்ரயேலுக்கு விளக்குவார்கள். வருங்காலத்தில் இதே அனுபவத்தைப் பற்றி மற்றொரு தீர்க்கதரிசனத்தில் விவரிக்கப்பட்டுள்ளது. "அந்நாளிலே எருசலேமுக்கு விரோதமாய் வருகிற எல்லா ஜாதிகளையும் அழிக்கப் பார்ப்பேன். நான் தாவீது குடும்பத்தாரின் மேலும் எருசலேம் குடிகளின் மேலும் கிருபையின் ஆவியையும் விண்ணப்பங்களின் ஆவியையும் ஊற்றுவேன். அப்பொழுது அவர்கள் தாங்கள் குத்தின என்னை நோக்கிப்பார்த்து, ஒருவன்தன் ஒரே பேறானவனுக்காகப் புலம்புகிறதுபோல எனக்காகப் புலம்பி, ஒருவன் தன் தலைச்சன் பிள்ளைக்காகத் துக்கிக்கிறதுபோல எனக்காக மனங்கசந்து துக்கிப்பார்கள்." (சகரியா 12:9, 10)

இஸ்ரயேலின் இந்த தீர்க்கமான மற்றும் தீவிரமான மனந்திரும்புதலுக்குப் பிறகு, அவர்கள் தாழ்மையுடன் நன்றியுள்ளவர்களாக இருப்பார்கள். பின்னர் அவர்கள் மனுக்குலத்தின் மத்தியில் ஒரு பயனுள்ள மற்றும் புத்துணர்ச்சியூட்டும் தாக்கத்தை ஏற்படுத்த ஆயத்தமாக இருப்பார்கள். "யாக்கோபிலே மீதியானவர்கள் கர்த்தராலே வருகிற பனியைப்போலவும், மனுஷனுக்குக் காத்திராமலும் மனுபுத்திரருக்குத் தாமதியாமலும், பூண்டுகள்மேல் வருகிற மழைகளைப் போலவும் அநேக ஜனங்களின் நடுவிலே இருப்பார்கள்." (மீகா 5:7)

## இரண்டாம் பஸ்கா

எசேக்கியாவின் சீர்திருத்தங்களின் ஒரு பகுதியாக, "இரண்டாம் மாதத்தில் பஸ்காவை" அனுசரிக்கும்படி, எல்லா இஸ்ரயேலர்களையும், "அவருடைய பிரபுக்களையும்" வலியுறுத்தினார். "இரண்டாம் மாதத்தில் ஆசரிக்கும்படி, இராஜாவும் அவனுடைய பிரபுக்களும் எருசலேமிலுள்ள சபையார் யாவரும் யோசனை பண்ணியிருந்தார்கள்." (2நாளாகமம் 30:2) பிரபுக்களாகிய முற்பிதாக்கள், பஸ்காவை அனுசரிப்பதன் மூலம் இயேசுவுக்கு நன்றிகளையும் கனத்தை செலுத்தும்படி இஸ்ரயேலரை வழிநடத்துவார்கள். இருப்பினும், இது "இரண்டாம் மாதத்தில்" அனுசரிக்கப்பட்டதை நினைவில் கொள்ளவேண்டும். இரண்டாம் மாத பஸ்கா பல நூற்றாண்டுகளுக்கு முன்பே எண்ணாகமம் 9:6-11இல் அறிமுகப்படுத்தப்பட்டது. முதல் மாதத்தில், "அசுத்தமாக இருந்தவர்கள்" அல்லது "தொலைவில் பயணம் சென்றவர்கள்" பஸ்காவை அனுசரிக்கும்படி இது ஒரு

இரண்டாவது வாய்ப்பாக கொடுக்கப்பட்டது. (எண்ணாகமம் 9:6,10) மனுக்குலம் சாபத்தால் அசுத்தமாகி, தேவனிடமிருந்து விலகிச் செல்லும் பயணத்தில், முதல் வாய்ப்பான சுவிசேஷ யுகத்தின் போது கிறிஸ்துவினால் வந்த நன்மைகளை கவனிக்காதவர்கள், இரண்டாவது வாய்ப்பான ஆயிர வருட யுகத்தில் அதைக் கடைப்பிடிப்பார்கள்.

எசேக்கியாவின் சரித்திரத்தில், இரண்டாம் மாதத்தில் பஸ்காவைக் கடைப்பிடிப்பது, இரட்சிப்பின் இரண்டாம் யுகத்தின் போது, இயேசுவைத் தங்கள் பஸ்காவாகவும், மீட்பராகவும் கருதும் முழு இஸ்ரயேலுக்கு இது மிகவும் பொருத்தமானது. இரட்சிப்பின் இரண்டு யுகங்களாகிய சுவிசேஷ யுகம் மற்றும் ஆயிரமாண்டு யுகம், சில நேரங்களில் 7 மற்றும் 14 என்ற எண்கள் மூலம் வேறுபடுகிறது. முன்னர் குறிப்பிட்டபடி, சுவிசேஷ யுக சபை இந்த யுகத்தின் ஏழு நிலைகளில் உருவாக்கப்படுகிறது. இந்த எண் புளிப்பில்லாத அப்பப்பண்டிகையிலும் பிரதிபலிக்கிறது, அந்த ஏழு நாட்களும் சுவிசேஷ யுகத்தின் அடையாளமாகும். அந்த பண்டிகையின் போது, தினமும் 7 ஆட்டுக்குட்டிகள் பலியிடப்பட வேண்டும். (எண்ணாகமம் 28:18-24) அதேநேரத்தில், ஆயிரமாண்டு யுகத்தை சித்தரிக்கும் கூடார பண்டிகையின் போது, தினமும் 14 ஆட்டுக்குட்டிகள் பலியிடப்பட வேண்டும். (எண்ணாகமம் 29:12-32, சகரியா14:16) {ஆசிரியர் - *Sheba* (ஏழு) என்பது உடன்படிக்கைக்கான சொல். அதனால் ஏழு என்ற எண் சில நேரங்களில், தேவன் தான் செய்த உடன்படிக்கைக்கு கட்டுப்பட்டிருக்கும், ஆபிரகாமின் உடன்படிக்கையின் நிறைவேற்றத்துடன் இணைக்கப்பட்டுள்ளது}

7இன் இரட்டிப்பான எண் 14, மற்ற இடங்களிலும், சொல்லபோனால், இரட்சிப்பின் இரண்டாவது யுகத்தையும் குறிப்பிடுகிறது. எசேக்கியேலின் புகழ்பெற்ற ஆலயத் தரிசனம் கடைசி ஒன்பது அதிகாரத்தில் புத்தகத்தின் முடிவில் காணப்படுகிறது. நகரம் அழிக்கப்பட்ட பதினான்காம் ஆண்டில் இந்த புத்தகம் வழங்கப்பட்டது .(எசேக்கியேல் 40:1) ரோமாவுக்கு பவுலின் பயணத்தில்,14 ம் நாள் ஒரு கரை கிட்டிவருவதாகத் தோன்றியதைப் பற்றி பேசப்படுகிறது. (அப் 27:27) அந்த இராஜ்யத்தில் ஆட்சி செய்யும் இராஜாவாகிய இயேசு, மத்தேயு1:17 வில் பட்டியலிடப்படுள்ளபடி 14 தலைமுறைகளின் மூன்று தொகுப்புகளால் அடையாளம் காணப்படுகிறார். எசேக்கியாவின் 14வது ஆண்டில் சனகெரிப்பிடமிருந்து தேவன் இஸ்ரயேலை விடுவித்தது, தேவனுடைய இராஜ்யத்தின் தொடக்கத்தில் தேவன் இஸ்ரயேலை விடுவிப்பதற்காக காட்சியாகும்.

எனவே, எசேக்கியவரின் சீர்திருத்தங்களில், மற்றவர்களை கூட்டி சேர்த்து, பரிசுத்தப் படுத்துவதற்காக லேவியர்களிடையே 14 பேர் பெயரிடப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. "அப்பொழுது கோகாத்த புத்திரரில்....மாகாத்தும்... யோயேல்... மேராரி... அசரியா.... யோவாகு.... ஏதேன் ....சிம்ரி ....ஏயெல் ....சகரியா ....மத்தனியா..... எகியேல்.... சிமேயி.... சேமாயா.... ஊசியேல்..." (2நாளா 29:12-14)

இந்த சீர்திருத்தங்கள் தொடங்கப்பட்ட நேரம், "முதலாம் வருடம்... முதலாம் மாதம் " என்பது எசேக்கியாவின் சீர்திருத்தங்கள், தேவனுடைய இராஜ்யத்தை ஸ்தாபிப்பதைப் பற்றி பேசுகிறது என்பதற்கான மற்றொரு அறிகுறியாகும். (2நாளாகமம் 29:3) மற்ற இடங்களில் ஒரு புதிய காலகட்டத்தின் துவக்கம், தேவனுடைய திட்டத்தில் ஒரு புதிய யுகத்தின் தொடக்கத்தைக் குறிக்கிறது. உதாரணமாக, கூடாரத்திற்கான பொருட்களை வடிவமைத்த பிறகு, மோசே வேலையைப் பார்த்துவிட்டு"கர்த்தர் கற்பித்தபடியே அதைச் செய்திருந்தார்கள். " (யாத்தராகமம் 39:43) என்று முடித்தார். ஆனால் "முதல் மாதத்தின் முதலாம் நாள்" வரை ஆசரிப்புக் கூடாரத்தை அமைப்பதற்கு முன்பு காத்திருக்கும்படி தேவன் அவர்களுக்கு அறிவுறுத்தினார். (யாத்திராகமம் 40:2,17) இந்த விஷயத்தில் ஒரு புதிய ஆண்டின் தொடக்கமானது சுவிசேஷ யுகத்தின் தொடக்கத்தை அடையாளப்படுத்து வதற்கு பொருத்தமான நேராக இருந்தது.

ஆதியாகமம் 8:13 ல், நோவாவின் நாளின் அழிவுகரமான வெள்ளப் பெருக்குகள் கடைசியாக பூமியிலிருந்து மறைந்துவிட்டது. இது மனுக்குலத்தின் மீதான பாவம் மற்றும் மரணத்தின் சாபத்தின் முடிவைக் குறிக்கிறது. அதன் தேதி "அறுநூற்றொரு வயதாகும்

வருஷத்தில், முதல் மாதம் முதல் தேதியிலே, பூமியின்மேல் இருந்த ஜலம் வற்றிப்போயிற்று..." (ஆதியாகமம் 8:13) இங்கு புதிய ஆண்டின் தொடக்கமானது, இரட்சிப்பின் இரண்டாம் யுகமான இராஜ்யத்தின் தொடக்கத்தைக் குறிக்கிறது. எசேக்கியாவின் ஆட்சியின் முதலாம் மாதமும், முதாலம் வருடத்தில் செய்த சீர்திருத்தங்களும் அதையே குறிக்கின்றன.

## எசேக்கியாவின் பலிகள்

"அவர்கள் இராஜாவாகிய எசேக்கியாவினிடத்தில் போய் - நாங்கள் கர்த்தரின் ஆலயத்தையும், சர்வாங்க தகனபலிபீடத்தையும், அதனுடைய சகல பணிமுட்டுகளையும், சமுகத்தப்பங்களின் மேஜையையும் அதின் சகல பணிமுட்டுகளையும் சுத்திகரித்து." (2 நாளாகமம் 29:18)பலி செலுத்தும் வேலை முடிந்தவுடன், பலிபீடத்தின் மீது காணிக்கைகளை மீண்டும் செலுத்தப்பட்டது.

"அதன்பின்பு எசேக்கியா - இப்போதும் நீங்கள் கர்த்தருக்கென்று உங்களைப் பரிசுத்தம் பண்ணினீர்கள், ஆகையால் கிட்டவந்து, கர்த்தருடைய ஆலயத்திற்குத் தகனபலிகளையும் ஸ்தோத்திரபலிகளையும் கொண்டுவாருங்கள் என்றான், அப்பொழுது சபையார் தகனபலிகளையும் ஸ்தோத்திர பலிகளையும், இஷ்டமுள்ளவர்களெல்லாம் சர்வாங்க தகனபலிகளையும் கொண்டுவந்தார்கள்." (2நாளாகமம் 29:31)

குறிப்பாக ஸ்தோத்திர பலிகள் இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது. 2000 வருடங்களாக அவர்கள் மகிமையின் இராஜாவை நிராகரித்ததை உணர்ந்து, இயேசு கிறிஸ்து, அபிஷேகம் செய்யப்பட்ட தங்கள் மேசியா என்று இஸ்ரயேல் இயேசுவை தேசிய அளவில் அங்கீகரித்த பிறகு, அவர்கள் துக்கப்படுவார்கள். மேலும் இஸ்ரயேலை மீட்டெடுத்து, முற்பிதாக்களை எழுப்பி, அவர்களுக்கு சகலத்தையும் அறிவித்து, அவர்களை வழிநடத்தின தேவனுடைய கிருபைக்காகவும், கிறிஸ்துவினுடைய இரக்கத்திற்காகவும் அவர்கள் நன்றியுடன் இருப்பார்கள். தேவனுக்கு ஸ்தோத்திர பலிகளை செலுத்துவதை தவிர பக்திக்கான சிறந்த அடையாளம் என்னவாக இருக்க முடியும்.




பெரும்பாலான பலிகள் ஸ்தோத்திர பலிகளை உள்ளடக்கியதாகத் தெரிகிறது. 32ம் வசனத்தில், "சபையார் கொண்டுவந்த சர்வாங்கதகன பலிகளின் தொகை எழுபது (70) காளைகளும், நூறு (100) ஆட்டுக் கடாக்களும், இருநூறு (200) ஆட்டுக்குட்டிகளுமே, இவைகளெல்லாம் கர்த்தருக்குச் சர்வாங்க தகனமாயின." இது அதிக எண்ணிக்கையிலான பலிகள் போல் தோன்றினாலும், 33ம் வசனத்தில், "அறுநூறு காளைகளும் மூவாயிரம் ஆடுகளும் பிரதிஷ்டையாக்கப் பட்டது." என்று வாசிக்கிறோம். அதாவது தகன பலிகளின் எண்ணிக்கை பல மடங்கு தாண்டியது. {600 எருதுகளும், 3000 ஆடுகளும் ஸ்தோத்திர பலிகளாக ஏறெடுக்கப்படுகிறது. இது தகன பலிகளில் இருந்து வேறுப்படுகிறது. 31ம் வசனம் "தகன பலிகள் மற்றும் ஸ்தோத்திர பலிகளைப்" பற்றி பேசுகிறது. பின்னர் அது சர்வாங்க தகன பலிகளாகக் கணக்கிடப்படுகிறது. அவை பலிபீடத்தின் மீது முழுவதுமாக தகனிக்கப்பட்ட பலிகளாக இருந்தன - 70 காளைகள், 100 ஆட்டுகடாக்கள் மற்றும் 200 ஆட்டுக்குட்டிகள்.33 வது வசனம், "பிரதிஷ்டையாக்கப்பட்ட" 600 காளைகள் மற்றும் 3000 ஆடுகள் என விவரிக்கிறது. அவை தகன பலிகளிலிருந்து வேறுபடுகிறது.}

## மூன்று வகையான பலிகள்

நியாயப்பிரமாணத்தில் மூன்று அடிப்படை வகையான பலிகள் இருந்தன - சர்வாங்க தகன பலிகள், பாவ நிவாரண பலிகள் மற்றும் சமாதான பலிகள். கூடுதலாக, குற்றநிவாரண பலிகளும் இருந்தது, இது ஒரு வகையான பாவநிவாரண பலியாகும். மேலும் ஸ்தோத்திர பலிகள், ஒரு வகையான சமாதான பலிகளாக இருந்தது.

இவை அனைத்தும் வேலியாராகமம் 1முதல் 7வரையிலான அதிகாரங்களில் தெளிவாக விவரிக்கப்பட்டுள்ளது. (மிருகங்களின் பலிகளோடு போஜன பலிகளும், பான பலிகளும் இருந்தன)

தகன பலி ஒரு அடிப்படையான பலியாக இருந்தது. அது பரிகாரத்தை (ஒப்புரவாக்குதலை) அளித்தது. (லேவியராகமம் 1:4) தகன பலிகள் நேரடியாக பலிபீடத்தின் "கட்டைகளின் மேல்" வைக்கப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. (லேவியாராகமம் 1:8) இதற்கு மாறாக, சமாதான பலிகள், பலிபீடத்தின் மேல் இருக்கும் தகனபலியின் மீது வைக்கப்பட்டன. (லேவியாராமம் 3:5) எனவே தேவன் சமாதான பலியை ஏற்றுக்கொள்வது, முந்தைய தகன பலியையே சார்ந்துள்ளது.

நேரடியாக மரத்தின் மேல் வைக்கப்படும் (பலிபீடம்) ஒரு தகன பலி, பாவநிவாரணத்தை வழங்கும். இது அனைவருடைய பாவத்தை நிவர்த்திச் செய்த இயேசுவின் பலியை நமக்கு நினைப்பூட்டுகிறது. இயேசு நேரடியாக சிலுவை மரத்தில் மரித்தார். அந்த பலி இஸ்ரயேலர்கள் மற்றும் புறஜாதிகள் இருவருக்கும் உலகளாவிய மீட்பை நிறைவேற்றியது. நியாயப்பிரமாணத்தின் கீழுள்ள யூதர்களுக்கு, இயேசுவின் சிலுவை மரணம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. "மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன் என்ற எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து நமக்காகச் சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக்கொண்டார்." (கலாத்தியர் 3:13) {600 எருதுகளும் 3000 ஆடுகளும் தகன பலிகளிலிருந்து வேறுபடுத்தப்பட்ட, ஸ்தோத்திர பலிகள் என்று தெரிகிறது. 31ம் வசனம், "தகன பலிகளைப் பற்றியும் ஸ்தோத்திர பலிகளையும் பற்றி பேசுகிறது. பின்னர் அது சர்வாங்க தகன பலிகளைக் கணக்கிடுகிறது, அவை பலிபீடத்தின் மேல் முழுவதுமாக தகனிக்கப்படும் பலிகளாகும் - 70 காளைகள், 100 ஆட்டுக்கடாக்கள் மற்றும் 200 ஆட்டுக்குட்டிகள். 33ம் வசனம், "பிரதிஷ்டையாக்கப்பட்டவைகள்" 600 காளைகள் மற்றும் 3000 ஆடுகள் என விவரிக்கிறது. அவைகள் தகன பலிகளிலிருந்து வேறுபடுகின்றது. }

மனுக்குலத்தில் பெரும்பான்மையாக இருக்கும் புறஜாதிகள் உட்பட அனைத்து மனக்குலமும், இயேசு "அவருடைய சொந்த சரீரத்தில் நம் பாவங்களை மரத்தின் மீது சுமந்தார்." (1பேதுரு2:24) {இவ்வாறு யுகங்களின் வரைபடத்தில் இரண்டு சிலுவைகள் காணப்படுகிறது. ஒன்று ஆதாமின் மட்டத்தில், மற்றொன்று இஸ்ரயேல் மட்டத்தில்}

இயேசுவின் ஈடுபலி ஒவ்வொரு வருடமும் பஸ்கா ஆட்டுக்குட்டியில் குறிப்பிடப்படுகிறது. மேலும் வருடம் முழுவதும், நித்தமும் செலுத்தப்படும் அந்தி சந்தி தகன பலிகளின் இரண்டு ஆட்டுக்குட்டிகளும் அவருடைய ஈடுபலியை அடையாளப்படுத்துகிறது. (எண்ணாகமம் 28:3,4) இதை நிறைவேற்றும் விதமாக, இயேசு காலையில் சிலுவையில் அறையப்பட்டு மதியம் மரித்தார். 6000 வருடங்கள் வாழந்த உலகத்தின் பாவத்தைப் பரிகரிக்கும்படியாக, இயேசு ஆறு மணிநேரம் சிலுவையில் பாடுப்பட்டார். மந்தையில் இருக்கும் ஆடு அல்லது செம்மறி ஆடுகளை தகன பலியாக செலுத்தலாம் ஆனால் அது எப்போதும் ஆணாக இருக்கவேண்டும். (லேவியாராகமம் 1:3) {ஒருவேளை அதிகமாக சந்ததிகளை பெறுக்க முடியும் என்பதற்காக கால்நடைகளில் ஆண் விலங்குகள் அதிக மதிப்புமிக்கதாகக் கருதப்படுலாம். }

பாவத்தை பரிகரிக்கும் பாவ நிவாரண பலிகளை காட்டிலும் தகன பலிகளிலிருந்து சற்றே வேறுபடுகிறது. (லேவியாராகமம் 4:20) பாவநிவாரண பலிகளில் ஒரு முக்கிய நோக்கம் என்னவெனில், தனிப்பட்ட நபருக்கோ அல்லது மொத்தத்தில் ஒரு தேசத்திற்கோ, நடந்து கொண்டிருக்கும் பாவங்களை அடையாளம் கண்டு கொண்டு, அதையும் பரிகரிக்கவேண்டும். நாம் அனைவரும் தந்தையாகிய ஆதாமிடமிருந்து தண்டிக்கப்பட்ட மரிக்கும் வாழ்க்கையை பெறுகிறோம். இந்த ஈடுபலியின் புண்ணியம் இந்த சாபத்தில் இருந்து நம்மை மீட்கிறது. எவ்வாறாயினும், நாம் விழுந்துபோன நிலையின் காரணமாக பாவம் செய்வதற்கான நாட்டம் நம்மிடம் காணப்படுகிறதினால், வழிதவறும் தேர்வுகள் மற்றும் நடத்தைகளுக்காக நாமும் பொறுப்பேற்க வேண்டும். இந்த குற்றங்களை கணக்கிடுவதும் பாவநிவாரண பலிகள்.

ஆதாமின் பாவத்திற்காக இயேசு கல்வாரி சிலுவையில் மரித்தார். இருப்பினும், இயேசு யோர்தானில்

ஞானஸ்நானம் எடுத்ததிலிருந்து நமக்காக பாவநிவாரண பலியானார். தன்னை பலியாக ஒப்புக்கொடுப்பதன் ஒரு பகுதியாக, அவர் தனது ஊழியத்தின் போது பல்வேறு வழிகளில் துன்பங்களை அனுபவித்தார். அவர் எதிரிகளால் அநியாயமாக துன்புறுத்தப்பட்டார், மேலும் அவர் சீஷர்களுக்கு ஊழியம் செய்வதிலும், கற்பித்தலிலும், குணப்படுத்துவதிலும் மற்றும் அறிவுறுத்துவதிலும் அவர் அதிகமாக துன்பப்பட்டார். அவர் பட்டப்பாடுகளின் அனுபவத்தினால் கீழ்ப்படிதலின் ஆழத்தை கற்றுகொண்டார். (எபிரெயர் 5:8) அவர் மகிமையினாலும், கனத்தினாலும், அழியாமையினாலும், மெல்கிசேதேக்கின் முறைமையின் படி நம்முடைய இராஜாவும், என்றென்றும் ஆசாரியருமாக முடிசூட்டப்பட்டார். (எபிரெயர் 7:3) இயேசு தாம் உயர்த்தப்பட்ட ஆசாரிய பதவியில் இருந்து இப்போது அவரை பின்பற்றுபவர்களாகிய நமக்கு உதவி செய்கிறார். நம்மை பாவத்திலிருந்து இரட்சிக்கிறார். ஆதாமின் சாபத்தினால் வந்த பாவத்தை மட்டும் அல்ல, சில சமயங்களில் நாம் செய்யும் மோசமான காரியங்கள் மற்றும் தவறான தேர்வுகளிலிருந்தும் நம்மை தூய்மைப்படுத்துகிறார். (3. இவ்வாறு வரை படத்தில் உள்ள இரண்டு சிலுவைகள், ஒன்று ஆதாமின் இடத்தில், மற்றொன்று இஸ்ரயேலின் இடத்தில் உள்ளது. ) (4.ஆண் கால்நடைகள் சந்ததிகளைப் பெறுக்குவதற்காக, அதிக மதிப்புமிக்கதாகக் கருதப்படலாம்.)

அதுபோல கிறிஸ்துவுடனும் இருக்கவேண்டும் என்று நம்புகிறோம். ஏனெனில், "இவர்கள் தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் முன்பாக, ஆசாரியராயிருந்து, அவரோடேகூட ஆயிரம் வருஷம் அரசாளுவார்கள்."இவர்கள் மனுக்குலத்திற்கு உதவுவதற்காக துன்பப்படும் விஷயங்களால் கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டு, "பரிசுத்தமான பெரும் பாதையில் நடப்பவர்களின்" மோசமான தேர்வுகளிலிருந்து மீட்பார்கள். (வெளிப்படுத்தல் 20:6, ஏசாயா35:8) இந்த மீட்பின் தகுதி கிறிஸ்துவிடமிருந்து வருகிறது. பரிசுத்தவான்களின் சுத்திகரிக்கப்பட்ட திறனும் இராஜ்யத்தில் மனுக்குலத்திற்கு உதவியாக இருக்கும். இந்த திறன் தனிப்பட்ட சோதனை மற்றும் அனுபவத்தின் மூலம் அடையப்படுகிறது.

எசேக்கியாவின் "சர்வாங்கள தகன பலிகளை" (2நாளாகமம் 29:33) உள்ளடக்கிய பல ஸ்தோத்திர பலிகள், சமாதான பலிகள் என்று அழைக்கப்படுவதின் ஒரு பகுதியாகும். சமாதான பலிகள் சமாதானத்தை கொண்டுவருவதால் சமாதான பலிகள் என்று பெயரிடப்படாமல், அவை ஏற்கனவே தேவனுடன் சமாதானத்தை அடைந்துவிட்டதை முன்னறிவிக்கிறது. எசேக்கியாவின் பலிகளில், முதலில் சர்வாங்க தகன பலிகள் இருந்ததைக் கவனிக்கவேண்டும். இது வருங்காலத்தில் இஸ்ரயேல் தங்கள் மேசியாவாகிய இயேசு தங்களுக்கு கொடுத்த பாவநிவாரண பலியை போற்றி பாராட்டுவதைக் குறிக்கிறது. ஏதேனிலிருந்து வந்த சாபத்தை நீக்குவதற்காக, தேவன் குறித்த நேரத்தில் கிறிஸ்துவின் இரத்தம் மனுக்குலத்திற்காக பயன்படுத்தப்படும் போது, மனந்திரும்புகிற அனைவரும் தேவனுடன் சமாதானமாக இருக்கலாம். இந்த சமாதானம் நன்றிகள், பாராட்டுகள் மற்றும் பக்திக்கு வழிநடத்தும்.

தற்போதைய சுவிசேஷ யுகத்தைப் பொறுத்தவரை, இதே வரிசையை ரோமர் 4:25 முதல் 5:2 வரை பவுல் குறிப்பிடுகிறார். இயேசு "நம்முடைய குற்றங்களுக்காக கையளிக்கப்பட்டார், நம்மை நீதிமானாக்குவதற்காக அவர் எழுப்பப்பட்டார்." (5:1) விசுவாசத்தினாலே நீதிமான்களாகக்கப்பட்ட நாம், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மூலமாய் தேவனோடு சமாதானம் பெற்றிருக்கிறோம். இப்போது, சமாதானம், நல்லிணக்கம் மற்றும் நமக்கான வாய்ப்புகளை அடைந்துவிட்டோம். "அவர் மூலமாய் நாம் இந்தக் கிருபையில் பிரவேசிக்கும் சிலாக்கியத்தை விசுவசத்தினால் பெற்று நிலைகொண்டிருந்து, தேவ மகிமையை அடைவோமென்கிற நம்பக்கையினாலே மேன்மைபாராட்டுகிறோம்."(வசனம்2)


Israel will give deep, national thanks for deliverance.

நன்றியில் உள்ள நேர்மை

# நம்முடைய பரலோக தந்தைக்கு நன்றி



Percival Blenman

அவர்கள் கர்த்தரை அவருடைய கிருபையினிமித்தமும், மனுபுத்திரருக்கு அவர் செய்கிற அதிசயங்களினிமித்தமும் துதித்து, ஸ்தோத்திரபலிகளைச் செலுத்தி, அவருடைய கிரியைகளை ஆனந்த சத்தத்தோடே விவரிப்பார்கள்." (சங்கீதம் *107:21-22*)

பரப்பரப்பான ஒரு வேலை நாளுக்குப் பிறகு, தனது வேலையை விட்டு வீட்டிற்குச் செல்லும் ஒரு மனிதனை கற்பனை செய்து பாருங்கள். அன்று தன் மனைவிக்கு வாங்க நினைத்த திருமண ஆண்டு விழா பரிசை மறந்துவிட்டதை அவன் திடீரென்று உணர்கிறான். எனவே, அவர் ஏதாவது வாங்குவதற்காக ஒரு கடையில் நின்று சுற்றிப் பார்த்த பிறகு சரியான பரிசைக் கண்டுபிடித்தார். பணம் செலுத்த வேண்டிய வரிசை நீண்டது. அவரது முறை வருவதற்கு சற்று முன்பு, அவர் பையில் உள்ள பணப்பபை காணவில்லை. எங்கு தேடியும் இது கிடைக்கவில்லை. இறுதியாக, அவர் தனது பணப்பையை வேலை ஸ்தலத்தில் விட்டுச் சென்றிருக்கலாம் என்று பீதி அடைகிறார். விரக்தியில், கோட் பாக்கெட்டை பார்க்கும்போது அதில் அவருடைய பணப்பை இருந்தது. கேட்க முடியாதபடிக்கு, "ஓ, நன்றி தேவனே" என்று அவர் கிசுகிசுக்கிறார்.

இந்த விஷயத்தில், அவர் ஒரு விசுவாசியாக இல்லாமல் இருக்கலாம் அல்லது அவர் வெளிப்படுத்திய வார்த்தைகளை உண்மையாக அர்த்தப்படுத்தாமல் இருக்கலாம். ஆனால் உண்மை என்னவென்றால், அஞ்ஞானிகளாக இருந்தாலும் சரி, நாத்திகராக இருந்தாலும் சரி, இவ்வார்த்தைகளை அதிகம் சிந்திக்காமல் பலர் சொல்கிறார்கள். அர்ப்பணிக்கப்பட்ட விசுவாசிகளாகிய நமக்கு தேவனுக்கு நன்றி செலுத்துவதற்கு நிறைய காரணங்கள் உள்ளது. ஆனால் நம்முடைய பரலோகத் தகப்பனுக்கு நாம் செலுத்தும் நன்றிகளை நாம் சிந்தித்துச் செலுத்துகிறோமா?

நியாயப்பிரமாணத்தின் கீழ் தோடா, {,ஸ்டிராங்ஸ் 8426, நன்றி செலுத்துதல் - லேவியாராகமம் 7:12, 13, 15, லேவியாராகமம் 22:29, யோசுவா 7:19, 2நாளாகமம் 33:16, எஸ்றா10:11, நெகேமியா12:38, சங்கீதம் 26:7, சங்கீதம் 42:4, சங்கீதம் 50:14,23} இஸ்ரயேலர்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டது. தோடா என்பது யெகோவா தேவனுக்கு செய்யப்படும் ஸ்தோத்திரபலியாகும். இந்த ஏற்பாட்டின் கீழ் ஒரு இஸ்ரயேலர் தேவனுக்கு நன்றி செலுத்தலாம், இதில் "எண்ணெயிலே பிசைந்த புளிப்பில்லா அதிரசங்களையும், எண்ணெய் பூசப்பட்ட புளிப்பில்லா அடைகளையும் எண்ணெயிலே பிசைந்த வறுக்கப்பட்ட மெல்லிய மாவினால் செய்த அதிரசங்களையும் படைக்கவேண்டும்." (லேவியராகமம் 7:12-15) இருப்பினும், இன்று நாம் இந்த வழியில் தேவனுக்கு நன்றி செலுத்துவதில்லை. அதற்குபதிலாக இயேசுவின் மூலம் சாத்தியமாக்கப்பட்ட புதிய ஏற்பாட்டின் கீழ், ஜெபத்தின் மூலமும், அவரை மகிமைப்படுத்தும் பாடலின் மூலமும் தேவனுக்கு நன்றி செலுத்துகிறோம். (சங்கீதம் 100:1, 2, 1தெசலோனிக்கேயர் 5:16- 18, கொலோசேயர் 4:2, பிலிப்பியர் 4:6)

விசுவாசிகளாகிய நாம், இயேசுவின் முன்மாதிரியைப் பின்பற்றி, உணவு உண்பதற்கு முன் நன்றி செலுத்துவது வழக்கம். (மத்தேயு15:36, யோவான் 6:23, லூக்கா 22:17-19)ஆனால், நம்முடைய பரலோகத் தகப்பனுக்கு






நன்றி செலுத்தக்கூடிய ஒரே சூழ்நிலை இதுவாக மட்டும் இருக்கக்கூடாது.

தனது பணப்பையை தவறவிட்ட மனிதன் கணநேர துயரத்தை அனுபவித்தது போல், நம் வாழ்வில் சில துயரமான அனுபவங்களில் இருந்து நம்மை பரலோக தகப்பன் விடுவிக்கும் போது, நாம் அடிக்கடி நன்றி செலுத்துகிறோம். இருப்பினும், நமக்கு இருக்கவேண்டிய வித்தியாசம் என்னவென்றால், நாம் யெகோவா தேவனுக்கு உண்மையாக நன்றி செலுத்தவேண்டும். இப்படிப்பட்ட நன்றிகளை சங்கீதக்காரர் ஊக்குவிக்கிறார். (சங்கீதம் 107:1) வேதனையான அனுபவங்கள் மற்றும் சோதனைகளில் இருந்து நம்மை விடுவித்ததற்காக நாம் தேவனுக்கு நன்றி சொல்லவேண்டும். ஆயினும்கூட, சோதனையான அனுபவங்களுக்காக நாம் தேவனுக்கு நன்றி சொல்ல வேண்டும் அல்லவா? வேதனையான அனுபவத்திற்காக தேவனுக்கு நன்றி சொல்வது முதலில் விநோதமாகத் தோன்றலாம், ஆனால் வேதாகம கோட்பாடுகள் இந்தக் கருத்தை ஆதரிக்கின்றது. 1தெசலோனிக்கேயரில் அப்போஸ்தலனாகிய பவுலின் கட்டளையைக் கவனியுங்கள். "எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ்செய்யுங்கள், அப்படிச் செய்வதே கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களைக் குறித்துத் தேவனுடைய சித்தமாயிருக்கிறது."'(5:18)


"எல்லாவற்றிலேயும்" என்ற முக்கிய வார்த்தையை இங்கு பவுல் பயன்படுத்துகிறார். தாவீதும் இதேபோன்ற கண்ணோட்டத்தை வெளிப்படுத்தினார். "கர்த்தரை நான் எக்காலத்திலும் ஸ்தோத்தரிப்பேன் அவர் துதி எப்போதும் என் வாயிலிருக்கும். " (சங்கீதம் 34:1) எனவே, அக்கினி போன்ற சோதனைகளுக்காகவும், அதிலிருந்து நம்மை விடுவித்ததற்காகவும் தேவனுக்கு நாம் நன்றிகளை செலுத்துவது பொருத்தமானது. (யாக்கோபு1:2) பிரச்சனைகள் மற்றும் சவாலான நேரங்களை நாம் ஏன் ஒரு ஆசீர்வாதமாகவும், நன்றிகளை ஏறெடுப்பதற்கு காரணமாகவும் நாம் பார்க்கவேண்டும்? ஏனெனில் நம்முடைய விசுவாசத்தின் சோதனை,"பொறுமையை உண்டாக்கும்" என்று யாக்கோபு கூறுகிறார். (1:3, 4)

## சோதனைகள், விசுவாசத்திற்கான ஒரு பயிற்சி

ஒலிம்பிக் விளையாட்டு வீரர்கள் எடுக்கும் பயிற்சியை கவனியுங்கள். அவருடைய செயல் திறனை முழுமையாக்க உதவும் நோக்கில் கடினமாக உடற்பயிற்சியில் தன்னை ஈடுபடுத்திக் கொள்கிறார். அதற்கேற்ப, பயிற்சி முறையானது சுகமநுபவிப்பதில் இருந்து தொலைவில் இருக்கலாம். இருப்பினும், ஒலிம்பிக் போட்டியின் சவால்களை அவர் வெல்லும்போது அது அவருக்கு பலன் தருகிறது. அதுபோல கிறிஸ்தவர் களாகிய நமக்கும், கடுமையான சோதனைகள் இனிமையானவை அல்ல. இருப்பினும், விடாமுயற்சி சகிப்புத்தன்மையை வளர்க்கிறது. (எபிரெயர் 12:11, 2பேதுரு1:5-8) எனவே சோதனைகளை நம்முடைய விசுவாசத்திற்கான பயிற்சியாக நாம் நினைக்கவேண்டும்.

மற்றொரு சுவாரசியமான உண்மை என்னவென்றால், சோதனைகளிலிருந்து நாம் பெறும் அனுபவங்கள், நன்றியுள்ளவர்களாக இருப்பதற்கு நமக்கு காரணமாகிறது. தேவன் தம்முடைய பிள்ளைகளின் குணாதிசயங்களை வளர்ப்பதற்கு ஏற்ற சோதனைகளுக்கு உட்படுத்த அவர் அனுமதிக்கிறார் என்பதே இதற்கான காரணம். மேலே உள்ள ஒலிம்பிக் விளையாட்டு வீரரின் அனுபவத்தைப் போல, இந்த சோதனைகள் நம்முடைய கிறிஸ்தவ குணங்களை செம்மைப்படுத்த உதவும் பாடங்களாக கருதவேண்டும். "எல்லாருக்கும் கிடைக்கும் சிட்சை உங்களுக்குக் கிடையாதிருந்தால் நீங்கள் புத்திரராயிராமல் வேசிப்பிள்ளைகளாயிருப்பீர்களே. அன்றியும் நம்முடைய சரீரத்தின் தகப்பன்மார்கள் நம்மைச் சிட்சிக்கும்போது, அவர்களுக்கு நாம் அஞ்சி நடந்திருக்க, நாம் பிழைக்கத்

தக்கதாக, ஆவிகளின் பிதாவுக்கு வெகு அதிகமாய் அடங்கி நடக்கவேண்டுமல்லவா?" (எபிரெயர் 12:8-9) என்று வாசிக்கிறோம். எனவே தேவன் நம்மை அவருடைய பிள்ளைகளாகவும், அவருடைய குடும்பத்தின் ஒரு பகுதியாகவும் பார்க்கிறார் என்பதை சோதனைகள் உறுதிப்படுத்துகின்றது.




தேவன் நம்மை ஒழுங்கு படுத்தவில்லை என்றால், நாம் "வேசியின் பிள்ளைகள்" என்று பவுல் எபிரெயர் 12:8லில் குறிப்பிடுகிறார். முந்தைய வேத வசனங்களைக் கருத்தில் கொண்டு, ஒரு தந்தைக்கு இரண்டு குமாரர்கள் இருக்கும் ஒரு துரதிர்ஷ்டமான உதாரணத்தைப் பார்க்கலாம். ஒரு மகன் அவருக்கு பிறந்தவன், மற்றொருவன் அவரது வளர்ப்பு மகன். இந்த எடுத்துக்காட்டில், தந்தை வளர்ப்பு மகனின் மீது அதிக கவனம் செலுத்தாமல், அவர் விரும்பியதைச் செய்ய அனுமதிக்கிறார். ஆனால் அவருடைய சொந்த மகனின் நடத்தையை உன்னிப்பாகக் கவனித்து, அவருக்கு ஒழுக்கமுள்ள பாடங்களைக் கற்பிப்பதற்காக அவரைக் கட்டுப்படுத்தினார். தந்தை வளர்ப்பு மகனைக் காட்டிலும் தனது சொந்த மகனை அதிகமாக நேசித்து, ஆதரவளிக்கிறார் என்பது தெளிவாகிறது. வளர்ப்பு மகன் புறக்கணிக்கப்படுகிறான். ஏனென்றால் தந்தை அவனை தன் குடும்பத்தின் ஒரு பகுதியாகக் கருதவில்லை என்று பொருள்படுகிறது.

எனவே, தேவனுடனான நம்முடைய உறவில், நாம் அவருடைய சொந்த பிள்ளைகளாக காணப்பட விரும்பு கிறோம். அதிர்ஷ்டவசமான, நம்முடைய கர்த்தராகிய இயேசுவின் மூலமாக நாம் தேவனுடைய குமாரர்களாக, அந்த பாக்கியத்தை அனுபவிக்கிறோம். (எபேசியர் 1:3-5)

ஆகவே, நாம் தேவனிடமிருந்து ஒழுக்கத்தை அனுபவிக்கும்போது, ஒரு சோதனையைச் சகித்த பிறகு,"நன்றி பிதாவே, எனக்கு மற்றொரு சோதனையை தாரும்." என்ற மனநிலையை நாம் பெறவேண்டும். இந்த விண்ணப்பம் மேற்பரப்பில் விநோதமாக தோன்றினாலும், இது நன்றியுள்ளதாக இருக்கிறது, ஏனெனில் தேவன் அவருடைய பிள்ளைகளாக நம்மை ஒழுங்குப்படுத்துகிறவர் என்பதை நாம் உணரவேண்டும். இதன் விளைவாக, பரலோகத்தகப்பனிடமிருந்து (ஒழுக்கத்தின் மூலம்) பெற்ற பாடங்களிலிருந்து நாம் மகிழ்ச்சி அடையலாம்.

எனவே, தேவனுடைய உதவியோடு சோதனைகளை விடாமுயற்சியுடன் சகிப்பதற்கு, அவருக்கு நன்றி செலுத்துவதற்கான காரணத்தை அளிக்கிறது. நாம் கஷ்டங்களை அனுபவிக்கும் போது, நாம் கைவிடப்பட மாட்டோம் என்று உறுதியளிக்கப் படுகிறது. தேவன் நம்முடைய ஜெபங்களை கேட்டு, நம்மை விடுவிப்பார் என்ற உறுதியுடன் வேதனையான அனுபவத்தின் போது அதை தாங்குவதற்கான வலிமையை தேவனிடம் மன்றாடுவதற்கு நமக்கு ஒரு உயிர்நாடி உள்ளது. (சங்கீதம் 107:6,7, உபாகமம் 31:6, நீதிமொழிகள் 18:10)

நாம் தேவனுக்கு ஊழியம் செய்ய நம்மை அர்ப்பணிக்கும்போது, அதிகப்படியான பயம் மற்றும் நிச்சயமற்ற தன்மையிலிருந்து அவர் நமக்கு விடுதலை அளிக்கிறார். நாம் எப்படிப்பட்ட சிரமத்தை அனுபவித்தாலும், பரலோக பிதாவிடம் நம் கவலைகள் அனைத்தையும் எடுத்துச் செல்ல முடியும் என்பதற்கான நம்பிக்கை நமக்குண்டு. (சங்கீதம் 107:13, 14, சங்கீதம் 46:1-3)

மருத்துவ அல்லது தற்காலிக மனச்சோர்வுகள் கிறிஸ்துவில் உள்ள மகிழ்ச்சியைப் பறிக்கலாம். உறுதியாக நம்பிக்கை இருந்தாலும், சோகம் நம் மீது கருமேகத்தை வீசும் நேரங்களை நாம் அனுபவிக்கலாம்.

இப்படிப்பட்ட நேரத்தில் நம்மை மறைத்து தனிமைப்படுத்திக் கொள்ள மனித இயல்பு நம்மை தூண்டும். நமது சோகத்திற்குக் காரணம் நாம் எடுத்த முடிவுகள் அல்லது பிறர் எடுக்கும் முடிவுகளின் விளைவாகவும் இருக்கலாம். மற்ற நேரங்களில், இந்த சோகம் எதிர்பாராத நிகழ்வுகள் அல்லது ஒரு உயிரியல் நிலை காரணமாக இருக்கலாம். அது நம்மை ஆழ்ந்த மனச்சோர்வுக்கு கொண்டு வரலாம். "சகல போஜனத்தையும் அரோசிக்கும்..." அளவுக்கு துக்கம் நம்மை அழுத்துகிறதை கற்பனை செய்து பாருங்கள். (சங்கீதம் 107:18) நம் சுமைகளை தேவன் மீது இறக்கி வைக்கும் போது நாம் அனுபவிக்கும் சுகமான விடுதலைகள், நாம் செலுத்தக்கூடிய நன்றிக்கு ஒரு காரணமாக இருக்கலாம். (சங்கீதம் 107:20)

நம்முடைய சோதனைகள் நீக்கப்படுவதற்கு ஜெபம் உத்தரவாதம் அளிப்பதில்லை. பல ஆண்டுகளாக ஒருவிதமான துன்பத்திலிருந்து விடுபட நாம் ஜெபித்திருந்தாலும் அது ஒருபோதும் மறைவதில்லை. இதற்கான பதில்கள் இல்லாததால், நம்முடைய துன்பங்களைப் பற்றி தேவன் கவலைப்படுவதில்லை என்று அர்த்தமல்ல. இந்த சோதனை அல்லது துன்பத்தைப் பற்றிய நமது சிந்தனையை நாம் மாற்றிக் கொள்ள வேண்டியிருக்கும் என்பதை இந்த நிலை சுட்டிக்காட்டலாம் மற்றும் முடிவைப் பொருட்படுத்தாமல் பொறுமைக்காக ஜெபிக்க வேண்டும்.

அப்போஸ்தலனாகிய பவுல் அதே பலவீனத்தைப் பற்றி மூன்று முறை பரலோகத் தகப்பனிடம் ஜெபித்தார், இறுதியில், "என் கிருபை உனக்குப் போதும், பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும் என்று" பதிலைப் பெற்றார். (2கொரிந்தியர் 12:8, 9)

பவுல் தொடர்ந்து துன்பங்களை அனுபவித்தாலும், மாம்சத்தில் தனக்கு ஏற்பட்ட சோதனைகளின் போது, கிறிஸ்துவின் பெலனோடு அவைகளை மேற்கொண்டார். (பிலிப்பியர் 4:13) ஆகவே, நாம் கஷ்டங்ளையும், பலவீனங்களையும் சகித்துக் கொள்ளும்போது, நம்முடைய கர்த்தராகிய இயேசு சொன்னது போல, "என் சித்தம் அல்ல, உங்கள் சித்தமே நிறைவேறட்டும்" (லூக்கா22:42)என்று கூறலாம். மேலும் நம்முடைய சோதனைகளின் போது கிறிஸ்துவின் மூலம் எல்லாவற்றிற்காகவும் நாம் தேவனுக்கு நன்றி சொல்லவேண்டும். (எபேசியர் 5:20)

### பயத்தை வெல்லுதல்

சோதனைகளும் துன்பங்களும் நம் மகிழ்ச்சியை ஓரளவுக்கு குறைக்கும் ஆனால் பயமோ அதை முழுவதுமாக நம்மிடமிருந்து திருடிச்செலும். கடலில் பயணிக்கும் மாலுமிகள் கடுமையான புயலின் போது ஏற்படும் பயமுறுத்தலும், தாழ்மைப்படுத்தும் அனுபவங்களையும் பற்றி கூறுகிறார்கள். அறுபது அடிக்கு மேல் வரும் அலைகளை எதிர்கொள்வதை கற்பனை செய்து பாருங்கள், இப்படிப்பட்ட சூழ்நிலையில் கவலை கொள்வது மனித இயல்பு. இயேசுவின் சீஷர்களும் உதவிக்காக அவரைக் கூப்பிட்டபோது அத்தகைய அனுபவத்தை எதிர்கொண்டார்கள். (மாற்கு4:35-39, சங்கீதம் 107:23-29) கிறிஸ்து கடலை அமைதிப் படுத்தியபோது அவர்களின் ஆச்சரியம் மற்றும் மகிழ்ச்சி இரண்டையும் கருத்தில் கொள்ளலாம், இந்த அதிசயம் நிச்சயமாக அவர்களுக்கு நன்றியுணர்வைக் கொடுத்திருக்கும்.

தங்களைச் சூழ்ந்திருக்கும் அல்லது பாதிக்கும் அழுத்தங்கள் மற்றும் துன்மார்க்கத்தின் மத்தியில், செய்யும் ஒவ்வொரு ஜெபத்தையும் பரலோகத் தந்தை கேட்கிறார் என்ற உறுதியை யெகோவா தேவனின் ஊழியர்கள் பெற்றிருக்கிறார்கள். சோதனைகளையும், பரிட்சைகளையும் சகித்து ஜெயிப்பதற்கு உதவுவதன் மூலம் அவர்களுடைய விசுவாசத்திற்கு வெகுமதி அளிப்பார். இறுதியாக அவர் துன்மார்க்கரிடமிருந்து விடுவிக்க உறுதியளிக்கிறார். (சங்கீதம் 37:10, 107:37-42) தேவன் நம்மீது வைத்திருக்கும் அன்பு மாறாதது என்று வேதம் நமக்கு உறுதியளிக்கிறது. (உபாகமம் 31:6) எனவே நம் மனதில் இருக்கும் சந்தேகத்தையும் பயத்தையும் நீக்கி எல்லா நிலைகளிலும் ஜெபத்தில் விடாமுயற்சியுடன் இருக்க முயற்சி செய்யவேண்டும். (சங்கீதம் 107:43, கொலோசேயர் 4:2) எனவே, நம்

இருதயங்களில் மகிழ்ச்சியுடன், வாழ்க்கையின் தற்காலிகமான விஷயங்களுக்கான கவலையிலிருந்து விடுபடுவோம். நன்றியுணர்வோடு, நம்முடைய எல்லா விண்ணப்பங்களையும் தேவனிடம் எடுத்துச் செல்வோம். (பிலிப்பியர் 4:4-6) மகிழ்ச்சியிலோ, துக்கத்திலோ, சோதனைகளிலோ, கடினமான அனுபவங்களிலிருந்து விடுபடுவதிலோ, மனச்சோர்விலோ, பயத்திலோ, கவலைகளிலோ அல்லது துன்மார்க்கரின் கைகளால் ஏற்படும் துன்பத்திலோ, நன்றியுணர்வுடன் இருப்பதற்கான காரணம் நமக்கு இருக்கிறது. யெகோவா தேவனின் "உறுதியான அன்பிற்காக" நாம் தொடர்ந்து நன்றி செலுத்துவோம். மேலும் ஸ்தோத்திர பலிகளை செலுத்தும் போது அவர் செய்த அற்புதமான செயல்களைப் பற்றி மகிழ்ச்சியோடு மற்றவர்களுக்கு அறிவிப்போம். (சங்கீதம் 107:21, 22)

**The hardest arithmetic to master is that which enables us to count our blessings. (Eric Hoffer, author of *The True Believer*)**

போற்றுதலுக்கான ஒரு சங்கீதம்

# சங்கீதம் 145



"கர்த்தர் இரக்கமும் மன உருக்கமும், நீடிய சாந்தமும் மிகுந்த கிருபையும் உள்ளவர். கர்த்தர் எல்லார்மேலும் தயவுள்ளவர், அவர் இரக்கங்கள் அவருடைய எல்லாக் கிரியைகளின் மேலுமுள்ளது." (சங்கீதம் *145:8-9*)

**Len Griehs**

சங்கீதம் 145 "தாவீதின் துதிப் பாடல்" என்று உரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும், மீதமுள்ள 146 -150 சங்கீதங்கள் மேலும் வகைப்படுத்தப்படலாம். ஒவ்வொன்றும் "அல்லேலூயா" அல்லது "யெகோவா தேவனை துதியுங்கள்" என்று தொடங்குகிறது.

நம்முடைய மகத்துவமுள்ள யெகோவா தேவனுக்கு சாட்சியாக அவற்றை ஒன்றாக வாசிப்பதற்கு இது உத்வேகத்தை அளிக்கிறது. சங்கீதம் 145, ஒன்பது "அக்ரோஸ்டிக்"( acrostic) சங்கீதங்களில் ஒன்றாகும். இதில் ஒவ்வொரு வசனமும் எபிரெய எழுத்துக்களின் தொடர்ச்சியான எழுத்துக்களுடன் தொடங்குகிறது:.

- சங்கீதம் 9,10,37 - 22எபிரெய எழுத்துக்கள் ஒவ்வொன்றும் இரண்டு வசனங்கள்
- சங்கீதம் 25,34 - ஒவ்வொரு எழுத்துக்கும் ஒரு வசனம்
- சங்கீதம் 111 மற்றும் 112 - ஒவ்வொரு எழுத்திற்கும் பாதி வசனம்
- சங்கீதம் 119 - ஒவ்வொரு எழுத்துக்கும் எட்டு வசனங்கள்

சங்கீதம் 145 ஒரு அக்ரோஸ்டிக் சங்கீதமாக ஒரு தனித்தன்மையைக் கொண்டுள்ளது . "நன்" என்ற எழுத்துடன் தொடங்கும் வசனத்தை மொழிபெயர்ப்புகள் தவிர்க்கின்றன. கும்ரான் சுருள்களிலும் செப்டுவஜின்ட் பதிப்பிலும் காணப்படும் அசல் சங்கீதத்தில், இருபத்தி இரண்டு எழுத்துக்கள் மற்றும் வசனங்கள் காணப்படுகிறது.





*The Hebrew Alphabet* – Hebrew Alphabet

எழுத்துக்களில் உள்ள எண்ணிக்கையைத் தவிர, கிமு முதல் மற்றும் இரண்டாம் நூற்றாண்டுகளின் ரபிகளின் எழுத்துக்கள் 22 என்ற எண்ணுக்கு சிறப்பு முக்கியத்துவத்தை பிரதிபலிக்கிறது. ஆதாமிலிருந்து யூத தேசத்தின் முன்னோடியான யாக்கோபு வரையிலான தலைமுறைகளின் எண்ணிக்கை, ஆதியாகமத்தில் சிருஷ்டிப்புகளின் எண்ணிக்கை, மற்றும் யூத நியதியில் உள்ள புத்தகங்களின் எண்ணிக்கை. தேவனுடைய மகிமைக்காக பாடப்பட்டதை தவிர, 145 ம் சங்கீதம் அவர் மேல் விசுவாசமுள்ளவர்களுடன் அவர் கையாள்வதில் உள்ள விசுவாசத்தை வெளிப்படுத்துவதாகும். உதாரணமாக, தாவீது, மூன்று பெரிய தோல்விகளை தழுவினபோதிலும், மோசேயைப் போலவே, தேவனுடன் தனிப்பட்ட விதத்தில் மிகவும் நெருங்கிய உறவை கொண்டிருந்தார். அவர் தேவனுடைய இருதயத்திற்கு ஏற்ற ஒரு மனிதர் என்றும் அழைக்கப்பட்டார். (1சாமுயேல் 13:14) இவ்வாறு, இந்த சங்கீதம் இரக்கமுள்ள பரலோகத் தகப்பனுடைய இரக்கம், அன்பு, நீதி மற்றும் ஞானத்தில் நாம் மகிழ்ச்சியடைய நம்மை அவரிடம் நெருங்கி அழைத்து, அவர் மீது உறுதியான விசுவாசத்தை வளர்ப்பதற்கான வழிகாட்டியாகச் செயல்படுகிறது. (யாக்கோபு4:8)

## யெகோவா தேவனின் தெய்வீக அரசாட்சி

"இராஜாவாகிய என் தேவனே, உம்மை உயர்த்தி, உம்முடைய நாமத்தை எப்பொழுதும் என்றென்றைக்கும் ஸ்தோத்தரிப்பேன். நாடோறும் உம்மை ஸ்தோத்திரத்து, எப்பொழுதும் என்றென்றைக்கும் உம்முடைய நாமத்தைத்




துதிப்பேன். கர்த்தர் பெரியவரும் மிகவும் புகழப்படத்தக்கவருமாயிருக்கிறார். அவருடைய மகத்துவம் ஆராய்ந்து முடியாது. தலைமுறை தலைமுறையாக உம்முடைய கிரியைகளின் புகழ்ச்சியைச் சொல்லி, உம்முடைய வல்லமையுள்ள செய்கைகளை அறிவிப்பார்கள்." (1-4வசனங்கள்)

இன்று மனிதர்கள் தேவனுடைய செயல்களை மதிக்கவில்லை என்றாலும், அனைத்து வேத வசனங்களும் தேவனுடைய ஆட்சித் தலைமை உரிமையைப் பறைசாற்றுகின்றன. யெகோவா தேவன் மோசேக்கு தம்மை வெளிப்படுத்தியபோது, "நான் ஆபிரகாமின் தேவனும் ஈசாக்கின் தேவனும் யாக்கோபின் தேவனுமாகிய உன் பிதாக்களுடைய தேவனாயிருக்கிறேன் என்றார். மோசே தேவனை நோக்கிப்பார்க்கப் பயந்ததினால், தன் முகத்தை மூடிக்கொண்டான்." (யாத்திராகமம் 3:6) அவர் எகிப்தில் வாழ்ந்த நாற்பது ஆண்டுகளில், மோசே உண்மையில் தேவனை அறிந்திருக்கவில்லை. நாற்பது வருடங்கள் இஸ்ரயேலின் விடுதலையின் போது, மோசே அவரை மிக நெருக்கமாக அறிந்துகொண்டார். (யாத்திராகமம் 33:11) மேலும் அவர் யெகோவாவின் அற்புதங்களைக் கண்டு வியந்தார். தேவன் வல்லமையுள்ளவர் என்றும் அவர் எந்தவிதமான சோதனையில் இருந்தும் விடுவிக்க வல்லவர் என்பதையும் இஸ்ரயேல் புத்திரருக்கும் நினைப்பூட்டுவதற்காக மோசே உபாகமம் 32ம் அதிகாரத்தை பாடலாக எழுதினார். "கர்த்தருடைய நாமத்தை பிரசித்தம் பண்ணுவேன், நம்முடைய தேவனுக்கு மகத்துவத்தைச் செலுத்துங்கள்." (உபாகமம் 32:3)

பாபிலோனுக்கு சிறைபிடிக்கப்பட்டு போனபோது, எசேக்கியேல் தேவனுடைய வாயாக இருந்தார். நான்கு திசையிலும் செல்லும், நான்கு சக்கரங்களின் தரிசனம், பூமி முழுவதும் உள்ள தேவனுடைய பிரசன்னம் நிறைந்திருப்பதை வெளிப்படுத்தியது. அவர் யெகோவா தேவனை இஸ்ரயேலின் தேவனாக மட்டும் அல்ல, இந்த முழு உலகிற்கும் தேவனாக பார்த்தார். தேவனுடைய இறையாண்மை இஸ்ரயேலையும் தாண்டி உலகம் முழுவதும் வியாபித்துள்ளது என்பதை தேவன் எசேக்கியேலின் தரிசனங்கள் மற்றும் தானியேலின் தரிசனங்களின் மூலம் செயல் முறைப்படுத்தி காட்டினார். குறித்த நேரத்தில் அவர் தன்னைத் புறஜாதிகளுக்கும் வெளிப்படுத்தி, அவர்களிடம் இருந்து "தமது நாமத்திற்காக ஒரு ஜனத்தைத் " தெரிந்துகொள்வார். (அப்போஸ்தலர் 15:14) இருப்பினும் தேவனோடு தொடர்பில் வளர மோசே மற்றும் தாவீதை போன்ற விசுவாசம் தேவைப்படுகிறது. மற்றவர்கள் அவரது சிருஷ்டிப்புகளை அடையாளம் காண மாட்டார்கள், மேலும் பலர் அவரது இருப்பை மறுத்து, எதிரியால் குருடராக்கப் பட்டிருப்பார்கள். (2கொரிந்தியர் 4:4)" விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம், ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும் அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்கவேண்டும்." (எபிரெயர் 11:6)

ஒருவர் தேவனைப் பற்றி அதிகமாக புரிந்து கொள்ளும்போது, "தேவன் தம்மை நேசிப்பவர்களுக்கு சகலத்தையும் நன்மைக்காக ஏதுவாக நடத்துகிறார்" என்று ரோமர் 8:28 ல் உள்ள வாக்குத்தத்தத்தின் தனித்துவமான அர்த்தத்தைப் பெறுகிறது. ஒரு விசுவாசியின் வாழ்க்கையில் எல்லாமே சரியானதாக இருக்கும் என்று இந்த வாக்குத்தத்தத்தின் அர்த்தமல்ல. அவர்களுக்கு கடினமான அனுபவங்களும் பல சவாலான காரியங்களும் இருக்கும். தோல்விகளும் ஏமாற்றங்களும் இருக்கும். நாம் ஒரு புதிய வாழ்க்கைக்கு உயிர்த்தெழுப்ப ப்படும் போதுதான் இந்த வாக்குத்தத்தத்தை முழுமையாகப் புரிந்துகெள்ளமுடியும். இறுதி நன்மையாக

கிறிஸ்துவில் ஒரு புது சிருஷ்டியாக நம்மை முழுமைப்படுத்த சில அனுபவங்கள் எவ்வாறு தேவைப்பட்டது என்பதை நாம் அப்போது உணருவோம். (1கொரிந்தியர் 13:12) அப்போது தான், தாவீதின் சுருக்கமான வரிகளை நாம் முழுமையாக புரிந்து பாராட்டமுடியும். "உம்முடைய சிறந்த மகிமைப் பிரதாபத்தையும், உம்முடைய அதிசயமான கிரியைகளையுங்குறித்துப் பேசுவேன்.ஜனங்கள் உம்முடைய பயங்கரமான கிரியைகளின் வல்லமையைச் சொல்லுவார்கள். உம்முடைய மகத்துவத்தை நான் விவரிப்பேன்.அவர்கள் உமது மிகுந்த தயவை நினைத்து வெளிப்படுத்தி, உமது நீதியைக் கெம்பீரித்துப் பாடுவார்கள். கர்த்தர் இரக்கமும் மனஉருக்கமும், நீடிய சாந்தமும் மிகுந்த கிருபையும் உள்ளவர். " (சங்கீதம் 145:5-8)

பலருக்கு, தேவன் ஒரு வகையான தனிப்பட்ட பயிற்சியாளராக பணியாற்றுகிறார் - வெற்றிகரமான விளையாட்டு வீரர்கள் தங்கள் சாதனைகளுக்காக தேவனுக்கு நன்றி சொல்லுவதுடன், தங்கப் பதக்கத்தை வெல்ல மக்களை தேவனே ஊக்குவிப்பதே பிரபஞ்சத்தில் தேவனுடைய பங்கு என்பதை போல, அவர்களின் "தேவன் தந்த திறனை" பற்றி பேசுகிறார்கள். "ஜென்ம சுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளான், அவைகள் அவனுக்குப் பைத்தியமாகத் தோன்றும், அவைகள் ஆவிக்கேற்ற பிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவைகளானதால், அவைகளை அறியவுமாட்டான்" (1கொரிந்தியர் 2:14)" சிலர் நம்பிக்கையற்றவர்களை தேவனிடமிருந்து நித்தியமாக பிரிப்பதற்கு அல்லது அதைவிட மோசமான நிலைக்கு ஒதுக்கிவிடுகிறார்கள்.

தேவனுடைய வாக்குத்தத்தில் மரித்த அனைவரையும் திரும்பக் கொண்டுவந்து, பாவம், துக்கம் மற்றும் மரணம் இல்லாத பூமிக்குரிய பரதீசில் நித்திய ஜீவனை அவர்களுக்கு வாய்ப்பளிக்கும் அவருடைய இரக்கத்தை பற்றி வெகு சிலரே அறிந்திருக்கிறார்கள். (வெளிப்படுத்தல் 21:4) ஏசாயா தீர்க்கதரிசி தேவனுக்கு மிக நெருக்கமானவராக இருந்தாலும், "என் நினைவுகள், உங்கள் நினைவுகள் அல்ல, உங்கள் வழிகள் என் வழிகளும் அல்ல... பூமியைப்பார்க்கிலும் வானங்கள் எப்படி உயர்ந்திருக்கிறதோ, அப்படியே உங்கள் வழிகளைப் பார்க்கிலும் என் வழிகளும் உங்கள் நினைவுகளைப் பார்க்கிலும் என் நினைவுகளும் உயர்ந்திருக்கிறது." என்று தேவன் அவரிடம் கூறுகிறார். (ஏசாயா55:8, 9)

"கர்த்தர் எல்லார்மேலும் தயவுள்ளவர், அவர் இரக்கங்கள் அவருடைய எல்லாக் கிரியைகளின் மேலுள்ளது. கர்த்தாவே உம்முடைய கிரியைகளெல்லாம் உம்மைத் துதிக்கும், உம்முடைய பரிசுத்தவான்கள் உம்மை ஸ்தோத்திரிப்பார்கள். மனுபுத்திரருக்கு உமது வல்லமையுள்ள செய்கைகளையும், உமது இராஜ்யத்தின் சிறந்த மகிமைப்பிரதாபத்தையும் தெரிவிக்கும்படிக்கு உமது இராஜ்யத்தின் மகிமையை அறிவித்து, உமது வல்லமையைக் குறித்துப் பேசுவார்கள்." (சங்கீதம் 145:9-12)

தேவன் அனைவருக்கும் நல்லவர் என்பதை தாவீது எப்படி அறிவித்தார் ? பல நூற்றாண்டுகளாக வறுமை, நோய்கள் மற்றும் வியாதிகள் மனுக்குலத்தின் பெரும்பகுதியை பாதித்துள்ளதே. சில சமயங்களில் வேதமாணவர்களிடையே கேட்கப்படும் இந்த கேள்விக்கான கருத்துக்கள் - வருங்கால ஆசீர்வாதங்களில் கவனம் செலுத்துகின்றது. "இந்த உலகம் மிகவும் மோசமானது, எங்களுக்கு தேவனுடைய இராஜ்யம் தேவை!" ஆயினும் உண்மையில், சரியான சூழ்நிலைகள் இல்லாதிருந்தும், முழு சிருஷ்டிப்பும் இப்போது இருக்கும் வாழ்க்கையின் ஆசீர்வாதத்திலிருந்து பயனடைகிறது. பல நூற்றாண்டுகளாக உடற்கூறியல் மற்றும் உயிரியல் மருத்துவ ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்புகள் இருந்தபோதிலும், மனித உடலின் செயல்பாடுகள் மர்மமாகவே இருக்கின்றன. பயணம், ஆங்கில மொழி மற்றும் அறிவியல் உள்ளிட்ட தலைப்புகளில் புத்தகங்களை எழுதிய அமெரிக்க பிரிட்டிஷ் எழுத்தாளர் வில்லியம் மெக்குவேர் பிரைசன் சமீபத்தில் " *The Body: A Guide for Occupants.* " என்ற புத்தகத்தை வெளியிட்டார். மனித உடலைப் பற்றிய பல அற்புதமான விஷயங்களை அவர் மேற்கோள்


காட்டுகிறார். உதாரணமாக, சில நிமிடங்களுக்குள் உங்கள் நுரையீரல் சுமார் 300 செக்ஸ்டில்லியன் ஆக்ஸிஜன் மூலக்கூறுகளை உள்ளிழுத்து, வெளியேற்றும். மேலும் உங்கள் எலும்பு மஜ்ஜை சுமார் 200 மில்லியன் சிவப்பு இரத்த அணுக்களை உருவாக்கும். டாக்டர். லிஸ்ஸா ராங்கின், எம்.டி., ஒரு ஒருங்கிணைந்த மருத்துவ மருத்துவர், *Mind Over Medicine: Scientific Proof That You Can Heal Yourself*, என்ற புத்தகத்தில், " உடல் தன்னைத்தானே குணப்படுத்திக் கொள்ள முடியும் என்பதை மருத்துவர்களாகிய நாம் கற்றுக் கொள்கிறோம்." என்று எழுதியிருக்கிறார்.

ஒவ்வொரு நாளும் நாம் உற்பத்தி செய்யும் புற்றுநோய் செல்களை அழிக்கும் இயற்கையான சுய பழுதுபார்க்கும் வழி முறைகளுடன் தொற்று முகவர்களை எதிர்த்துப் போராடவும், உடைந்த புரதங்களைச் சரிசெய்யவும் நமது இருதயத் தமனிகளைத் திறந்து வைத்திருக்கவும், இயற்கையாகவே வயதான செயல் முறையை எதிர்த்துப் போராடவும், இது அற்புதமாக பொருத்தப்பட்டிருப்பதாக நமது உடலியல் நூல்கள் நமக்குக் கற்பிக்கின்றன.

ஆதாம் பாவம் செய்தபோது, அவரது உடல் மரிக்கும் செயல் முறையைத் தொடங்கியது. (ஆதியாகமம் 2:17) உயிர்த்தெழுதலின் போது, மனுக்குலம் நீதியான வழியில் முன்னேறும்போது, மனித உடலின் இந்த திறன் நித்திய ஜீவனுக்கான நிலையை மீட்டெடுக்கும். தண்ணீர் உணவு மற்றும் காற்று போன்ற வெளிப்புற பொருட்கள் தேவைப்படும், ஆனால் சீரமைக்கப்பட்ட பூமி மீண்டும் உயிர்வாழும் ஊட்டச்சத்தை வழங்கும். இன்று பாவத்தின் கீழ் வாழ்க்கையின் சவால்களை சகித்துக் கொண்டிருக்கும் போது, நோய்கள், வியாதிகள் மற்றும் குறைபாடுகள் இல்லாத ஒரு காலத்தைப் பற்றி சிந்திப்பது நம்ப முடியாததாக உள்ளது. இதுவரை வாழ்ந்த அனைவருக்கும் நித்திய ஜீவனுக்கு வழிவகுக்கும் ஒரு அற்புதமான சீரமைப்பின் அனுபவத்தைப் பெறும் வாய்ப்பு கிடைக்கும். "நான் பிரமிக்கத்தக்க அதிசயமாய் உண்டாக்கப்பட்டபடியால், உம்மைத் துதிப்பேன், உமது கிரியைகள் அதிசயமானவைகள், அது என் ஆத்துமாவுக்கு நன்றாய்த் தெரியும். " (சங்கீதம் 139:14, 15)

"உம்முடைய இராஜ்யம் சதாகாலங்களிலுமுள்ள இராஜ்யம், உம்முடைய ஆளுகை தலைமுறை தலைமுறையாகவும் உள்ளது. கர்த்தர் விழுகிற யாவரையும் தாங்கி, மடங்கடிக்கப்பட்ட யாவரையும் தூக்கிவிடுகிறார்.எல்லா ஜீவன்களின் கண்களும் உம்மை நோக்கிக்கொண்டிருக்கிறது, ஏற்ற வேளையிலே நீர் அவைகளுக்கு ஆகாரங்கொடுக்கிறீர் நீர் உமது கையைத் திறந்து, சகல பிராணிகளின் வாஞ்சையையும் திருப்தியாக்குகிறீர்." (சங்கீதம் 145:13-16, நன் என்ற வசனம் இல்லாமல், எபிரெய எழுத்துக்களின் எழுத்து 14 காணப்படுகிறது.)

உயிர்களை நிலைநிறுத்துவதற்காக தேவன் பூமியின் சூழலை உருவாக்கினார். "தேவனாகிய கர்த்தர் சூரியனும் கேடகமுமானவர், கர்த்தர் கிருபையையும் மகிமையையும் அருளுவார், உத்தமமாய் நடக்கிறவர்களுக்கு நன்மையை வழங்காதிரார்." (சங்கீதம் 84:11) என்று வாசிக்கிறோம். ஒவ்வொரு நாளும் சூரியன் கிழக்கிலிருந்து உதித்து, மேற்கில் மறைகிறது. தேவன் இயற்கை வேலை செய்ய தேவையான அனைத்தையும் வழங்கினார், மேலும் தேவன் வடிவமைத்த அனைத்தும் வேலை செய்ய உருவாக்கப்பட்டது. (வெப்ப இயக்கவியலின் முதல் மற்றும் இரண்டாவது விதிகள்) உணவுச் சங்கிலி சூரியனில் இருந்து வரும் ஆற்றலுடன் தொடங்குகிறது. இந்த ஆற்றல் தாவரங்களால் கைப்பற்றப்படுகிறது. கார்பன் டை ஆக்சைடு மற்றும் நீரிலிருந்து உணவை (சர்க்கரை) உற்பத்தி செய்ய தாவரங்கள் ஒளி ஆற்றலைப் பயன்படுத்துகின்றன. விலங்குகள் தாவரங்கள் அல்லது


Job, an example of faith under duress

பிற விலங்குகளை உண்ணவேண்டும். அவர்கள் தங்கள் சொந்த உணவை உருவாக்க முடியாது. தேவன் சூரியனைப் போல, பூமியில் வாழும் அனைத்து உயிரினங்களுக்கும் ஜீவனை கொடுக்கும் ஆதரவாளராக இருக்கிறார். இந்தச் சூழலை ஒருபோதும் அழிக்க மாட்டேன் என்று மனிதனுக்கு தேவன் உறுதியளிக்கிறார். (பிரசங்கி1:4)

தேவன் ஒரு கேடகம் போலவும் இருக்கிறார். அவர் தம்முடையவர்களைப் பாதுகாத்து, சூழ்ந்திருக்கிறார். முக்கியமாக ஆவிக்குரிய போர்களின் போது பாதுகாப்பை வழங்குவதால், இது விசுவாசத்தின் கேடயம் என்று எபேசியர் 6:16 ல் அழைக்கப்படுகிறது. கடினமான அனுபவங்களைச் சந்திக்கும்போது, அதைத் தனியாக எதிர்கொள்ள அவர் ஒருபோதும் அனுமதிக்க மாட்டார் என்ற தேவனுடைய வாக்குத்தத்தம் நமக்கு இருக்கிறது. (உபாகமம் 31:6) தேவன் ஒரு கேடயம் என்ற இந்த உருவகம் சங்கீதத்தில் 11 முறையும், வேதாகமத்தின் மற்ற இடங்களில் ஏழு முறையும் வருகிறது. தேவனை நம் பாதுகாவலாராகக் கொண்டிருப்பதைத் தவிர, நம்முடைய மிகப் பெரிய எதிரிகளில் ஒருவனாகிய பயத்திற்கு எதிரான பாதுகாப்பையும் அவர் நமக்கு வழங்குகிறார். (ஏசாயா 41:10) எதிராளியின் தேசத்தில் நாம் அந்நியர்களாக இருக்கிறோம். தேவன் தாமே நமது கேடயமாக இருக்கிறார். (சங்கீதம் 28:7) சாத்தான் யோபுக்கும் மற்ற விசுவாசமுள்ள நபர்களுக்கும் உடல் ரீதியாகத் தீங்கு செய்தாலும், தேவன் அவர்களுடைய வளர்ச்சிக்கு அனுமதித்ததற்கு அப்பாற்பட்டது அல்ல.

## விடுபட்ட வசனம் 14

"கர்த்தர் தம்முடைய வார்த்தைகளில் உண்மையுள்ளவர் அவருடைய எல்லா கிரியைகளிலும் பரிசுத்தமுள்ளவர்." (Septuagint, also see footnote in RVIC) இந்த சங்கீதத்திலிருந்து விடுபட்ட வசனம் செப்டுவஜின்ட், இயேசுவின் நாளில் பயன்படுத்தப்பட்ட உரை மற்றும் கும்ரான் சுருள்களில் காணப்படுகிறது. பெரும்பாலான ஆங்கில மொழிபெயர்ப்புகளில் படிக்கும் போது, இது வசனம் 13இன் இரண்டாவது வாக்கியமாகத்




தோன்றுகிறது. சங்கீதம் ஒரு அக்ரோஸ்டிக் acrostic என்பதால், இந்த விடுபட்ட வசனம் அசல் எழுத்தின் ஒரு பகுதியாக இருந்திருக்கலாம். தேவனுடைய வார்த்தை எப்போதும் நிலையானது என்றும் அவருடைய சிருஷ்டிப்புகள் ஒரு நாள் அவருடைய பரிசுத்தத்தை உண்மையாக பிரதிபலிக்கும் என்றும் நமக்கு உறுதியளிக்கிறது.

"கர்த்தர் தமது வழிகளிலெல்லாம் நீதியுள்ளவரும், தமது கிரியைகளிலெல்லாம் கிருபையுள்ளவருமாயிருக்கிறார். தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும், உண்மையாய் தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும், கர்த்தர் சமீபமாயிருக்கிறார்." (சங்கீதம் 145:17, 18)

"தேவனே ஏன் இப்படி நடக்க அனுமதிக்கிறீர்" என்று நம்முடைய மனித இயல்பு கூக்கூரலிடும் போது, யெகோவா தேவன் ஒரு நீதியுள்ள தேவன், நம்முடைய வாழ்க்கையில் மிகவும் கடினமான காலங்களில் போது நாம் அவருடைய நன்மையில் கவனம் செலுத்த வேண்டும். "ஒளியைப் படைத்து, இருளையும் உண்டாக்கினேன், சமாதானத்தைப் படைத்து தீங்கையும் உண்டாக்குகிறவர், நானே, கர்த்தர் நானே இவைகளையெல்லாம் செய்கிறவர்..." (ஏசாயா 45:7) மற்றவர்கள் அனுபவிக்கும் பொதுவான துன்பங்களை நாமும் எதிர்பார்க்கலாம் என்று பேதுரு சொல்கிறார். (1பேதுரு5:9) ஆயினும், அவைகள் ஏன் நிகழ்கின்றன என்று அறிந்திருப்பதினால், அவருடைய அன்பும் இரக்கமும் நம் வலியைக் குறைக்கின்றது. ஆதாமும் ஏவாளும் பாவம் செய்தபோது, யெகோவா தேவனுடைய இரக்கமும், கிருபையும் இரட்சிப்பின் பாதையை அளித்தது. நம்மால் தாங்கிக்கொள்ள முடியாத அளவுக்கு வேதனையை அவர்

ஒரு போதும் அனுமதிக்க மாட்டார் என்றும் நமக்கு அவர் உறுதியளித்திருக்கிறார். (1கொரிந்தியர் 10:13) இன்றைய தீமை தற்காலிகமானது (சங்கீதம் 5:4, 5) சமூகப் பிரச்சனைகள் எதிர்கால நீதியுள்ள ஆட்சியில் பிடுங்கப்படும். (சங்கீதம் 5:4,5, செப்பனியா 3:5, உபாகமம் 32:4)

"அவர் தமக்குப் பயந்தவர்களுடைய விருப்பத்தின்படி செய்து, அவர்கள் கூப்பிடுதலைக் கேட்டு, அவர்களை இரட்சிக்கிறார். கர்த்தர் தம்மில் அன்புகூருகிற யாவரையும் காப்பாற்றி, துன்மார்க்கர் யாவரையும் அழிப்பார்."(சங்கீதம் 145:19, 20)

இயேசுவுக்கும் கூட நம்முடைய பரலோகத் தகப்பனிடமிருந்து பலம் தேவைப்பட்டபோது, அவர் ஜெபித்து பெற்றுகொண்டார். (லூக்கா 5:16) அவரை நோக்கி நாம் கூப்பிடுகையில், அவர் நமக்கு செவி கொடுப்பார். நம்முடைய பூமிக்குரிய வாழ்க்கையை முடிப்பதற்கு நமக்குத் தேவையான அனைத்தையும் அவர் கொடுப்பார் என்று விசுவாசத்தின் முழு நிச்சயத்தை நாம் கொண்டிருக்கலாம். இறுதியாக, சிருஷ்டிப்பை மோசமாக பாதிக்கும் நிலைமைகள் அழிக்கப்படும். தேவனுக்கும் அவருடைய சத்தியம் மற்றும் நீதியின் கொள்கைகளுக்கு பொருந்தாதவைகள் அனைத்தும் முற்றிலும் அழிக்கப்படும். நம் உலகில் உள்ள தீமை ஒரு நோக்கத்திற்காக அனுமதிக்கப்படுகிறது. இயேசு இந்த தீமையின் மூலத்தை அடையாளம் காட்டுகிறார் - "நீங்கள் உங்கள் பிதாவாகிய பிசாசானவனால் உண்டானவர்கள், உங்கள் பிதாவினுடைய இச்சைகளின்படி செய்ய மனதாயிருக்கிறீர்கள், அவன் ஆதி முதற்கொண்டு மனுஷ கொலை பாதகனாயிருக்கிறான், சத்தியம் அவனிடத்திலில்லாதபடியால் அவன் சத்தியத்திலே நிலைநிற்கவில்லை,அவன் பொய்யனும் பொய்க்குப் பிதாவுமாயிருக்கிறபடியால் அவன் பொய் பேசும் போது தன் சொந்தத்தில் எடுத்துப் பேசுகிறான்." (யோவான் 8:44)

ஆயிரவருட ஆட்சியின் முடிவின் போது, "கொஞ்ச காலம்" நிறைவடையும் போது, அந்த தீமையின் மூலத்துடன் அனைத்து தீய மற்றும் தீமை செய்பவர்களும் அழிக்கப்பட்டிருப்பார்கள். "சகலமும் அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கும்போது, தேவனே சகலத்திலும் சகலமுமாயிருப்பதற்கு, குமாரன் தாமும் தமக்குச் சகலத்தையும் கீழ்ப்படுத்தினவருக்குக் கீழ்ப்பட்டிருப்பார்." (1கொரிந்தியர் 15:28)அதன் பிறகு, தேவனுடைய சித்தத்திற்கு எந்த எதிர்ப்பும் இருக்காது. கீழ்ப்படிதலுக்கான இறுதிப் பரிட்சையில் வெற்றிபெறும் அனைவரும், நீதியின் சாதகமான ஆட்சியின் கீழ் சத்தியத்தின் அறிவுக்குக் கொண்டுவரப்பட்டிருப்பார்கள். மேலும் அவர்களுடைய இருதயங்களில் தேவன் மீது அன்பு பதிந்திருக்கும். தேவன் தாமே அவர்களை நித்திய ஜீவனுக்குள் வரவேற்பார். "அப்பொழுது, இராஜா தமது வலது பக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து - வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானதுமுதல் உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்படடிருக்கிற இராஜ்யத்தைச் சுதந்தரித்துக் கொள்ளுங்கள்." (மத்தேயு 25:34)

"என் வாய் கர்த்தரின் துதியைச் சொல்வதாக, மாம்சதேகமுள்ள யாவும் அவருடைய பரிசுத்த நாமத்தை எப்பொழுதும் என்றென்றைக்கும் ஸ்தோத்திரிக்கக் கடவது." (சங்கீதம் 145:21) மனிதன் நித்திய ஜீவனுக்கு தகுதிபெறும்போது, பல வருட துன்பமும் சோதனையும் நிறைவடையும். சிருஷ்டிப்பும் தேவன் திட்டமிட்டபடியே நிறைவேறும். தேவனுக்கே உரிய துதி "என்றென்றும்" ஒலிக்கும்.

"நீங்கள் எனக்கு இவ்வளவு கொடுத்தீர்கள், இன்னும் ஒன்றைக் கொடுங்கள் - நன்றியுள்ள இருதயம். நான் மகிழ்ந்திருக்கும் போது மட்டும் அல்ல, எப்போதும் என் இருதயம் உமக்கு நன்றி செலுத்திக்கொண்டே இருக்கட்டும்."

### சிறைவாசத்தில் நன்றிகள்

# எரேமியா 33ல் உள்ள தீர்க்கதரிசனம்



**Jeff Earl**

"இன்னும் களிப்பின் சத்தமும், மகிழ்ச்சியின் சத்தமும், மணவாளனின் சத்தமும், மணவாட்டியின் சத்தமும் சேனைகளின் கர்த்தரைத் துதியுங்கள், கர்த்தர் நல்லவர், அவர் கிருபை என்றுமுள்ளதென்று சொல்லுகிறவர்களின் சத்தமும், கர்த்தருடைய ஆலயத்துக்கு ஸ்தோத்திரபலிகளைக் கொண்டு வருகிறவர்களின் சத்தமும் கேட்கப்படும் என்று கர்த்தர் சொல்லுகிறார். அவர்கள் முன்னிருந்தது போலிருக்கும்படி தேசத்தின் சிறையிருப்பைத் திருப்புவேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்." (எரேமியா *33:11*)


பாபிலோனின் இராணுவம் எருசலேமை முற்றுகையிட்டதையும், நகரம் கைப்பற்றப்படும் என்றும் சிதேக்கியா பாபிலோனுக்கு சிறைப்பட்டுப் போவார் என்றும் எரேமியாவின் தீர்க்கதரிசனத்தையும் எரேமியா 32ம் அதிகாரம் விவரிக்கிறது. எரேமியா தனது உறவினரிடமிருந்து ஆனத்தோத்தில் உள்ள வயலை வாங்கி, நிலத்தின் உரிமையைப் பற்றிய எதிர்கால சாட்சியத்திற்காக, அதை ஒரு "மண் பாத்திரத்தில்" வைத்து, வயலில் மறைத்துவைக்கும்படி தேவனால் வழிநடத்தப்பட்டார். கல்தேயர்கள் (பாபிலோனியர்கள்) விரைவில் நிலத்தை கையகப்படுத்தினாலும் இந்த கொள்முதல் முடிந்தது. யூதாவின் துன்மார்க்கம், பாகால் வழிபாடு மற்றும் இறுதியாக மோளேகிற்கு தங்கள் குமாரத்திகளையும், குமாரர்களையும் பலியாக ஒப்புக்கொடுத்து அவர்கள் சீரழிந்ததன் காரணத்தினால் கல்தேயர்கள் நகரத்தைக் கைப்பற்ற அனுமதிக்கப்பட்டதாக எரேமியா விளக்கினார். பின்னர் இஸ்ரயேலர்கள் தேசத்திற்கு திரும்புவார்கள் என்றும், வயல் நிலங்கள் வாங்கப்படும் என்றும் தேவன் அவர்களுடன் நித்திய உடன்படிக்கை செய்வார் என்றும் எரேமியா தீர்க்கதரிசனம் கூறினார்.

### பாபிலோனால் யூதாவின் அழிவு மற்றும் அனைத்து இஸ்ரயேலின் மறுசீரமைப்பு

33 ம் அதிகாரத்தின் தொடக்கத்தில், தேவன் எரேமியாவிடம் இரண்டாவது முறையாக பேசினார். (ஒருவேளை கனவில்) அப்போது அவர் சிதேக்கியாவின் காவற்சாலையின் முற்றத்திலே கைதியாக இருந்தார். தேவன் அவருக்கு எதிர்காலத்தைப் பற்றியும், எதிர்காலத்தில் பாபிலோனின் சிறையிருப்பையும், தொலைதூர எதிர்காலத்தில் இஸ்ரயேலின் மறுசீரமைப்பைப் பற்றியும் கூறினார். இராஜாக்களின் வீடுகளாக இருந்தாலும் கல்தேயர்களுக்கு எதிராக தற்காத்துக்கொள்ள இடிக்கப்பட்டது, எருசலேம் குடியிருப்பாளர்களின் படுகொலையை யூதாவால் நிறுத்த முடியாது. (வசனம் 4) கல்தேயர்கள், "மனித சடலங்களால்" அவைகளை நிரப்புவார்கள் என்று தேவன் எச்சரித்தார். (வசனம் 5)"அவர்களின் எல்லா அக்கிரமங்கள்" நிமித்தமாக யூதா மீதான தண்டனையாக இருக்கும்.

ஆறாம் வசனத்தில் தொனி மாற்றப்பட்டு," அவர்களுக்கு சவுக்கியமும் ஆரோக்கியமும் வரப்பண்ணி, அவர்களைக் குணமாக்கி, அவர்களுக்குப் பரிபூரண சமாதானத்தையும் சத்தியத்தையும் வெளிப்படுத்துவேன்" என்ற வாக்குத்தத்தம் கொடுக்கப்படுகிறது. இறுதியில், தேவன் "யூதாவின் சிறையிருப்பையும், இஸ்ரயேலின் சிறையிருப்பையும் திருப்பி, முன்னிருந்ததுபோல அவர்களைக் கட்டுவிப்பார்" என்பதை எரேமியா கற்றுக்கொண்டார். (வசனம் 7) இந்த மறுசீரமைப்பின் கருத்து மூன்று முறை 33ம் அதிகாரத்தில் சொல்லப்படுகிறது. (7,11, 26 வசனங்கள்) ஏழாம் வசனம் இரண்டு மற்றும் பத்து






கோத்திர இராஜ்யங்களின் மறுசீரமைப்பை விவரிக்கிறது. அசீரியர்கள் பத்து கோத்திரத்து இராஜ்யத்தை ஏற்கனவே கைப்பற்றியிருந்தனர். பாபிலோனுக்கு ஒதுக்கப்பட்ட நேரத்திற்குப் பிறகு இஸ்ரயேலர்கள் திரும்பி வந்து, தேசத்தில் மீண்டும் நிறுவப்பட்டனர். இருப்பினும், தீர்க்கதரிசனத்தின் முழுமையான நிறைவேற்றம், சுவிசேஷ யுகத்தின் தற்போதைய அறுவடை காலத்தில் அனைத்து இஸ்ரயேலர்களையும் சீரமைப்பதாகும். 1878 ஆம் ஆண்டு இஸ்ரயேலர்கள் வாக்குத்தத்தம் செய்த தேசத்திற்கு மீண்டும் கூட்டிச் சேர்ப்பது, இராஜ்யத்தை அறிமுகப்படுத்தும் வரை தொடரும். அப்போது எசேக்கியேல் 37:14ம் வசனம் இஸ்ரயேலின் 12 கோத்திரங்களுக்கும் நிறைவேறும். "என் ஆவியை உங்களுக்குள் வைப்பேன், நீங்கள் உயிரடைவீர்கள், நான் உங்களை உங்கள் தேசத்தில் வைப்பேன், அப்பொழுது நான் கர்த்தர் என்ற அறிந்துகொள்வீர்கள். இதைச் சொன்னேன், இதைச் செய்வேன் என்ற கர்த்தர் உரைக்கிறார் என்ற சொல் என்றார்."

ஆமோஸ் வசனங்களும் இஸ்ரயேலின் மறுசீரமைப்பை விவரிக்கிறது - "...அந்நாளிலே விழுந்து போன தாவீதின் கூடாரத்தை நான் திரும்ப எடுப்பித்து, அதின் திறப்புகளை அடைத்து, அதில் பழுதாய்ப் போனதைச் சீர்ப்படுத்தி, பூர்வநாட்களிலிருந்தது போல அதை ஸ்தாபிப்பேனன்று....... திராட்சத் தோட்டங்களை நாட்டி, அவைகளுடைய பழரசத்தைக் குடித்து.....நான் அவர்களுக்குக்கொடுத்த தேசத்திலிருந்த அவர்கள் இனிப் பிடுங்கப்படுவதில்லை யென்று உன் தேவனாகிய கர்தத்ர் சொல்லுகிறார் என்றார். " எரேமியா 31:31 ல் தேவன் "இஸ்ரயேல் குடும்பத்தோடும் யூதா குடும்பத்தோடும் புது உடன்படிக்கை..." பண்ணும் நேரத்தை விவரிக்கிறார். "இந்தப்பிரகாரம் இஸ்ரயேலரெல்லாரும் இரட்சிக்கப்படுவார்கள்.....இதுவே நான் அவர்களுடனே செய்யும் உடன்படிக்கை என்றும் எழுதியிருக்கிறது." என்று பவுல் ரோமர் 11:26-27ல் கூறுகிறார். எசேக்கியேல் 37:19, 22 , யூதாவையும் இஸ்ரயேலையும் இரண்டு கோல்களை ஒன்றாக இணைவதாக விவரிக்கிறது. இது தேவனுடைய கரத்தின் கீழ் ஒன்றுபட்ட தேசத்தின் சித்திரம். கர்த்தர் தம்முடைய ஜனங்களுக்குக் காட்டிய இரக்கம் எட்டாவது வசனத்தில் விவரிக்கப்பட்டுள்ளது. "அவர்கள் எனக்கு விரோதமாய் குற்றஞ்செய்த அவர்களுடைய எல்லா அக்கிரமங் களுக்கும் அவர்களை நீங்கலாக்கிச் சுத்திகரித்து, அவர்கள் எனக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்து, எனக்கு விரோதமாய்த் துரோகம் பண்ணின அவர்களுடைய எல்லா அக்கிரமங்களையும் மன்னிப்பேன்." (எரேமியா31:8)தேசிய அளவில் அவர்கள் செய்த பாவங்களுக்கு மனந்திரும்பி ஒப்புதல் வாக்கு மூலம் கொடுப்பதால், அவர்கள் தேவனுடைய மன்னிப்பைப் பெறுவார்கள். இதை சகரியா 12:10ம் வசனம் விவரிக்கிறது. இஸ்ரயேலின் கண்கள் இயேசுவை தங்கள் மேசியாவாக அங்கீகரிக்கும் போது திறக்கப்படும். அப்போது "நான் என் நியாயப்பிரமாணத்தை அவர்கள் உள்ளத்திலே வைத்து, அதை அவர்கள் இருதயத்திலே எழுதி..." (எரேமியா31:33) எருசலேம் நகரத்தின் முக்கியத்துவத்தை எரேமியா33:9 விவரிக்கிறது."நான் அவர்களுக்குச் செய்யும் நன்மையையெல்லாம் கேட்கப்போகிற பூமியின் எல்லா ஜாதிகளுக்கு முன்பாக அது எனக்கு மகிழ்ச்சியுள்ள கீர்த்தியாயும் புகழ்ச்சியாயும் மகிமையாயும் இருக்கும், நான் அவர்களுக்கு அருளிச்செய்யும் எல்லா நன்மையினிமித்தமும் எல்லாச்சமாதானத்தினிமித்தமும் இவர்கள் பயந்து நடுங்குவார்கள் என்று இஸ்ரயேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார்."


## சந்தோஷம் மற்றும் மகிழ்ச்சியின் குரல்

பாபிலோன் எருசலேமை அழித்ததைத் தொடர்ந்து சுற்றியுள்ள நிலம் பாழடைந்ததை எரேமியா 33:10

விவரிக்கிறது. இங்கும் கூட எதிர்கால மறுசீரமைப்பின் வாக்குறுதி உள்ளது. "இன்னும் களிப்பின் சத்தமும், மகிழ்ச்சியின் சத்தமும், மணவாளனின் சத்தமும், மணவாட்டியின் சத்தமும் சேனைகளின் கர்த்தரைத் துதியுங்கள், கர்த்தர் நல்லவர், அவர் கிருபை என்றுமுள்ளதென்று சொல்லுகிறவர்களின் சத்தமும், கர்த்தருடைய ஆலயத்துக்கு ஸ்தோத்திர பலிகளைக் கொண்டுவருகிறவர்களின் சத்தமும் கேட்கப்படும் என்று கர்த்தர் சொல்லுகிறார். அவர்கள் முன்னிருந்தது போலிருக்கும்படி தேசத்தின் சிறையிருப்பைத் திருப்புவேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். "(எரேமியா33:11) இந்த வசனம் எரேமியா 25:10க்கு நேர்மாறாக நிற்கிறது. "மகிழ்ச்சியின் சத்தத்தையும், சந்தோஷத்தின் சத்தத்தையும், மணவாளனின் சத்தத்தையும், மணவாட்டியின் சத்தத்தையும், எந்திரத்தின் சத்தத்தையும் விளக்கின் வெளிச்சத்தையும் அவர்களிலிருந்து நீங்கப்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்." பாபிலோனியர்கள் தேசத்தை அழித்தபோது, இந்த அச்சுறுத்தும் எச்சரிக்கைகள் வந்தது. ஆனால் வரவிருக்கும் அற்புதமான ஆசீர்வாதங்களில் அவை அனைத்தும் நீக்கப்பட்டன. எரேமியா இல், "களிப்பின் சத்தம்" இஸ்ரயேலின் மறுசீரமைப்பையும், "மகிழ்ச்சியின் சத்தம்" பாவ மன்னிப்பையும் குறிக்கலாம். மகிழ்ச்சி, புகழ்ச்சி மற்றும் பாடுதல் போன்ற சைகைகளால் சந்தோஷம் வெளிப்புறமாகவும் தன்னிச்சையாகவும் வெளிப்படுத்தப் படுகிறது. மகிழ்ச்சி என்பது ஒரு உள்ளான திருப்தி. இந்த இரண்டு குணங்களும் ஏசாயா 51:3ல் காணப்படுகிறது. "கர்த்தர் சீயோனுக்கு ஆறுதல்செய்வார், அவர் அதின் பாழான ஸ்தலங்களையெல்லாம் தேறுதலடையச் செய்து, அதின் வனாந்தரத்தை ஏதேனைப்போலவும், அதின் அவாந்தரவெளியைக் கர்த்தரின் தோட்டத்தைப் போலவும் ஆக்குவார், சந்தோஷமும் மகிழச்சியும் துதியும் கீத சத்தமும் அதில் உண்டாயிருக்கும்."இதே போன்ற ஒரு கருத்தை எரேமியா 30:19 வெளிப்படுத்துகிறது. "அவைகளிலிருந்து ஸ்தோத்திரமும் ஆடல் பாடலின் சத்தமும் புறப்படும், அவர்களை வர்த்திக்கப்பண்ணுவேன், அவர்கள் குறுகிப்போவதில்லை. அவர்களை மகிமைப்படுத்துவேன், அவர்கள் சிறுமைப்படுவதில்லை." எரேமியா 17:26 ம் வசனம் தகன பலிகள் மற்றும் போஜன பலிகளை "கர்த்தருடைய ஆலயத்துக்குக் கொண்டுவரப் படும் ஸ்தோத்திரபலிகள்" என்று குறிப்பிடுகிறது. மணமகள் மற்றும் மணமகனின் திருமண விழாவின் மகிழ்ச்சி, தேசத்தின் ஜனங்கள் தேவனுக்கு நன்றி செலுத்தும் போது, பாடும் குரல்களுடன் தேசத்திற்கு திரும்பும். அவர்கள் எருசலேமில் முற்பிதாக்கள் ஆட்சியின் மூலம் இஸ்ரயேலுடன் புதிய உடன்படிக்கையை செயல்படுத்துவார்கள். எரேமியா 33:12 மற்றும் 13, முன்பு பாழாக்கப்பட்ட தேசம், "மந்தைகளை மேய்ப்பவர்களின் வாசஸ்தலமாக" மாறியது பற்றி பேசுகிறது. இது மீண்டும் ஒரு பூமிக்குரிய இராஜ்யத்தைக் குறிக்கிறது. ஏசாயா தேசத்தின் மறுசீரமைப்பைப் பற்றி பேசுகிறது. ".. அவர் அதின் பாழான ஸ்தலங்களையெல்லாம் தேறுதலடையச் செய்து...வனாந்தரத்தை ஏதேனைப் போலவும்... கர்த்தரின் தோட்டத்தைப் போலவும் ஆக்குவார்...." எரேமியா 33:14-16 வில் நீதியுள்ள கிளையை எழுப்பும் வாக்குறுதியை நிறைவேற்றுவேன் என்று தேவன் உறுதியளித்தார். (எரேமியா23:5, 6 காண்க) 15ம் வசனத்தில் உள்ள நீதியான கிளை "தாவீதின் வழியாக வரும்" இயேசுவே. இஸ்ரயேலை மீண்டும் தேவனிடம் வழிநடத்தும் முற்பிதாக்களில் ஒருவரான தாவீது தாமே இஸ்ரயேலின் விசுவாசமுள்ள இராஜாவாக இருந்தார். (சங்கீதம் 45:16) இவ்வாறு சீயோனிலிருந்தும் எருசலேமிலிருந்தும் தேவனுடைய வார்த்தை வெளிப்படும். இராஜ்யத்தின் பரலோக ஆட்சியாளர்கள் அதிகாரம் செலுத்தும் வழியாக இஸ்ரயேல் இருக்கும். (மீகா4:1-2, ஏசாயா 2:3) அர்மகெதோனைத் தொடர்ந்து இஸ்ரயேலில் ஒரு பரிசுத்த கூட்டம் எஞ்சியிருப்பார்கள். பின்னர், பரலோக சீயோனிலிருந்து வரும் சட்டம் மீண்டும் நிறுவப்பட்ட இஸ்ரயேலின் மூலம் முழு பூமியையும் சென்றடையும்.

## இராஜா மற்றும் ஆசாரியர்கள்

"இஸ்ரயேல் வம்சத்தின் சிங்காசனத்தின் மேல் உட்காரத்தக்க புருஷன் தாவீதுக்கு இல்லாமற் போவதில்லை. தகன பலியிட்டு, போஜனபலிசெலுத்தி, நாள்தோறும் பலியிடும் புருஷன் எனக்கு முன்பாக ஆசாரியருக்கும் லேவியருக்கும் இல்லாமற் போவதுமில்லை என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றார்." (எரேமியா33:17, 18)




இயேசு தாவீதின் வம்சத்தைச் சேர்ந்தவர், இராஜ்யத்தின் போது இஸ்ரயேலையும் உலகையும் ஆள்வார். "இதோ, ஒரு இராஜா நீதியாக அராசாளுவார், பிரபுக்களும் நியாயமாகத் துரைத்தனம் பண்ணுவார்கள்." (ஏசாயா32:1) நம்முடைய கர்த்தராகிய இயேசுவே அந்த இராஜாவாக இருப்பார். தாவீது உட்பட முற்பிதாக்கள் "பூமி எங்கும் பிரபுக்களாக" பணியாற்றுவார்கள். (சங்கீதம் 45:16) மகிமையுள்ள பரிசுத்தவான்கள் கிறிஸ்துவுடன் ஆட்சி செய்வார்கள். மேலும் மனுக்குலத்தை மீண்டும் தேவனிடம் கொண்டு வர, கிறிஸ்துவுடன் ஆசாரியர்களாக பணியாற்றுவார்கள். (வெளிப்படுத்தல் 20:6) 1)

இராஜ்யத்தில், பழைய ஏற்பாட்டின் சில சடங்குகளும், பிரமாணங்களும் மீண்டும் நிறுவப்படும் என்ற கருத்தை ஆசிரியர் ஆதரிக்கிறார். ஆனால் இது பதிப்பாசிரியர்களின் பார்வை அல்ல. எனினும், இக்கருத்தை, மறைந்த சகோதரர் ஃபிராங்க்ஷைல்லியூவும் ஆதரித்தார். மேலும் இந்த கருத்து காவற்கோபுரத்தில் ஒரு சாத்தியக்கூறு என குறிப்பிடப்பட்டுள்ளது. மூன்றாவதாக ஒரு ஆலயம் கட்டப்படும் என்றும் பலிகள் மீண்டும் செலுத்தப்படும் என்று ஆசிரியர் கூறுகிறார். அவர் R1733 ல் மேற்கோள் காட்டுகிறார். உலகிற்குப் பாடங்கள் கற்பிப்பதற்கு, தேவன் "ஓய்வுநாள் மற்றும் பல்வேறு பண்டிகைகள் மற்றும் பலிகளையும் கூட மறுபடியும் நிறுவுவார் என்று கூறுகிறார். சில வசனங்களும் அவ்வாறு சுட்டிக்காட்டுவதாக தெரிகிறது. R2507 ல் இருந்து, பார்க்கும்போது, எசேக்கியேல் 47:1-12 ல் விவரிக்கப்பட்ட இந்தத் தரிசனத்துடன் இணைக்கப்பட்ட பல விவரங்கள், எதிர்காலத்தில், நேரடியான நிறைவேற்றத்தைக் கொண்டிருக்கும் என்ற நம்பிக்கைக்கு கணிசமான ஆதாரத்தை அளிக்கும் வகையில், இஸ்ரயேல் தேசமும் அப்படிப்பட்ட சூழ்நிலைக்கு உட்பட்டதாக உள்ளது. சகோதரர் பிராங்க் ஷைல்லியூ தனது வெளியிடப்பட்ட பிரதிகளில், மூன்றாம் ஆலயத்தின் பார்வையில் கணிசமான பல விவரங்களைச் சேர்த்தார்.

"கர்த்தர் தெரிந்துகொண்ட இரண்டு வம்சங்களையும் வெறுத்துப்போட்டாரென்று இந்த ஜனம் சொல்லி, தங்களுக்கு முன்பாக என் ஜனம் இனி ஒரு ஜாதியல்லவென்று அதைத் தூஷிக்கிறார்களென்பதை நீ காண்கிறதில்லையோ? "என்று எரேமியா33:24 வில் வாசிக்கிறோம். இஸ்ரயேலுக்கு தேவன் அனுமதித்த தண்டனை இதை பரிந்துரைப்பதாக தோன்றுகிறது. ஆயினும், கொடுக்கப்பட்ட தண்டனை நிரந்தர நிராகரிப்பு அல்ல என்பதை தேவன் மீண்டும் 25ம் வசனத்தின் பேசினார். 25 மற்றும் 26 வசனங்களில், தேவன் இஸ்ரயேலுக்கான அவரது அர்ப்பணிப்பு இரவும் பகலும் சுழற்சி போல் உறுதியாக இருந்தது என்று கூறுகிறார். "வானத்துக்கும் பூமிக்கும் குறித்திருக்கிற நியமங்களை நான் காவாமல், பகற்காலத்தையும் இராக்காலத்தையுங் குறித்து நான் பண்ணின உடன்படிக்கை அற்றுப்போகிறது உண்டானால், அப்பொழுது நான் யாக்கோபின் சந்தியையும், என் தாசனாகிய தாவீதின் சந்ததியையும் தள்ளி, நான் ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு என்பவர்களின் சந்ததியை ஆளத்தக்கவர்களை அதிலிருந்து எடுக்காதபடிக்கு வெறுத்துப்போடுவேன், அவர்களுடைய சிறையிருப்பை நான் திருப்பி, அவர்களுக்கு இரங்குவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றார்."(25,26) "ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு என்பவர்களின் சந்ததியை"(வசனம் 26) மீண்டும் தேவனுடைய இரக்கத்தைப் பெறுவார்கள்.

26ம் வசனத்தின் முடிவு, எரேமியா 33ம் வசனம், 11ம் வசனத்தின் ஒரு உறுதிமொழியை மீண்டும் கூறி

முடிவடைகிறது. புது உடன்படிக்கை ஸ்தாபிக்கப்படும் மற்றும் அவருடைய இரக்கம் இஸ்ரயேலுக்கு நீட்டிக்கப்படும் என்பதற்கு இதுவே தேவனுடைய உத்தரவாதமாகும். எரேமியா 33 ல், கல்தேயர்களின் (பாபிலோனியர்களின்)கைகளில் யூதாவின் பயங்கரமான அழிவைத் தொடர்ந்த இஸ்ரயேலின் இரு வீடுகளும் மீட்டெடுக்கப்படும் என்பதை அறிவிக்கிறது. தேவன் அவர்களை முழுமையாக மன்னிப்பதாக வாக்களிக்கிறார்.

அர்மகெதோனின் போது விசுவாசத்தில் நிலைத்திருக்கும் இஸ்ரயேலில் இருப்பவர்கள், ஒருங்கிணைந்த தேசத்திற்கு தேவன் அளித்த வாக்குத்தத்தங்கள் நிறைவேற்றுவதில் முதலில் மகிழ்ச்சியடைவார்கள். மேலும் மனுக்குலத்தின் முழு உலகத்திற்கும் ஆசீர்வதங்களைக் கொண்டுவரும்படியாக, முற்பிதாக்களினால் வழிநடத்தப்பட்ட புதிய உடன்படிக்கை ஏற்பாட்டை ஆர்வத்துடன் பின்பற்றுவார்கள்.

## நன்றி செலுத்தும் ஒரு பாடல்

# யெகோவா தேவனுக்கு நான் என்ன கொடுப்பேன்



*Keith Belhumeur*

"கர்த்தர் எனக்குச் செய்த எல்லா உபகாரங்களுக்காகவும், அவருக்கு என்னத்தைச் செலுத்துவேன். இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்துக்கொண்டு, கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுவேன்." (சங்கீதம் *116:12-13*)

116ம் சங்கீதம், தனிப்பட்ட வாழ்க்கை மற்றும் மரண சூழ்நிலையிலிருந்து விடுவித்ததற்காக யெகோவா தேவனுக்கு நன்றி செலுத்தும் மற்றும் துதிக்கும் ஒரு அன்பான பாடலாகும். பெரும்பாலும் இதை தாவீது இராஜா தாமே இதை அனுபவித்திருக்கலாம். 113-118 ஆம் சங்கீதம் எகிப்திய ஹாலேலில் ஒன்றாகும். இது பஸ்கா போஜனம் மற்றும் பிற எபிரெய பண்டிகைகளின் போது பாடப்பட்டது. ஹலால் என்ற எபிரெய வார்த்தைக்கு "புகழ்" என்று பொருள். "யெகோவா தேவனுக்கு ஸ்தோத்திரம்" என்ற ஆச்சரியத்துடன் முடிவடைகிறதினால், ஹாலால் சங்கீதங்கள் என்று அழைக்கப்படுகிறன்றது. சில மொழிபெயர்ப்புகள் 19ம் வசனத்தில் காணப்படுவது போல், "யெகோவா தேவனுக்கு ஸ்தோத்திரம்", "கர்த்தருக்கு ஸ்தோத்திரம்" அல்லது "ஹல்லேலூயா" என்ற சொல்லப்படுகிறது. அன்பு, பக்தி, நன்றி செலுத்துதல் மற்றும் விடுதலை ஆகியவற்றின் ஒரு சங்கீதம் ஆகும். இது தேவனுடைய கவனத்தையும் அக்கறையையும் பற்றிய ஆழ்ந்த நெருக்கமான மற்றும் தனிப்பட்ட கண்ணோட்டத்தில் இருந்து உருவாகிறது. தேவனை நம்பியிருக்கும் அனைவரும் இந்த மாதிரியான சூழ்நிலையை, நம் சொந்த அனுபவங்களாக மாற்றி அதிலிருந்து பெலம் பெறலாம். நம்முடைய இன்றைய நாளில், நாம் எகிப்தாகிய உலகிலிருந்து விடுவிக்கப்பட்ட ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள். தேவன் இஸ்ரயேலரை எகிப்திலிருந்து விடுவித்தது போல், இப்போதும் அவர் தம்முடைய ஆவிக்குரிய இஸ்ரயேலர்களை வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்குக் கொண்டு வருகிறார். "அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்."(ரோமர் 8:28) பின்பு நம்முடைய கடினமான காலங்களில் நாம் நம்பிக்கையையும் நன்றி செலுத்தும் மனதையும் பெற முடியும். இயேசுவும் அவருடைய அப்போஸ்தலர்களும் கெத்செமனேவுக்குப் புறப்படுவதற்கு முன், கடைசி இராப்போஜனத்திற்குப் பிறகு இந்தப் பாடலைப் பாடியிருக்கலாம். (மத்தேயு 26:30, மாற்கு 14:26)

தாழ்மையான வேண்டுகோளுக்கே யெகோவா தேவன் செவி சாய்கிறார் என்றும் முறையீட்டின் குரலைக் அவர் கேட்கிறார் என்றும் 116 வது சங்கீதம் நமக்கு நினைப்பூட்டுகிறது. அவர் நம்மிடம் செவி சாய்க்க நாம் அவரிடம் பேசிக்கொண்டிருக்கவேண்டும். "மேலும், நீங்கள் விசுவாசமுள்ளவர்களாய் ஜெபத்திலே எவைகளைக் கேட்பீர்களோ அவைகளையெல்லாம் பெறுவீர்கள் என்றார்." (மத்தேயு 21:22) யெகோவா தேவன் நீதியுள்ளவரும், இரக்கமுள்ளவரும், கிருபையுள்ளவரும், அவரிடம் கேட்பதற்கு முன்பே நமக்கு என்ன தேவை என்பதையும் அவர் அறிந்தவராகவும் இருக்கிறார். (மத்தேயு 6:8) நாம் இடுக்கமான வழியில் நடக்கவேண்டும், நம்முடைய விண்ணப்பங்கள் யெகோவா தேவனின் குணாதிசங்கள் (அன்பு, ஞானம், நீதி மற்றும் வல்லமை) கொள்கைகள், கட்டளைகள் மற்றும் அவருடைய வார்த்தையில் வெளிப்படுத்தப்பட்ட தரங்களுக்கு இசைவாக இருக்கவேண்டும். (ஏசாயா 28:10) ஆனால் நமக்கு காரியங்கள் தேவை என்பதை அவர்




The Hallel Psalms were sometimes sung at Passover.

அறிந்திருக்கிறார். (லூக்கா12:30) நாம் ஒவ்வொரு சூழ்நிலையிலும் நாம் தொடர்ந்து தேவன் மீது நம்பிக்கை கொண்டு, விசுவாசம் வைத்து, அவரையே சார்ந்திருக்கவேண்டும். நம் வாழ்நாள் முழுவதிலும், சாத்தியமற்றதாகத் தோன்றும் சூழ்நிலைகளிலும் "நாம் யெகோவா தேவனை நோக்கிக் கூப்பிடலாம்" என்று நினைவுப்படுத்தப்படுகிறோம். யெகோவா தேவன் நமக்கு செய்த எல்லா நன்மைகளுக்காவும் நாம் அவருக்கு என்னத்தைச் செலுத்துவோம். ? (சங்கீதம் 116:12) இதற்கான பதிலை சங்கீதக்காரர் தருகிறார் - "நான் கர்த்தருக்குச் செய்த பொருத்தனைகளை அவருடைய ஜனங்களெல்லாருக்கு முன்பாகவும் செலுத்துவேன்." (சங்கீதம் 116:14) நாம் யெகோவா தேவனுக்கு என்ன பொருத்தனைச் செலுத்துகிறோம், செலுத்தும் முறை என்னவாக இருக்கவேண்டும்?

## யெகோவா தேவனுக்கு ஒரு பொருத்தனை

முதலாவது பொருத்தனை என்றால் என்ன என்பதை நாம் முதலில் புரிந்துகொள்ள விரும்பலாம். பொருத்தனை என்பது ஒரு பெயர்ச்சொல் என வரையறுக்கிறது, அதாவது ஒரு உறுதியான வாக்குத்தத்தம், உறுதிமொழி, பத்திரம், உடன்படிக்கை அல்லது அர்ப்பணிப்பு என்று ஆக்ஸ்போர்டு மொழிகள் அகராதி வரையறுக்கிறது. பொருத்தனை என்பது ஒரு வினைச்சொல்லாகவும் பயன்படுத்தப்படுகிறது. அதாவது ஒரு குறிப்பிட்ட காரியத்தைச் செய்வதாக உறுதியளிக்கவும் அல்லது சத்தியம் செய்யவும் அதன் தொன்மையான வினை வடிவில், ஒரு பொருத்தனை என்பது ஒருவருக்கு அல்லது ஏதாவது ஒரு தெய்வத்திற்கு அர்ப்பணிப்பதாகும். பழைய ஏற்பாட்டில் பொருத்தனை என்ற வார்த்தை நீடர் (*neder*) என்ற எபிரேய வார்த்தையின் மொழிபெயர்ப்பாகும். (ஸ்டிராங்க்ஸ் H5088) இதற்கு வாக்குறுதி என்று பொருள். மேலும் *nadar* H5087என்ற மூலத்திலிருந்து பெறப்பட்டது, இதற்கு வாக்குறுதி அளிப்பது என்று பொருள். {லேவியராகமம் 27ம் அதிகாரம்,யெகோவா தேவனுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட




பொருத்தனைகள், தசமபாகம் மற்றும் வாக்களித்தவைகளையும், ஜனங்கள், மிருகங்கள் அல்லது நிலத்தை மீட்பதற்கான அவைகளின் பண மதிப்பு தொடர்பான பிரமாணங்களை விவரிக்கிறது.} இந்த பொருத்தனை மோசேயின் சட்டத்தின் கீழ் மிகவும் தீவிரமான செயலாகும், இது எண்ணாகமம் 30ம் அதிகாரத்தில் விவரிக்கப்பட்டுள்ளது. "மோசே இஸ்ரயேல் புத்திரருடைய கோத்திரங்களின் தலைவரை நோக்கி - கர்த்தர் கட்டளையிடுவது என்னவென்றால், ஒருவன் கர்த்தருக்கு யாதொரு பொருத்தனை பண்ணினாலும், அல்லது யாதொரு காரியத்தைச் செய்யும்படி ஆணையிட்டுத் தன் ஆத்துமாவை நிபந்தனைக்குட் படுத்திக்கொண்டாலும், அவன் சொல்தவறாமல் தன் வாயிலிருந்து புறப்பட்ட வாக்கின்படியெல்லாம் செய்யக்கடவன்." (எண்ணாகமம் 30:1-2) யெகோவா தேவனுக்கு ஒரு பொருத்தனை என்றால் அதை லேசாக எடுத்துக்கொள்ளக்கூடாது. யெகோவா தேவனுக்கு பொருத்தனை செய்வதைப் பற்றிய முக்கியமான எச்சரிக்கை - பொருத்தனை செய்தால் அதை கட்டாயமாக நிறைவேற்றவேண்டும் !.மோசே அதை தேவனுடைய ஜனங்களுக்கு தெளிவுபடுத்தினார். "நீ உன் தேவனாகிய கர்த்தருக்குப் பொருத்தனை பண்ணியிருந்தால், அதைச் செலுத்தத் தாமதஞ் செய்யாதே, உன் தேவனாகிய கர்த்தர் அதை நிச்சயமாய் உன் கையில் கேட்பார், அது உனக்குப் பாவமாகும். நீ பொருத்தனை பண்ணாதிருந்தால், உன்மேல் பாவம் இல்லை. உன் வாயினால் சொன்னதை நிறைவேற்ற வேண்டும், உன் தேவனாகிய கர்த்தருக்கு உன் வாயினால்

நீ பொருத்தனைப் பண்ணிச் சொன்ன உற்சாகபலியைச் செலுத்தித் தீர்ப்பாயாக." (உபாகமம் 23:21-23) சாலொமோன் தனது முழு அனுபவத்துடனும் ஞானத்துடனும் இதே காரியத்தை மீண்டும் வலியுறுத்துகிறார். "நீ தேவனுக்கு ஒரு பொருத்தனைப் பண்ணிக்கொண்டால், அதைச் செலுத்தத் தாமதியாதே, அவர் மூடரில் பிரியப்படுகிறதில்லை, நீ நேர்ந்து கொண்டதைச் செய். நீ நேர்ந்து கொண்டதைச் செய்யாமற் போவதை பார்க்கிலும், நேர்ந்து கொள்ளாதிருப்பதே நலம். " (பிரசங்கி 5:4-5) ஒருவரின் பொருத்தனையின் பொறுப்பு, மோசேயின் நியாயப்பிரமாணத்தில் மிகத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. (எண்ணாகமம் 30)

நாம் யெகோவா தேவனிடம் என்ன பொருத்தனை செய்திருக்கிறோம்? எல்லா வகையான காரணங்களுக்காக, குறிப்பாக உபத்திரவமான காலங்களிலே, ஜனங்கள் பல விதமான பொருத்தனைகளை தேவனிடம் செய்வார்கள்.

வேதத்தில் பெரும்பாலும் பழைய ஏற்பாட்டில் பதிவு செய்யப்பட்ட பொருத்தனைகளின் எண்ணிக்கை ஆச்சரியமாக இருக்கிறது. திருமணம் தொடர்பான பொருத்தனைகள், ஆசரிப்புக் கூடாரம் அல்லது ஆலயத்தில் பலிகளுக்கு தொடர்பான பொருத்தனைகள், நசரேய விரதம் (எண்ணாகமம் 6:1-21) மற்றும் வேறு பல இதற பொருத்தனைகள். கிறிஸ்து பாவ மன்னிப்புக்காக தன்னைப் பாவநிவாரண பலியாகச் செலுத்துவதற்காக பொருத்தனை செய்தார். (மத்தேயு 26:28) யெகோவா தேவன் ஏற்கனவே வழங்கிய மற்றும் கொடுக்கப்பட்ட ஒன்றை அடைய நாம் பொருத்தனைச் செய்கிறோம். இது நன்றியை பதிலாக கொடுப்பதோடு இல்லாமல், இன்னும் நாம் கொடுப்பதற்கு வாய்ப்புண்டு. பொருத்தனைகள் பரிசுத்தமானது. அதை நாம் செலுத்தாவிட்டால் அதன் விளைவுகள் தீவிரமாக இருக்கும். தேவனுக்கு ஜீவ பலியாக நம்மை செலுத்துவதும் ஒரு பொருத்தனை யாகும். நம்முடைய சுயநலன்களையும் உலக பிரகாரமாக விருப்பங்களையும் விட்டுக்கொடுப்பதே இந்த பொருத்தனை. இது தேவனுடைய நோக்கங்களை நோக்கி உழைக்கக்கூடிய ஒரு பொருத்தனையாகும். இவை அனைத்து குணநலன்களையும் நாம் அர்ப்பணிப்பு என்கிறோம்.

## ஸ்தோத்திரம் செலுத்துவதற்கான பலிகளில் காணப்படும் அர்ப்பணிப்பு

சமாதான பலிகளுக்கான சமாதான பலிகள், அர்ப்பணிப்பின் பொருத்தனையில் சித்திரமாக காட்டபடலாம். இது லேவியாராகமம் 3 மற்றும் 7 ம் அதிகாரங்களில் விவரிக்கப்பட்டுள்ளது. சமாதான பலி ஒரு தன்னார்வ பலியாகும். இந்த பலியை செலுத்துபவர் மிருகத்தை ஆசரிப்புக்கூடார வாசலில் கொல்லவேண்டும். யெகோவா தேவனுக்கு செலுத்தப்பட்ட பின் மிருகத்தின் மார்பகம் (அசைவாட்டும் பலிக்கும்) மற்றும் ஏறெடுத்துப் படைக்கும் முன்னந்தோள்பட்டையும் ஆசாரியனுக்கு ஒதுக்கப்பட்டது. அர்ப்பணிப்பைக் குறிக்கும்படியாக, மிருகத்தின் இந்த பகுதிகள் யெகோவா தேவனுக்கு முன்பாக பக்கவாட்டாகவும், மேலும் - கீழாகவும் அசைவாட்டப்படும். (இது தற்செயலாக ஒரு சிலுவை வடிவத்தை உருவாக்கியது, எகிப்தில் உள்ள தலைச்சன்களை பாதுகாப்பதற்காக, வாசற்படியில் தெளிக்கப்படும் பஸ்கா ஆட்டுக்குட்டியின் இரத்தம் இதை நினைப்பூட்டுகிறது.) பின்னர் அவை தோலோடு ஆசாரியர்களுக்கு ஒதுக்கி வைக்கப்பட்டது. (லேவியராகமம் 7:8-10, 14, 31, 34) ஸ்தோத்திரம் செலுத்துவதற்கான சமாதான பலியில், ஆசாரியர், "இரத்தத்தை பலிபீடத்தின் மேல்" தெளிப்பார். (லெவியராகமம் 3:2) உட்புறத்தில் உள்ள மற்றும் சிறுநீரகங்கள் மற்றும் கல்லீரலில் உள்ள கொழுப்பு ஆகியவற்றை அகற்றி, அதை பூசாரி தகன பலியாக பலிபீடத்தின் மேல் சுகந்த வாசனையான பலியாக தகனிப்பார். (லேவியராகமம் 3:5, 6:12) பலியின் மீதியுள்ளதை ஆசாரியர் வைத்துகொள்ளுவதுமில்லை, பலிபீடத்தின் மேல் தகனிப்பதுமில்லை. அதை பலிசெலுத்துபவரிடமே கொடுக்கப்படும். பொதுவாக குடும்பத்தினரால் யெகோவா தேவனுக்கு கொண்டாடப்படும் விருந்தில் இது பயன்படுத்தப்பட்டது. (லேவியராகமம் 7:11-21, உபாகமம் 12:6, 7, 27:7)

சமாதான பலி ஸ்தோத்திரம் செலுத்துவதற்கான பலியாக இருந்தால், "எண்ணெயிலே பிசைந்த புளிப்பில்லா அதிரசங்களையும், எண்ணெய் பூசப்பட்ட புளிப்பில்லா

அடைகளையும் எண்ணெயிலே பிசைந்த வறுக்கப்பட்ட மெல்லிய மாவினால் செய்து அதிரசங்களையும் படைக்கக்கடவன். ... அல்லாமல், புளித்தமாவினால் செய்த அப்பத்தையும், தன்னுடைய சமாதான பலியாகிய ஸ்தோத்திர பலியோடுக்கூடப் படைக்கவேண்டும் புளிப்பில்லாத அப்பங்களோடு அது கலக்கப்பட வேண்டும். (லேவியராகமம் 7:12-13)இந்த பலிகளின் உண்ணப்பட்ட பகுதிகள் அதே நாளில் உட்கொள்ளப்படும். "சமாதான பலியாகிய ஸ்தோத்திரபலியின் மாம்சமானது செலுத்தப்பட்ட அன்றைத்தினமே புசிக்கப்படவேண்டும், அதில் ஒன்றும் விடியற்காலமட்டும் வைக்கப்படலாகாது. அவன் செலுத்தும் பலி பொருத்தனையாவது உற்சாகபலியாயாவது இருக்குமானால், அது செலுத்தப்படும் நாளிலும், அதில் மீதியாயிருக்கிறது மறுநாளிலும் புசிக்கப்படலாம். பலியின் மாம்சத்தில் மீதியாயிருக்கிறது மூன்றாம் நாளில் அக்கினியிலே சுட்டெரிக்கப்படக்கடவது."(லேவியராகமம் 7:15-17) இந்த சித்திரத்தில், சமாதான பலியில் பலியாக பலியிடப்பட்ட மிருகம், நம்முடைய ஜீவ பலியையும் தேவன் மீதும் நம் கொண்ட பக்தியையும் குறிக்கிறது. தகன பலியில், சமாதான பலியின் கொழுத்த பாகங்கள் பலிபீடத்தின் மீது வைக்கப்படும். இது அங்கீகரிக்கப்படும் சமாதான பலியைச் செலுத்தும் இயேசுவைக் குறிக்கிறது. எண்ணெயில் பிசைந்த புளிப்பில்லா அப்பம் ஸ்திரீயின் வித்திலிருந்தும் (ஆதாமின் வித்து அல்ல) பரிசுத்த ஆவியினாலும்,(மத்தேயு 1:20 ) பெறப்பட்ட இயேசுவின்



Unleavened cakes anointed with oil

பரிபூரண மனிதத்தன்மையை நமக்கு நினைப்பூட்டுகிறது. எனவே இது நீதிமானாக்கப்பட்ட நிலையை குறிக்கலாம். எண்ணெய் பூசப்பட்ட அடைகள், இயேசுவின் ஞானஸ்நானம் மற்றும் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை (மத்தேயு3:16) அடையாளப்படுத்தலாம். இது மகிமைப்படுத்தப்படுவதை குறிக்கலாம். எண்ணெயிலே பிசைந்த புளிப்பில்லாஅதிரசங்களையும் ..... எண்ணெய் பூசப்பட்ட புளிப்பில்லா அடைகளும், இயேசவின் பொதுவான சோதனைகள் மற்றும் உபத்திரவத்தின் வெப்பத்தைத் தாங்கி வெற்றி பெற்றார் என்பதை காட்டுகிறது. (எபிரெயர் 2:17-18, 4:15) எனவே இது பரிசுத்தமாக்கப்படுதலை குறிக்கலாம். ஸ்தோத்திர பலியில், புளிப்புள்ள அப்பம் பலி செலுத்தப்படும் மற்றொரு தனித்துவமான காரணி உள்ளது. பலியின் இந்த பகுதி, நமது அர்ப்பணிக்கப்பட்ட நடையை குறிக்கலாம். நாம் அபூரணராக இருக்கும்போது, இரத்தம் தெளிக்கப்படுவதில் குறிப்பிடப்படும் இயேசுவின் இரத்தம் மற்றும் அவருடைய புண்ணியத்தின் மூலம் நாம் நம்மையே ஜீவ பலியாக யெகோவா தேவனுக்கு அர்ப்பணிக்கிறோம். எனவே, அவருடைய சபையாகிய சரீரத்தில் ஒரு பகுதியாக இணைகிறோம். எரிக்கப்பட்ட கொழுப்பு, இயேசுவின் பலி அங்கீகரிக்கப்பட்டதை காட்டுகிறது. மேலும் இதன் மேல் வைக்கப்படும் நம்முடைய பங்கும் அங்கீகரிப்பைப் பெறுகிறது. இது யெகோவா தேவனுக்கு சுகந்த வாசனையாகும்.

நம்முடைய அர்ப்பணிக்கப்பட்ட வாழ்க்கை ஸ்தோத்திர பலி மட்டுமல்ல, அது யெகோவா தேவனுக்கு நாம் செய்யும் பொருத்தனையாகும். நாம் கிறிஸ்துவின் மரணத்திற்குள்ளான ஜீவபலியாக நம்மை செலுத்துகிறோம். (ரோமர் 12:1, கொலோசேயர் 2:13, 1பேதுரு2:5 எபிரெயர் 9:23, கலாத்தியர் 3:27) இப்படியாக நாம் இயேசுவின் புண்ணியத்தால் யெகோவா தேவனின் அங்கீகாரத்தைப் பெறுகிறோம். சமாதான பலியில், ஒரு உறுதிமொழியுடன், பலியின் இறைச்சியை அன்றோ அல்லது மறுநாளோ உண்ண வேண்டும். அசுத்தமான ஒரு பொருளை இறைச்சி தொட்டால் அல்லது இரண்டாவது நாளுக்கு மேல் உண்ணப்படும் எந்த இறைச்சியும் அல்லது

பலி செலுத்துபவர் எந்த அசுத்தமான பொருளை தொட்டதினால் அசுத்தமானால், அப்பொழுது அந்த பலி ஏற்றுக்கொள்ள முடியாததாகிவிடும். மேலும் பலி செலுத்துபவர் தனது ஜனங்களிலிருந்து அறுப்புண்டு போவார். (லேவியராகமம் 7:17-21) தற்போதைய சுவிசேஷ யுகத்தின் போது, நாம் இடுக்கமான வழியில் நடந்து கிறிஸ்துவின் சரீரமாக மகிமைப்படுத்தப்படுவதை இது நமக்கு காட்டுகிறது. பின்னர் ஆயிரமாண்டு காலத்தில் மனித பரிபூரணத்திற்கு அனைத்து மனுக்குலமும் அங்கீகரிக்கப்படுவார்கள்.

"பலியின் மாம்சத்தில் மீதியாயிருக்கிறது மூன்றாம் நாளில் அக்கினியிலே சுட்டெரிக்கப்படக் கடவது." (லேவியராகமம் 7:17) இந்த இரண்டு யுகங்களுக்கு அப்பால் மத்தியஸ்தம் முடிவடையும் போது எந்த பலிகளும் அங்கீகரிக்கப்படுவதில்லை. எனவே நாம் உடன்படிக்கையின் போது செய்யக்கூடிய இந்த பொருத்தனை பரிசுத்தமானது. அதை விடாமுயற்சியுடன் நடைமுறைப்படுத்தவேண்டும். ஒருவர் பலியை தீட்டுப்படுத்தினால் அல்லது சரியான நேரத்தில் புசிப்பதற்கு தவறினால், " அது அங்கிகரிக்கப்படாது, அதைச் செலுத்தினவனுக்கு அது பலிக்காது, அது அருவருப்பாயிருக்கும், அதைப் புசிக்கிறவன் தன் அக்கிரமத்தைச் சுமப்பான்." (லேவியராகமம் 7:18, 20, 21) விசுவாசம் இழந்தால், கிறிஸ்துவின் சரீரத்தில் நம்முடைய இடத்தை நாம் இழக்க நேரிடும் என்பதை இந்த அறிவுரை மிகவும் உறுதியாகக் குறிக்கிறது. ஒரு முறை நம்மீது இயேசுவின் புண்ணியம், பயன்படுத்தப் பட்டால், நாம் இரண்டாம் மரண தீர்ப்புக்குள் நம்மை காண முடியும். (எபிரெயர் 10:26) நம்முடைய பலி அசுத்தப்படாத படிக்கு நாம் நிதானமான சிந்தனையுடனும், விழிப்புடனும் இருக்கவேண்டும். (1பேதுரு1:13-23) நாம் மீண்டும் ஒரு முறை "நம்முடைய அக்கிரமத்தைச் சுமக்கும்" நிலையில் நாம் விழுந்தால், அதன் விளைவுகளை நாம் முழுமையாக உணரவேண்டும். (ரோமர் 6:23)

## இரட்சிப்பின் பாத்திரம்

"இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்துக்கொண்டு, கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுவேன்."




(சங்கீதம் 116:13) வேதத்தில், பாத்திரம் என்பது ஒரு பணி, ஒரு வேலை அல்லது ஒருவர் செல்லக்கூடிய அனுபவத்திற்கான உருவகமாகும். இயேசு தம் இரத்தத்தின் புதிய ஏற்பாட்டின் அடையாளமாக அவரது பலியையும் அவரது வெற்றியையும் நினைவுகூர ஒரு பாத்திரத்தை பயன்படுத்தினார். (1கொரிந்தியர் 11:25-26) இது கடினமான அனுபவங்களால் நிரப்பப்படலாம். "நான் குடிக்கும் பாத்திரத்தில் நீங்கள் குடிக்கவும், நான் பெறும் ஸ்நானத்தை நீங்கள் பெறவும் கூடுமா என்றார்." (மத்தேயு 20:22)என்று இயேசு அப்போஸ்தலர்களிம் கேட்டார்கள். "என் பிதாவே, இந்தப் பாத்திரத்தில் நான் பானம் பண்ணினாலொழிய இது என்னை விட்டு நீங்கக்கூடாதாகில், உம்முடைய சித்தத்தின்படி ஆகக்கடவது என்று ஜெபம் பண்ணினார்." (மத்தேயு 26:42) அதன் சிரமத்தைப் பொருட்படுத்தாமல், இயேசு நம்முடைய நலனுக்காக அந்த பாத்திரத்தை குடித்தார்.

இரட்சிப்பின் பாத்திரம், தேவனை நேசிப்பவர்களுக்கு ஆசீர்வாதமாகவும் இருக்கிறது. இந்த இரட்சிப்பின் பாத்திரம், நம்முடைய அர்ப்பணிக்கப்பட்ட நடையின் போது கிறிஸ்துவின் துன்பங்களில் பங்கேற்க உதவுகிறது. (கொலோசேயர் 1:24) நாம் நம்மை ஜீவ பலிகளாக ஒப்புக்கொடுக்கவேண்டும். (ரோமர் 12:1) "நீயோ எல்லாவற்றிலும் மனத்தெளிவுள்ளவனாயிரு, தீங்கநுபவி, சுவிசேஷகனுடைய வேலையைச் செய் ..... நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன். விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன். இது முதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது, நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை

எனக்குத் தந்தருளுவார், எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார்." (2தீமோத்தேயு 4:5-8) என்று அப்போஸ்தலர் கூறுகிறார். இரட்சிப்பின் பாத்திரத்தை எடுக்க நாம் முயற்சி செய்யவேண்டும். மேலும், யெகோவாவின் நாமத்தைத் தொழுதுகொள்ள, இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்து கொண்டு, தாழ்மையுடன், நமக்காக அவர் செய்த அனைத்து நன்மைகளுக்காகவும் அவருக்கு நன்றிகளை செலுத்த கடவோம்.

வேதமாணவர்கள் பக்தியோடு வாசிக்கும் பாடல் - "கர்த்தருக்கு பொருத்தனையை செலுத்துவேன்." இது நம்முடைய அர்ப்பணிப்பின் பொருத்தனையாகும். நம்முடைய பொருத்தனையை செலுத்துவதில், வழக்கமான அடிப்படையில், அனைத்திலும் நாம் யெகோவா தேவனை உயர் மதிப்பிலும் பயபக்தியிலும் அங்கீகரித்து வைத்திருக்கிறோம். நம் மாம்சத்தின் பாவப் போக்குகளை, உலகத்தின் தாக்கங்களை மற்றும் சாத்தானைச் சமாளிக்க நம் வாழ்வில் தொடர்ந்து அவருடைய விருப்பத்திற்கு இருதயங்களை திறந்து வைக்கவேண்டும். நம்முடைய தனிப்பட்ட நடத்தை, வேலை, மற்றவர்களை நடத்தும் விதம் ஆகியவற்றில் நாம் பரிசுத்த ஆவியினாலும், இயேசு கிறிஸ்துவின் புண்ணியத்தின் வழியாக நாம் நீதியை நோக்கி பயணிக்க முயலுகிறோம். எல்லா நேரங்களில் நாம் இயேசுவின் குணாதிசயங்களை வளர்த்துகொண்டிருப்பதால், நாம் தேவனுடைய குமாரரும், குமாரத்திகளும் என்று அழைக்கப்படுவதற்கு தகுதியுள்ளவர்களாக இருக்கிறோம். "கர்த்தர் எனக்குச் செய்த எல்லா உபகாரங்களுக்காகவும், அவருக்கு என்னத்தைச் செலுத்துவேன். இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்துக்கொண்டு, கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுவேன்." (சங்கீதம் 116:12-13)

இது அவருடைய ஊழியக்காரர்கள் நன்றி செலுத்துவதற்கான நேரம். (சங்கீதம் 116:17) இது நம்முடைய சொந்த விருப்பத்தின் பேரில் உள்ளது. (லேவியராகமம் 22:29)இது நம்முடைய ஸ்தோத்திர பலியின் (வெளிப்படுத்தப்படும் நம்முடைய அர்ப்பணிக்கப்பட்ட வாழ்க்கை)வழியாக செலுத்தும் சமாதான பலியாகும். (லேவியாராமம் 7:12-13, 15)இப்படி செய்வதன் மூலம், நாம் அவருடைய செயல்களை மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறவர்களாக இருப்போம். (சங்கீதம் 107:22) நாம் நன்றி செலுத்தும் குரலில் பலி செலுத்துகிறோம். நாம் பொருத்தனை செய்ததை (அர்ப்பணிக்கப்பட்ட வாழ்க்கையை) தொடர்ந்து செலுத்துவோம். (யோனா2:9),இதை நம்முடைய பலிகள் (அர்ப்பணிப்பு) மூலமாக அறிவித்து, மற்றவர்களுக்கு தெரிவிக்கும் வண்ணமாக அதை வெளியிடுவோம். (ஆமோஸ் 4:5) நாம் ஒவ்வொருவம் யெகோவா தேவனுக்கு நமக்கு செய்த நன்மைகளை எண்ணி நம்முடைய பக்தியையும் அர்ப்பணிப்பையும் செலுத்துவோம்.

நன்றியுணர்வுக்கான காரணம்

# தேவன் தம் மகனை அனுப்பினார்



"எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ்செய்யுங்கள், அப்படிச் செய்வதே கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களைக்குறித்துத் தேவனுடைய சித்தமாயிருக்கிறது." (1தெசலோனிக்கேயர் *5:18*)

***Ninan Andrews***

சாதகமான நிகழ்வுகளை, நல்ல அதிர்ஷ்டம் என்று உலக ஜனங்கள் கூறலாம். ஆனால் அர்ப்பணிக்கப்பட்ட ஒரு வேத மாணவருக்கு இதன் வித்தியாசம் தெரியும். (மத்தேயு 5:45) அவர்கள், அதை நன்றியுணர்வுக்கான நேரமாக எடுத்துக்கொள்கிறார்கள். (அப்போஸ்தலர் 14:17, சங்கீதம் 116:12-14) "தேவனுடைய நற்குணம் நம்மை விழிக்கசெய்யவில்லை என்றால், நன்றியுணர்வுடன் பாராட்டும் உணர்வும் நமக்கு இருக்காது. இத்தகையை உணர்வுகளுக்கு நாம் முற்றிலும் மரித்தால், தேவனுடைய நற்குணங்களை நமக்கு வெளிப்படுத்தவதில் அவருக்கு எந்த மகிழ்ச்சியும் இருக்க முடியாது. அவருடைய அன்பினால் நம்மை அழைக்க முடியாது. மேலும் அவருடைய நற்குணம் மற்றும் இரக்கம் எதுவும் நம்மில் அன்பை தூண்டி எழுப்பாது." (R2031)

## யெகோவா தேவனின் அன்பு நம்மை அவரிடம் இழுக்கிறது

தேவன் தம்முடைய தன் மகனைக் கொடுத்து, இந்த முழு சிருஷ்டிப்பின் மீதுள்ள அன்பை வெளிப்படுத்தினார். (யோவான் 3:16) இயேசுவின் மரணத்தால் வந்த நன்மைகள் பெரும்பாலான மனிதர்களால் இன்னும் உணரப்படவில்லை. "தேவனுடைய அற்புதமான திட்டத்தை கவனமாக் படிக்கும்போது, அவைகள் தாமதமாக தோன்றினாலும், அவருடைய அன்பும் ஞானமும் அதில் வெளிப்படுகிறது. ஏனெனில், இந்தக் காலம் முழுவதிலும் கிறிஸ்துவின் வல்லமை ஒரு சிறப்பு வகுப்பின் மீது செலுத்தப்படுகிறது. இவர்கள் தேவனாலும், கிறிஸ்துவாலும் நேசிக்கப்படுவதால் அவர்களை உயிர்த்து எழுப்புகிறார்கள். இவர்கள் உபத்திரவத்திலும், துன்பத்திலும், வேதனைகளிலும், இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுவதற்கு அவர்களை ஈர்க்கும் போது நன்றியுணர்வை எழுப்புகிறார்கள். "(Reprint 1055) தேவன் மற்றும் கிறிஸ்துவின் அன்பும் அர்ப்பணிக்கப்பட்டவர்களுக்குள் அனைத்து நன்மைகளுக்கும் நன்றிகளை ஏற்படுத்தும் ஒரு ஊக்கியாக செயல்படுகிறது. (2கொரிந்தியர் 5:14, சங்கீதம் 116:12,17) தேவன் தம்முடைய உடன்படிக்கையின் பிள்ளைகளாக நம்மை அழைத்திருக்கிறார். (எபிரெயர் 12:5) நன்மையான அல்லது தீமையான, எந்த ஒரு அனுபவத்திற்கும் தேவனுக்கு நன்றி தெரிவிப்பதே இந்த உறவுமுறையின் முக்கிய அம்சமாகும்.


2013ஆம் ஆண்டில், பிரேசிலிய கார்ட்டூனிஸ்ட் ஜெனில்டோ ரோஞ்சி தனது இணையதளத்தில் ஒரு கார்ட்டூனை வெளியிட்டார் (ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது) "சில நேரங்களில் அது நம்மைப் பொறுத்தது.", "வாழ்க்கையின் மகிழ்ச்சியான பக்கத்தைத் தேர்ந்தெடுங்கள் !"என்று உரையில் வாசிக்கப்படுகிறது. இந்த கார்ட்டூன் " Two Guys on a Bus " என்ற நினைவுச்சின்னமாக உயிர் பெற்றது. ஒவ்வொருவரும் எதிரெதிர் பக்கங்களில் ஒரு ஜன்னலைப் பார்த்தார்கள். ஒருவர் பாறைச் சுவரையும் மற்றொருவர் அழகான பள்ளத்தாக்கையும் கண்டார்கள். நாமும் வாழ்க்கையின் உருவகப் பேருந்தில் வெவ்வேறு அனுபவங்களைச் சந்திக்கிறோம். நாம் எப்போதும் அனுபவத்தைத் தேர்ந்தெடுப்பதில்லை, நம் எதிர்வினையைத் தேர்ந்தெடுக்கிறோம். அவைகளைப் பற்றி முணுமுணுப்பது அல்லது அவர்களைப் பாராட்டுவது நமது விருப்பமாக இருக்கலாம். அவர்களைப் பாராட்டுவதில் தான் நாம் நன்றியுணர்வு பெறுகிறோம்.

## நன்றியுணர்வுக்கான காரணம் - நம்முடைய கடுமையான அனுபவம்

எல்லாவிதமான சோதனைகளும் உங்கள் வாழ்க்கையில் குவியும் போது என் சகோதரர்களே, அவைகளை அழையாமல் குறுக்கிடுபவைகளாக


எண்ணாமல், அவர்களை நண்பர்களாக வரவேற்கவேண்டும்! (யாக்கோபு1:2) நம்முடைய அனுபவங்களைப் பார்ப்பதற்கான சன்னலை நாம் தேர்வு செய்யவேண்டும். பேருந்தில் பயணிக்கும் மனிதனாக, அழகிய பள்ளத்தாக்கைப் பார்க்கத் தேர்வு செய்தால், அது நன்மையான பலனைத் தரும். (எபிரெயர் 12:11, யாக்கோபு1:3-4) இதனால் நம்முடைய விசுவாசமும் பெருகும், தேவனுடனான நம்முடைய உறவும் மேம்படுத்தப்படும். அவருடைய பிரசன்னம், அன்பு மற்றும் அக்கறையை அதிகமாக உணர்வோம். (எபிரெயர் 12:7, நீதிமொழிகள் 13:24, சங்கீதம் 107:1) நம்முடைய செயல்களால் அவருக்கு நன்றிகளை செலுத்தவேண்டும் என்ற வைராக்கியத்தைக் காண்போம். (புலம்பல் 3:23-24) இறுதியான நம்பிக்கையில் நம்முடைய விசுவாசம் ஆழமடைந்து, கிறிஸ்துவின் மூலம் தகுதியான ஒரு பிள்ளையாகவும், சுதந்தரராயும் அங்கீகரிக்கப்படுவோம். (கொலோசேயர் 3:16-17)

யாக்கோபின் பன்னிரண்டு குமாரர்களில் ஒருவரான யோசேப்பைக் கவனியுங்கள். யோசேப்பின் சகோதரர்கள் அவருடைய எதிராகத் திரும்பும் வரை அவருடைய தந்தையின் விருப்பமான புத்திரனாக, அவருக்கு ஏராளமான அன்பும் பொருள் உதவியும் கொடுக்கப்பட்டது. துரோகம், பொய் சாட்சி மற்றும் எகிப்தின் சிறைவாசம் அவரது ஆசீர்வாதங்களை சீர்குலைத்தது. பார்வோனுடைய தலைமைப் பொறுப்பில் யோசேப்பை இரண்டாவதாக மாற்றுவதற்கான சூழ்நிலைகள் மாறியது. தன்னையும் தன் குடும்பத்தையும் மட்டுமின்றி, இறுதியில் எகிப்து முழுவதையும் இறுதியில் காப்பாற்றும் வழியை தேவன் தந்ததற்காக யோசேப்பு அவருக்கு நன்றிகளை ஏறெடுக்கும் வாய்ப்பை தெரிந்துகொண்டார். (ஆதியாகமம் 45:5-8) ஒவ்வொரு முறையும், யோசேப்பு பெற்ற அனுபவத்தின் போது, தேவன் மேல் அசைக்க முடியாத நம்பிக்கையை வெளிப்படுத்தினார். கடைசியில் அவரது சகோதரர்கள் மன்னிப்புக் கேட்டபோது அவர் அழுதார். (ஆதியாகமம் 50:17) அவருடைய சகோதரர்கள் செய்த துரோகத்திலும், அவர் தேவனிடமிருந்து ஒரு ஆசீர்வாதத்திற்குரிய வழியை தேர்ந்தெடுத்து, அதற்கான நன்றிகளை ஏறெடுத்தார். (ஆதியாகமம் 50:17-20)


Joseph, a favored son

எல்கானாவின் மனைவிகளில் முதல் பெண்ணான அன்னாளை கவனிக்கலாம். (1 சாமுயேல் 1) இரண்டாவது மனைவி பென்னின்னாளுக்கு குழந்தைகள் இருந்தது, அன்னாளுக்கோ குழ்ந்தைகள் இல்லை. ஏளனத்தை சகித்துக்கொண்டிருக்கையில், அவள் இரக்கத்திற்காக யெகோவா தேவனிடம் கூக்குரலிட்டாள் - "சேனைகளின் கர்த்தாவே, தேவரீர் உம்முடைய அடியாளின் சிறுமையைக் கண்ணோக்கிப் பார்த்து, உம்முடைய அடியாளை மறவாமல் நினைந்தருளி, உமது அடியாளுக்கு ஒரு ஆண் பிள்ளையைக் கொடுத்தால், அவன் உயிரோடிக்கும் சகல நாளும் நான் அவனைக் கர்த்தருக்கு ஒப்புக்கொடுப்பேன், அவன் தலையின்மேல் சவரகன் கத்தி படுவதில்லை என்று ஒரு பொருத்தனை பண்ணினாள்." (1 சாமுயேல் 1:11) இந்த விண்ணப்பத்திற்காக ஆசாரியனாகிய ஏலியின் ஆசீர்வாதத்தையும் நாடினாள். இஸ்ரயேலின் தலைசிறந்த தீர்க்கதரிசிகளில் ஒருவரான சாமுயேலைப் பெற்றெடுத்தாள். ஒருவேளை சிலர் செய்த பொருத்தனையை மறுத்திருக்கலாம் ஆனால், அன்னாள் ஒரு குழந்தையைப் பெற்றெடுத்தபோது, அதை தேவன் தந்த பதிலாக அங்கீகரித்தாள். அவள் தன் பொருத்தனையை நிறைவேற்றுவதற்காக, தேவனுக்கு ஊழியம் செய்யவும், அர்ப்பணிக்கப்பட்டவாழ்க்கையை வாழ்வதற்கு ஏற்ப சாமுயேலை வளர்த்து ஆயத்தப் படுத்தினாள்.

இந்த உதாரணங்களை சிறைபிடிக்கப்பட்ட இஸ்ரயேலரின் உதாரணங்களுடன் வேறுப்படுத்திப் பார்க்கலாம். "அப்பொழுது கர்த்தர், எகிப்திலிருக்கிற என் ஜனத்தின் உபத்திரவத்தை நான் பார்க்கவே பார்த்து, ஆளோட்டிகளினி மித்தம் அவர்கள் இடுகிற கூக்குரலைக் கேட்டேன், அவர்கள் படுகிற வேதனைகளையும் அறிந்திருக்கிறேன்." (யாத்திராகமம் 3:7) ஒரு அதிசயமான விடுதலைக்குப்பிறகு, இஸ்ரயேலர்களின் சிரமத்தின் முதல் அறிகுறியாக,




செங்கடலில் வெளிப்படையான மரணத்திற்குக் கொண்டுவந்ததற்காக தங்கள் மீட்பரை சபித்தனர். (யாத்திராகமம் 14:10-12 ) இந்த சம்பவத்தைத் தொடர்ந்து சிறிது நேர நன்றியுணர்வு காணப்பட்டது. (யாத்திராகமம் 15:1-21) ஆனால் ஒவ்வொரு பிரச்சனையிலும், ஆசீர்வாதங்களிலும், வனாந்திரத்தில் பயணித்த ஜனங்கள் நன்றியின்மை மற்றும் முணுமுணுப்புக்கு திரும்பினார்கள்.

## நன்றியுணர்வு குறைவதால் ஏற்படும் ஆபத்து

வாழ்க்கையின் சாதகமான சூழ்நிலையில் நன்றியின்மையைத் தேர்ந்தெடுப்பது நம்மை தேவனிடமிருந்து விலக்கி வைக்கும். ஆசீர்வாதங்களின் நீரூற்றிலிருந்து பிரிந்து செல்வது ஒருபோதும் நல்ல பலனைத் தராது. யாத்திரையின் போது, காலேப் மற்றும் யோசுவாவைத் தவிர இஸ்ரயேலுக்கு முழுமையான தோல்விக்கு வழிவகுத்தது. பாஸ்டர் ரசல் இந்த பாடத்தின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்தினார் : - நன்றியுள்ள இருதயம் கிருபையின் மேல் கிருபையையும், பெலத்தின் மேல் பெலத்தையும், அறிவின் மேல் அறிவையும், நிறைவின் மேல் நிறைவையும் அடையலாம். ஆனால் நன்றியுணர்வு குறைய ஆரம்பித்தால், நம்முடைய நன்மைகள் நம்முடைய சொந்த சாதனை அல்லது அதிர்ஷ்டமான விஷயங்களாக இருந்தாலும், நம்முடைய ஆவிக்குரிய ரீதியில் குளிர்ச்சியாக இருப்பதைக் காணலாம். மேலும் நன்றியின்மையுடன் தூய்மையற்ற தன்மை, ஆவிக்குரிய சுய - பெருமை மற்றும் பெருமை ஆகியவை வரும். இவை அனைத்தும் ஆவிக்குரிய மரணத்திற்கு தொடரும்போது, ஆவிக்குரிய பற்றாக்குறைக்கு வழிவகுக்கும்." (R3080).

நன்றியுணர்வு குறைந்து போனதினால் எப்படிப்பட்ட ஆபத்து இருக்கிறது! அனுபவங்கள் சாதகமாக இருந்தாலும் சரி, பாதகமாக இருந்தாலும் சரி, அவற்றை நாம் ஒரு போதும் தள்ளுபடி செய்யக்கூடாது. தேவனுடைய உதவியால் அவைகள் எப்போதும் ஆசீர்வாதங்களைப் பொழியும்.

"உங்கள் ஆசீர்வாதங்களை எண்ணிப் பாருங்கள், அவற்றை ஒவ்வொருன்றாகப் பெயரிடுங்கள், உங்கள் ஆசீர்வாதங்களை எண்ணுங்கள், தேவன் என்ன செய்தார் என்று பாருங்கள்."

## நித்தமும் நன்றியுணர்வை வளர்த்தல்

தேவனிடம் நாம் செய்யும் ஜெபங்கள் சுகந்த வாசனையாகும். (வெளிப்படுத்தல் 5:8) அவருடைய அக்கறைக்கும் பராமரிப்புக்கும் நமது நன்றியைக் காட்டுவோம். "என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி, என் முழு உள்ளமே, அவருடைய பரிசுத்த நாமத்தை ஸ்தோத்திரி. என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி, அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே. அவர் உன் அக்கிரமங்களையெல்லாம் மன்னித்து, உன் நோய்களையெல்லாம் குணமாக்கி, உன் பிராணனை அழிவுக்கு விலக்கி மீட்டு, உன்னைக் கிருபையினாலும் இரக்கங்களினாலும் முடிசூட்டி,நன்மையினால் உன் வாயைத் திருப்தியாக்குகிறார், கழுகுக்குச் சமானமாய் உன் வயது திரும்ப வாலவயது போலாகிறது." (சங்கீதம் 103:1-5)

நன்மையான மற்றும் தீமையான சூழ்நிலைகள் எதுவானாலும் சரி, யெகோவா தேவனுக்கு நன்றி செலுத்துவதற்கான சில வழிகள் இங்குள்ளது.

(1) வாழ்க்கையின் பெரிய மற்றும் சிறிய மகிழ்ச்சிகளின் பதிவுகளை வைத்திருங்கள்.

(2) மற்றவர்கள் செய்த நன்மைகளுக்கு நன்றி குறிப்புகளை எழுதுவதை வழக்கமாக்கிக் கொள்ளுங்கள்.

(3) மனதில் உள்ள தேவையற்றதை கலைந்து போடுங்கள்.

(4) வாழ்க்கையில் உள்ள பாதுகாப்பு ஏற்பாடுகளையும் அதற்கான காரணங்களையும் எழுதுங்கள். "ஆகையால், நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை ஏற்றுக் கொண்டபடியே, அவருக்குள் வேர்கொண்டவர்களாகவும், அவர்மேல் கட்டப்பட்டவர்களாகவும், அவருக்குள் நடந்து கொண்டு, நீங்கள் போதிக்கப்பட்டபடியே, விசுவாசத்தில் உறுதிப்பட்டு, ஸ்தோத்திரத்தோடே அதிலே பெருகுவீர்களாக."(கொலோசேயர் 2:6,7)

### இன்றைய தீர்க்கதரிசனம்

# உலகளாவிய நிதி நெருக்கடி

"தங்கள் வெள்ளியைத் தெருக்களில் எறிந்துவிடுவார்கள். அவர்களுடைய பொன் வேண்டா வெறுப்பாயிருக்கும், கர்த்தருடைய சினத்தின் நாளிலேஅவர்கள் வெள்ளியும் அவர்கள் பொன்னும் அவர்களை விடுவிக்கமாட்டாது. அவர்கள் அதினால் தங்கள் ஆத்துமாக்களைத் திருப்தியாக்குவதும் இல்லை, தங்கள் வயிறுகளை நிரப்புவதும் இல்லை" (எசேக்கியேல் 7:19)

பெருந்தொற்று பொது முடக்கமும், அரசாங்க நிவாரண திட்டங்களும், உலகெங்கிலும் உள்ள பொருளாதாரங்களை தீவிரமாக பலவீனப்படுத்தியுள்ளது. உக்ரைன் மீதான படையெடுப்பின் விளைவாக ரஷ்ய பொருளாதாரத் தடைகள் எரிசக்தி விலையில் உயர்வை ஏற்படுத்தியுள்ளன. ஐரோப்பாவில், இயற்கை எரிவாயு 400 சதவீதம் அதிகரித்துள்ளது.

ஐரோப்பிய அரசாங்கங்கள் எரிபொருளுக்காக ரஷ்யாவிற்கு மாற்று ஆதாரங்களை நாடுகின்றன, மேலும் பணவீக்கம் நுகர்வோர் விலைகளை பெரிய அளவில் உயர்த்துவதினால், பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி மற்றும் செக் குடியரசு முழுவதும் எதிர்ப்புகள் பரவலாக உள்ளன. குடிமக்களின் அமைதியின்மையைத் தணிக்க, நுகர்வோர் உணரும் வலியைப் போக்க அரசாங்கங்கள் நடவடிக்கை எடுத்துள்ளன. போர்ச்சுக்கலில், அரசாங்கம் $2.4 பில்லியன் நிவாரணப் திட்டத்தையும், ஜெர்மனியில் $64.3 பில்லியன் திட்டத்தையும் அறிவித்தது.

உலகெங்கிலும் அதிகரித்துள்ள பணவீக்கத்திற்கு முக்கிய பங்களிப்பாக அதிக செலவு மற்றும் கேள்விக்குரிய எரிசக்தி கொள்கைகள் என்று பொருளாதார வல்லநர்கள் கூறுகின்றனர். போக்குவரத்து, வெப்பமாக்கல், குளிரூட்டல் மற்றும் உற்பத்தி உள்ளிட்ட பெரும்பாலான தொழில்களில் அதிக விலைகள் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. இது பல நாடுகளில் ஏற்கனவே பலவீனமாக உள்ள பொருளாதாரங்களை மேலும் மோசமாக்கியுள்ளது.


Pakistan Monsoon

• இலங்கையில், மிகையான பணவீக்கம், மதிப்பிழந்த நாணயம் மற்றும் உள்நாட்டுப் போர் காரணமாக பெரும் அரசாங்கக் கடன், வழங்குபவர்களுக்கு திருப்பிச் செலுத்தும் மற்றும் தேவையான உள்கட்டமைப்பு திட்டங்களைத் தொடரும் திறனை ஏற்கனவே அச்சுறுத்துகிறது. 2019 பயங்கரவாதமும் தொற்றுநோயும் நாட்டை மூடியதிலிருந்து, பொருளாதார வாழ்வின் முக்கிய ஆதாரமான சுற்றுலா வறண்டுவிட்டது. 2021ஆம் ஆண்டு அரசாங்கம் ரசாயன உரங்களை தடை செய்ததால், (பின்னர் இது மாற்றப்பட்டது) பயிர் விளைச்சல் கணிசமாகக் குறைந்து, தேயிலை தொழில் நாசமானது. இதையடுத்து, பெரும் எதிர்ப்பு கிளம்பியதால் கடந்த ஜூலை மாதம் அதிபர் ராஜபக்சே ராஜினாமா செய்யும் நிலை வந்தது.

• அர்ஜெண்டினாவில், வருடாந்தர பணவீக்க விகிதம் 70 சதவிகிதம் - மூன்று தசாப்தங்களில் அதிகபட்சம் - மற்றும் 69 சதவிகிதத்திற்கும் அதிகமான வட்டி விகிதங்கள் பல நுகர்வோரை பண்டமாற்று முறைக்கு மாற்றியுள்ளது. மத்திய வங்கி கையிருப்பு குறைந்து வருவது மற்றம் சர்வதேச நாணய நிதியத்திற்கு $40 பில்லியன் கடனை திருப்பிச் செலுத்துவது ஆகியவை ஏற்கனவே பாதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத்தில் அதிர்ச்சி அலைகளை அனுப்பியுள்ளன.

• சீனாவில், இன்ஸ்டிடியூட் ஆ∴ப் இன்டர்நேஷனல் ∴பைனான்ஸ் (IIF) படி, பெய்ஜிங் குளிர்ச்சியான பொருளாதாரத்திற்கான ஆதரவை

அதிகரிக்கச் செய்வதால், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) 300 சதவீதத்திற்கும் மேலாக அரசாங்கம், கார்ப்பரெட் மற்றும் நுகர்வோர் கடன் அதிகரித்துள்ளது. "2007 மற்றும் 2008 ஆம் ஆண்டுகளில் உலக நிதி நெருக்கடியை அடுத்து சீனா கடனை விரைவாகக் குவித்தது, அதிகாரிகள் ஒரு பெரிய ஊக்கப் பொதியை வழங்கினார், அது பெரும்பாலும் வங்கிக் கடன்கள் மூலம் நிதியளிக்கப்பட்டது" என்று IIF எழுதுகிறது.

• பேரழிவுகரமான பருவமழைகள் பாகிஸ்தானின் மூன்றில் ஒரு பகுதியை தண்ணீருக்கு அடியில் விட்டுச் சென்றன, மேலும் நாட்டின் விளைநிலங்களில் கிட்டத்தட்ட பாதியை அழித்துவிட்டது என்று பிபிசி தெரிவித்துள்ளது. உணவுப் பொருட்களின் விலைகள் உயர்ந்து, பிரதான உணவுகள் பலரின் கைக்கு எட்டாத வகையில் விட்டுச் சென்றது.

• அதிக எரிபொருள் மற்றும் உணவுப் பொருட்களின் விலைகள் காரணமாக பங்களாதேஷ் தொடர்ந்து கொந்தளிப்பை எதிர்கொள்கிறது. நாடு $90 பில்லியனுக்கும் அதிகமான வெளிநாட்டுக் கடனைப் பெற்றுள்ளது, இது ஒரு பெரிய உள்கட்டமைப்புத் திட்டத்தின் காரணமாக கடந்த ஐந்து ஆண்டுகளில் இரட்டிப்பாகியுள்ளது.

• ஐரோப்பிய ஒன்றியத்தின் நைட்ரஜன் ஆக்சைடு மற்றும் அம்மோனியாவின் மிகப்பெரிய உமிழ்ப்பாளரான நெதர்லாந்தில் உள்ள ஆயிரக்கணக்கான விவசாயிகள் ஜூலை மாதம் உரத்தின் பயன்பாட்டை பாதிக்கும் உமிழ்வு குறைப்பு விதிகளுக்கு எதிர்ப்பு தெரிவித்தனர் மற்றும் ஜெர்மனி, இத்தாலி, ஸ்பெயின், போலந்து ஆகிய நாடுகளில் உள்ள குழுக்களும் இவர்களுடன் இணைந்தனர். டச்சு விவசாயிகள் தாங்கள் உற்பத்தியை பெருமளவில் குறைக்க அல்லது தங்கள் செயல்பாடுகளை முற்றிலுமாக நிறுத்த வேண்டிய கட்டாயத்தில் இருப்பதாக வாதிடுகின்றனர்.

IIF இன்படி உலகளாவிய கடன் 2020 இல் $226 டிரில்லியனில் இருந்து, 2021ல் அரசாங்கங்கள், வணிகங்கள் மற்றும் நுகர்வோர் கடன் வாங்குவதன் மூலம் $300 டிரில்லியன்களைத் தாண்டியது. அதே ஆண்டில் உலகளாவிய மொத்த உள்நாட்டு உற்பத்தி டிரில்லியன் ஆகும், மொத்தக் கடனில் வெறும் 28 சதவிகிதம், இப்போது உலகம் இருக்கும் கடினமான நிதிநிலையின் ஸ்கோர்கார்டாக செயல்படுகிறது.




## தேவனுடைய உக்கிரகோபம் ஊற்றப்படுகிறது

இங்கே விவரிக்கப்பட்டுள்ள பயங்கரமான சம்பவங்கள் இருந்தபோதிலும், எதிர்காலத்திற்கான நம்பிக்கை உள்ளது. ஆனால் தேவனுடைய இராஜ்யத்தை நிறுவுவதன் மூலம் மட்டுமே, யெகோவா தேவன் நல்லதைக் கொண்டுவருதற்கு முன், அவர் உலகின் தற்போதைய மத, அரசியல், சமூக மற்றும் நிதி அமைப்புகளை வீழ்த்த வேண்டும். தற்போதைய உலகளாவிய நிதி நெருக்கடி நமது தற்போதைய அமைப்புகளின் மொத்த அழிவுக்கு மற்றொரு முன்னோடியாகும். செப்பனியாவின் வார்த்தைகளைக் கவனியுங்கள். "என் சினமாகிய உக்கிரகோபத்தை யெல்லாம் அவர்கள்மேல் சொரியும்படி ஜாதிகளைச் சேர்க்கவும், இராஜ்யங்களைக் கூட்டவும் நான் தீர்மானம்பண்ணினேன், பூமியெல்லாம் என் எரிச்சலின் அக்கினியினால் அழியும்." (செப்பனியா3: 8) எசேக்கியேல், எருசலேமின் வரவிருக்கும் அழிவைப் பற்றி தீர்க்கதரிசனம் உரைத்தார், அழிவு வரும்போது செல்வம் எவ்வாறு அவர்களைக் காப்பாற்றாது என்பதைக் காட்டினார்.

தங்கள் வெள்ளியைத் தெருக்களில் எறிந்து விடுவார்கள். அவர்களுடைய பொன் வேண்டாவெறுப்பாயிருக்கும், கர்த்தருடைய சினத்தின் நாளிலே அவர்கள் வெள்ளியும் அவர்கள் பொன்னும் அவர்களை விடுவிக்கமாட்டாது, அவர்கள் அதினால் தங்கள் ஆத்துமாக்களைத் திருப்தியாக்குவதும் இல்லை, தங்கள் வயிறுகளை நிரப்புவது இல்லை"(எசேக்கியேல் 7: 19)

யாக்கோபு, இஸ்ரயேலின் இறுதி நாட்களுக்காகவும், சுவிசேஷ யுகத்தின் கடைசி நாட்களுக்காகவும் தீர்க்கதரிசனமாக இதேபோன்ற சூழ்நிலையை கூறினார். "ஐசுவரியவான்களே, கேளுங்கள், உங்கள்மேல் வரும் நிர்ப்பந்தங்களினிமித்தம் அலறி அழுங்கள். உங்கள் ஐசுவரியம் அழிந்து, உங்கள் வஸ்திரங்கள் பொட்டரித்துப்போயின. உங்கள் பொன்னும் வெள்ளியும் துருப்பிடித்தது. அவைகளிலுள்ள துரு உங்களுக்கு விரோதமாகச் சாட்சியாயிருந்து, அக்கினியைப்போல உங்கள் மாம்சத்தைத் தின்னும். கடைசி நாட்களிலே பொக்கிஷத்தைச் சேர்த்தீர்கள்." (யாக்கோபு 5: 1-3)

சுவிசேஷ யுகத்தின் முடிவில் இந்த உலகின் நிதி அமைப்புகள் மட்டுமல்ல, சமூக அமைப்புகளும் தோல்வியை சந்திக்கும். அப்போஸ்தலன் பவுல் இவ்வாறு எழுதுகிறார், "மேலும் கடைசி நாட்களில் கொடிய காலங்கள் வருமென்று அறிவாயாக எப்படியெனில், மனுஷர்கள் தற்பிரியராயும், பணப்பிரியராயும், வீம்புக்காரராயும், அகந்தையுள்ளவர்களாயும், தூஷிக்கிறவர்களாயும், தாய்தகப்பன்மாருக்குக் கீழ்ப்படியாதவர்களாயும், நன்றியறியாதவர்களாயும் பரிசுத்தமில்லாதவர்களாயும்" (2தீமோத்தேயு 3:1,2)

## நமது கிறிஸ்தவ கண்ணோட்டத்தை காத்திருத்தல்

உலகில் தற்போதைய கொந்தளிப்பு இறுதியில் ஒரு புதிய வாழ்க்கை முறையை கொண்டு வரும் நீதியின் அமைதியான இராஜ்யத்தால் மாற்றப்படும். "அப்பொழுது ஜனங்களெல்லாரும் கர்த்தருடைய



நாமத்தைத் தொழுது கொண்டு, ஒருமனப்பட்டு அவருக்கு ஆராதனை செய்யும்படிக்கு, நான் அவர்கள் பாஷையைச் சுத்தமான பாஷையாக மாறப்பண்ணுவேன்." (செப்பனியா 3: 9) "ஏழைகள் பாழாக்கப்பட்ட தினிமித்தமும், எளியவர்கள் விடும் பெருமூச்சினிமித்தமும், நான் இப்பொழுது எழுந்து, அவன்மேல் சீறுகிறவர்களுக்கு அவனைக் காத்துச் சுகமாயிருக்கப் பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்."(சங்கீதம் 12: 5)இன்று நாம் உலகைப் பார்க்கும்போது, நமது காவற்கோபுரத்தின் மீது நின்று தேவனுடைய இராஜ்யத்தின் ஸ்தாபித்தலுக்காக ஜெபிப்போம்.

இந்த நேரத்தில் நம்மைப் பாதுகாத்துக் கொள்ள என்ன செய்யலாம்? "நீங்கள் பண ஆசையில்லாதவர்களாய் நடந்து, உங்களுக்கு இருக்கிறவைகள் போதுமென்று எண்ணுங்கள், நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை என்ற அவர் சொல்லியிருக்கிறாரே" (எபிரெயர் 13: 5) பொருள் செல்வம் இப்போது மகிழ்ச்சிக்கான திறவுகோலாக ஊக்கவிக்கப்படுகிறது. தலைவர்கள், வணிகங்கள் மற்றும் அரசாங்கங்கள் அனைவரும் மகிழ்ச்சி, உரிமைகள் மற்றும் கடனில் இருந்து "பிணை எடுப்பு" போன்ற வாக்குறுதிகளுடன் இந்த சூழ்நிலைக்கு பங்களிக்கின்றனர், இது விவேகத்தையும் ஒழுக்கத்தையும் மேம்படுத்துவதற்கு எதுவும் செய்யாது.

தேவனுடைய கொள்கைகளுக்கு நம் வாழ்வில் முதலிடம் கொடுப்பதன் மூலம் இந்தக் கடினமான காலங்களில் மன அமைதியை உறுதிப்படுத்திக் கொள்ளலாம். இந்த வழிகாட்டுதல்களைக் கவனியுங்கள் -

- நல்ல மண்ணில் ஆவிக்குரிய ரீதியில் விதையுங்கள் (கலாத்தியர் 6:7, 8) ஒரு பயிர் வளர நேரம் எடுக்கும். பொறுமையாய் இருங்கள். இருதயத்தை ஆவிக்குரிய ரீதியில் ஒருமுகப்படுத்துங்கள், அதினிடத்தினின்று ஜீவ ஊற்று புறப்படும். (நீதிமொழிகள் 4:23)

- நம் வசதிக்கேற்ப வாழுங்கள் (நீதிமொழிகள் 21:20)- நிதிப்

பேரழிவுக்கு முக்கியக் காரணம் கடன் அடைக்க இயலாமை.

- கவனமாயிருங்கள் (நீதிமொழிகள் 27:23) - வாழ்க்கையின் எல்லா அம்சங்களிலும் ஒழுக்கம் முக்கியமானது. மனக்கிளர்ச்சியை எதிர்க்கவும், கட்டுப்பாட்டில் வைக்கவும்.

- கடினமான காலங்களுக்காக சேமிக்கவும் (நீதிமொழிகள் 6:6-11) - எதிர்பாராத பிரச்சனைகளுக்கு ஆதாரங்களை ஒதுக்கி வைக்க வேண்டும்.

- நேரத்தையும் வளங்களையும் புத்திசாலித் தனமாக முதலீடு செய்து ஆவிக்குரிய வாய்ப்புகளை முதலில் கவனியுங்கள் (நீதிமொழிகள் 21:5, பிரசங்கி11:2)-யூகங்களை தவிர்த்து எதிர்கால தேவைகளை கருத்தில் கொள்ளுங்கள்.

மத்தேயு 6:21ல், வாழ்வின் முக்கியக் கொள்கையை இயேசு கொடுத்துள்ளார், "உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்." நமது பொக்கிஷம் சொர்க்கத்தில் இருந்தால், நம் இருதயங்கள் மகிழ்ச்சி, அமைதி மற்றும் மனநிறைவால் நிரம்பி வழியும்

தனிச்சுற்றுக்கு மட்டும்

மேலும் தகவல் மற்றும் புத்தக தேவைகளுக்கு தொடர்பு :

